453

# குமரிமலர்

453

MADRAS
1944

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

# பாங்க் ஆப் ஹிந்துஸ்தான் லிமிடெட்

## 119, அரமனகார தெரு, சென்னை

கிளை ஆபீஸ்கள் :

பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கண்ணனூர், மதுரை, மங்களூர், திருச்சினப்பள்ளி, தெனாலி.

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 22,50,000
வெளியிடப் பெற்ற மூலதனம் ரூ. 18,00,000
செலுத்தப் பெற்ற மூலதனம் ரூ. 8,00,000

கரண்ட் டெபாசிட்டுக்கு தினசரி பாலன்ஸின் பேரில் $\frac{1}{4}$ % வட்டி

சேவிங்ஸ் பாங்க் டெபாசிட்டு $2\frac{1}{2}$ % வட்டி

பிக்ஸட் டெபாசிட்டுகளுக்கு நல்ல வட்டி கொடுக்கப்படும்.

பொருமானமுள்ள செக்யூரிட்டிகளின்பேரில் கடன் கொடுக்கப்படும். தலைமை ஆபிசிலும், கிளை ஆபிஸ்களிலும் எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

AR. ராமநாதன்
செக்ரட்டரி

# குமரி மலர்

## மாதம் ஒரு புத்தகம்

287

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

894·8114

கதீட்ரல் ரோடு போஸ்ட்
சென்னை
1944

031,6

# உள்ளுறை


பக்கம்

1. பாட்டு வளர்த்த பண்ணை - ஸ்ரீமதி நீலாவதி அம்மாள் ... 3
2. சேரி நிலை - பண்டித - ரத்தினம் ... 13
3. மகாதேவ தேசாய் - க. அருணாசலம் ... 15
4. புரட்சி - வ. அ. தியாகராஜன் ... 24
5. மனக்குரங்கு - கி. சரசுவதி அம்மாள் ... 30
6. எழுத்தாளரின் பசி - ஆர். வேங்கடராஜுலு ... 47
7. காசி யாத்திரை - சகோதரி சுபலக்ஷ்மியம்மாள் ... 57
8. இரு வேறுலகம் - எஸ். வேங்கடசுப்பிரமணியம் ... 70
9. காற்றும் இரசாயனமும் - சித்தன் ... 83
10. தான தருமம் - ஏ. கே. செட்டியார் ... 95



எல்லா உரிமைகளும்
பதிப்பாசிரியருக்கே



சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 MAR 1944
MADRAS

# பாட்டு வளர்த்த பண்ணை

ஸ்ரீமதி நீலாவதி அம்மாள்

ஒரு புத்தகம் ஒருவருடைய வாழ்க்கையில் பெரும் மாறுதலை உண்டாக்கிற்று என்றால் நம்பத்தோன்றுது; அதிலும், ஒரே ஒரு பாட்டுத்தான் அம்மாறுதலை உண்டாக்கிற்று என்றால் நம்பவே முடியாது. ஆனால் உண்மையில் என் வாழ்க்கையில் அப்படி நடந்தது. முத்தொள்ளாயிரம் என்ற நூலில் ஒரு பாடல் என்னுடைய வாழ்க்கையில் ஒரு பெரும் மாறுதலை உண்டாக்கியது என்று சொன்னால், பலர் வியப்படையலாம். ஆனால் உண்மையைச் சொல்வதில் தவறொன்றுமில்லை. சொல்வது அவசியமும்கூட.

முதலிலே சில விஷயங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். வாழ்க்கையின் போக்கை மாற்றிய அருமையான நூலைப் பற்றி எழுதும்போது, அதோடு ஒட்டிய வாழ்க்கைச் சம்பவங்களும் தெரியவந்தால் சிறப்பாயிருக்குமல்லவா ?

இலக்கிய உலகிற்கும் எனக்கும் வெகு தூரமாகவேயிருந்து வந்தது, நான்கு ஆண்டுகளுக்கு முன்வரை. வெகு தூரம் என்று சொன்னால் அதற்கு அளவேயில்லை. 'அப்பக்கம் தலை சாய்ப்பதுகூட இல்லை'யென்று சொல்வார்களே, அப்படித்தான்.

இருபது ஆண்டுகளுக்கு முன் பெண்கள் பள்ளிக்கூடம் போவதென்பது அபூர்வம். அதிலும் எங்களிடையே கோஷா முறையில்லாவிட்டாலும்கூட, அதற்கடுத்த நிலையில்தான்

பெண்கள் இருந்து வந்தார்கள். பள்ளிக்கூடம் இருந்த திக்கையே பெண்கள் எட்டியும் பார்ப்பதில்லை. நன்கு படித்து உத்தியோகம் பார்த்த ஆண்கள் மத்தியில்தான் இப்படி.

இந்த நிலையில் என் தாயார் என்னை ஒரு கிறிஸ்தவப் பள்ளிக்குத் தமிழ்ப் படிக்க அனுப்பியது பெரிய துணிவு தான். முற்போக்கான எண்ணமுள்ள என் தாயா ருக்கு என்னை நன்கு படிப்பிக்க வேண்டுமென்ற ஆசை அளவு கடந்து இருந்தது. எனவே, எதிர்ப்பையும் வசவு களையும் லட்சியம் பண்ணுமல் கல்வி கற்கச் செய்தார்கள். என் சுற்றத்தாரில் ஒருவராவது நான் பள்ளி செல்வதை விரும்பவில்லை. என் தாய்மொழி தெலுங்கானதால், தெலுங்குஒன்றுதான் வேண்டியதென்றும் இதரபாஷைகள் அனுவசியமென்றும், அதிலும் பெண்பிள்ளைக்குத் தேவையே யில்லையென்றும், என் பாட்டி சண்டை போடுவார். ஒரு சமூகத்தின் முழு எதிர்ப்பில், என் தாயார் ஒருவர் மட்டும் எத்தனை நாளைக்குச் சமாளிக்கமுடியும் ? விரைவில் என் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனல் இம் மட்டும் எனக்குக் கண் திறந்துவிட்டது எனது பெரும் பாக்கியந்தான். தமிழ் நாட்டில் வாழும் எனக்குத் தமிழ்க் கல்வி இல்லையானல், இன்று நான் ஒரு ஊமையாய்ச் செவி டாய்க் குருடியாய்த்தானே இருந்து தீரவேண்டும் ?

என் தாயார் தெலுங்கில் நல்ல பாண்டித்தியமுள்ளவர். ராமாயணம் பூராவும் தெலுங்கில் பாட்டுக்களாகவே பாடக் கேட்டிருக்கிறேன். ஆனல் தமிழ் தெரியாது. தமிழ் தெரிந்தவள் நான் ஒருத்திதான்.

பள்ளிக்கூடம் போவதை நிறுத்தியதிலிருந்து தெரு வாசற் படி தாண்டும் வேலையே கிடையாது. எனக்கு வீடே சிறை யாகிவிட்டது. ஆகவே, சில பெண்கள் சேர்ந்துகொண்டு

(தாயாருள்பட) மத்தியான வேளையில் என் படிப்பைச் சோதிப்பார்கள். அரிச்சந்திரன் கதை, நளமகாராஜன்கதை, கோவலன் கதை, அல்லி அரசாணிமாலை, சுந்தரி மாலை, தேசிங்குராஜன் கதை, மாரியம்மன் தாலாட்டு முதலிய புஸ் தகங்களைப் படிப்பேன். எல்லோரும் கேட்பார்கள். விளங் காவிட்டால் தெலுங்கில் சொல்லுவேன். இப்படியிருக்கும் போது நான் ஒரு கொடிய நோயில் அகப்பட்டுப் படுத்த படுக்கையாகி விட்டேன். ஓராண்டு சென்று சற்றுக் குண மான பின்னே, பொழுதுபோவது கஷ்டமாயிருந்தது. வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தக்கபடி நோய் முழுவதும் குண மாகவில்லை. நாள் முழுதும் சும்மா படுத்துக்கொண்டே யிருப்பதென்றால் எவ்வளவு கஷ்டமாயிருக்கும்? தகப்பனு ரிடம் ரொம்பவும் மரியாதை. துணிந்து ஒன்று கேட்கமாட் டேன். பொழுதுபோக ஏதாவது புத்தகம் இருந்தால் நல மென்று தாயாரிடம் சொன்னேன். மறுநாளே தந்தையார் இரண்டு புத்தகங்கள் வாங்கி வந்தார்கள். ஏதோ நாவ லென்று எண்ணிவிடாதீர்கள்! ஒன்று திருக்குறள் (உரை யுடன்). மற்றது பதினெண் சித்தர் பாடல். எனக்குப் புத்த கங்கள் வந்ததில் திருப்திதான். என் தாயாருக்கோ, இந்த 'வேதாந்த'ப் புத்தகங்களை இப்போதே குழந்தைக்கு கொடுப்பதாவது என்று ரொம்பவும் வருத்தம். 'தமிழில் வேறு புத்தகங்கள் என்ன இருக்கிறது? கண்ட நாவல்களை வாங்கிக் கொடுத்துக் குழந்தையின் மனத்தைக் கெடுப்பதை விட இப்புத்தகங்கள் எதிர்கால வாழ்வில் நல்ல பலனைக் கொடுக்கும் என்றுதான் வாங்கி வந்தேன். அது பின்னால் தெரியும்' என்று சொல்லிவிட்டார்கள் தந்தையார். (அந்த வார்த்தை வீண் போகவில்லையென்பதை இன்றும் நான் நன்குணர்வேன்.)

'இலக்கியங்கள் விளங்காத குப்பைகள்; மற்றப் புத்தகங் கள் தீய எண்ணங்களை உண்டாக்குவன' என்ற நிலையில்

தான் வெகுநாள் கழிந்தது. கலியாணம் ஆகும்வரை, சித்தர் பாடல், திருக்குறள், பிரபந்தம், பத்திரிகைகள் இவைகளைத்தான் நான் படித்து வந்தேன்.

சீர்திருத்த இயக்கத்தில் முதல் விஷயம் காதல் மணம். காதல் மணத்தின் வாடையே கிடையாதென்று கூறும் இலக்கியங்களை எப்படிப் போற்றுவது? திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் மட்டும், "நீங்கள் இலக்கியத் துறையிலே கொண்டிருக்கும் எண்ணம் சரியானதல்ல. நேர்வழியில் சென்று பார்த்தால், நிச்சயம் அதில் மனத்தைப் பறி கொடுப்பீர்கள். முதலில், காதலுக்கு இடமில்லை என்ற தவறுன கருத்தை விட்டுவிட்டு, கவியின் அற்புதத்திற்காகப் படியுங்கள். அப்புறம் அதில் பெண்ணுரிமை இருப்பது தெரியும், காதல் இருப்பது தெரியும், கடமை இருப்பது தெரியும். நமக்கு வேண்டிய எல்லாம் இருப்பது தெரியும்" என்று அடிக்கடி அறிவுறுத்திக் கொண்டேயிருந்தார்கள். அதன்பின் உண்மையறிய ஒன்றிரண்டு தடவை முயன்றேன்; என் மனம் திருப்தியடையும்படி ஏதும் நான் காண முடியவில்லை.

ஐந்து ஆண்டுகளுக்குமுன் பெங்களூரில் சைவ மகா நாடு நடைபெற்றது. நானும் போயிருந்தேன். பெண்கள் நூற்றைம்பது பேர் வந்திருந்தார்கள். அவர்களிடையில் நானும் இருந்தேன். சைவ சமயத்தின் சிறப்பைப்பற்றி ஓர் அன்பர் பேசிக்கொண்டிருந்தார். என்னருகிலிருந்த ஓர் அம்மாள் என்னைக் கூப்பிட்டு, "அவர் பேசுகிருரே, ராமர் இப்போது எங்கேயிருக்கிருர்?" என்று கேட்டார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. "ராமர் இங்கு ஏன் வருகிருர்?" என்றேன். "இங்கு ராமாயணம்தானே படிக்கிருர்கள்? (பேசுகிருர்கள்.) பின் ராமர் வராமல் என்ன செய்வார்?" என்ருர் அந்தம்மாள். "அப்படியா சமாசாரம்!" என்று

எனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு விஷயத்தைக் கொஞ்சம் தெரிவித்தேன். அந்தக்கூட்டத்தில் இனி தனக்கு வேலையில்லையென்று உடனே எழுந்து போய்விட்டார்கள். அந்த அம்மாள். விஷயம் அவ்வளவு தெளிவாய் விளங்கி யிருக்கிறதென்பதும், கூட்டம் என்றாலே ராமாயணத்தைத் தவிர வேறில்லையென்பதுந்தான் அவர்கள் சொல்வதற்கு அர்த்தம். நானும் சில சமயங்களில் இப்படி அகப்பட்டுக் கொண்டதுண்டு. அந்தம்மாள் உடனே எழுந்து போனார் கள்; நான் அது முடியாமல் தவித்தேன்; அவ்வளவுதான் வித்தியாசம். சிறந்த குருவைத் தேடி அலையும் சீடனைப் போல் என் நிலையும் இருந்து வந்தது.

(பண்ணைக்கும் பாட்டிற்கும் இவ்வளவு முன்னுரை வேண் டுமா என்று சிலர் கருதலாம். ஆனால், என் உள்ளத்தில் உள்ளதை இங்கு வெளியிடாமலிருக்க முடியவில்லை.)

கண் திறந்தது. நாங்கள் தியாகராய நகரில் இருந்த பொழுது ஒரு நாள் சகோதரர் கணேசன் வந்திருந்தார். சாப்பாட்டிற்குப் பின் ஒருநாள், "டி. கே. சி. அவர்களைப் பார்க்கப் போகிறேன். இங்கு (மாம்பலத்தில்) தான் இருக்கிறார்கள். தமிழ்ப் பித்தும், கலைப்பித்தும் நிரம்பிய வர்கள். உங்களுக்குத் தெரியுமோ?" என்று சாதாரண மாய்க் கேட்டார்கள். "ரொம்பத் தெரியாது. அவர்கள் தலைமையில் புதுவயலில் ஒருமுறை பேசியிருக்கிறேன். அவ்வளவுதான்" என்றேன். "அப்படியானால் நீங்களும் வாருங்கள். அவர்களோடு பழக வேண்டியது ரொம்ப அவ சியம். நாம் மூவரும் போகலாம்" என்றார். கணேசனும் என் துணைவரும் நானும் புறப்பட்டோம்.

கணேசன் எங்களை அறிமுகப்படுத்தினார். உடனே டி.கே.சி. அவர்களும் புதுவயல் செய்தியை ஞாபகப்படுத்தினார்கள்.

நின்றுகொண்டே சில நிமிஷம் பேசியபின், "அவசர வேலை ஒன்றுமில்லையே, கொஞ்சம் கழித்துப் பேகலாமா?" என்றார்கள் கணேசன். "தங்களைப் பார்க்கத்தான் வந்தோம். வேறு வேலையில்லை" என்றார். "மேலே முத்தொள்ளாயிரம் படிக்கிறோம். நண்பர்களெல்லாரும் இருக்கிறார்கள். நீங்களும் சற்று கேட்டுவிட்டுப் போகலாம். மேலே வாருங்களேன்" என்று கணேசன் அவர்களிடம் சொல்லிவிட்டு, எங்களைப்பார்த்து, "நீங்களும் வரலாம். வாருங்கள்" என்றார்கள். எனக்கு, ஏன் வந்தோம் என்றாகிவிட்டது. தட்டிச் சொல்லத் துணிவு இல்லை. அதிலும் மறைமுகமாயில்லாமல், நேருக்கு நேரே நிற்கும்போது எந்தச் சாக்குச் சொல்லி எப்படித் தப்புவது? எனவே, வேறு வழியின்றி, கொலைக்களத்திற்குச் செல்லும் குற்றவாளியைப்போல் அவர்கள் பின் தொடர்ந்து சென்றேன். மாடியில் பலர் இருந்தார்கள். எல்லோரும் எனக்குப் புதியவர்கள்.

டி. கே. சி அவர்கள் பாடம் சொல்லும் முறையே ஒரு தனி அழகு வாய்ந்தது. பாடம் சொல்லும்போது எத்தனை பேர் வந்தாலும் அவர்களுக்கு அன்று நடக்கும் பாடத்தைப் பற்றி முதலில் விளக்கிவிடுகிறார்கள். இதில் கொஞ்சங் கூடச் சோர்வடைவதில்லை. ஒருமுறைக்கு அடுத்த முறை பாட்டைச் சொல்வதிலுள்ள மெருகு பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். அதை நான் அன்று நன்றாய்ப் பார்த்தேன். நாங்கள் சென்று உட்கார்ந்ததும் முத்தொள்ளாயிரத்தைப்பற்றி எங்களுக்கு விளக்கினார்கள். சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே கவி பாடியிருப்பதாகச் சொன்னார்கள்.

கவிகளுக்கு ஒரு சாதாரண விஷயமும், மிக நுட்பமாகத் தென்பட்டு அதை அற்புதமான ரூபத்தில் அமைத்து நம்மை மகிழ்வுறச் செய்வது போலவே, டி. கே. சி. அவர்

களும் வாழ்க்கையில் உள்ள சாதாரண விஷயம் ஒன்றை எடுத்து விளக்கினார்களென்றால், அது ஓர் அபூர்வ சம்பவமாகி விடுகிறது. அதில் நம்மை யறியாமலே நாம் ஈடுபட்டு விடுகிறோம். இதை நன்கு தெரிந்துதான், சமீபத்தில் செட்டிமார் நாட்டிற்கு விஜயம் செய்த கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் "டி. கே. சி. ஏதோ மந்திர சக்தியால் உங்களை யெல்லாம் மயங்கவைத்து விட்டார்கள்" என்று சொன்னார்கள் வேடிக்கையாக.

அன்று நாங்கள் கேட்ட ஒரு பாட்டு:

வயது வந்த பெண்களுக்கு ஏதாவது வியாதி, மனவியாதியானாலும் சரியே, வந்தால், வீட்டிலுள்ளவர்கள் உடனே ஏதோ பேய் பிசாசு, வேப்பமரத்துக்கருப்பு பிடித்துக் கொண்டது என்று எண்ணி மாந்திரீக வேலைகளை விரைவாய்ச் செய்வார்கள். இது இன்றும் நடக்கும் சாதாரணமான ஒரு விஷயம். மனநோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு, அத்தகைய மாந்திரீகச் செய்கைகளைக் காணக்காண, ஆத்திரமும் வேதனையும் பன்மடங்கு அதிகமாகும். நோயறியாது செய்யும் நோன்புகளைக்கண்டு உள்ளம் நோவார்கள். இத்தகைய ஒரு காட்சியைத்தான் கவிஞர் வெகு அற்புதமாகக் கையாண்டிருக்கிறார். பாட்டு:

> காராட்டு உதிரம் தூஉய்,
> அன்னை களன் இழைத்து,
> நீராட்டி, நீங்கென்றால்
> நீங்குமோ?

நல்ல சமயத்தில் தோழியும் வருகிறாள். அப்புறம் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருப்பதை வெளியில் கொட்டவேண்டியதுதானே? அந்த ஒரு ஆறுதலாவது வேண்டாமா? "தோழி! என் தாயின் பைத்தியக்காரச் செய்கையைப்

பார்த்தாயா ? தரையை மெழுகிக் கோலமிட்டு விளக்கேற்றி வைத்து, என்னையும் குளிப்பாட்டி வைத்தால் நோய் நீங்குமா ? என் நோய்க்கு இதுவா மருந்து ? நோயறியாமல் பரிகாரம் பலமாய்ச் செய்கிறாள். இதனால் என் நோய் நீங்காதே " என்கிறாள் பெண். சில வைத்தியர்கள் நோயொன்றிருக்க அந்நோயறியாது மருந்தொன்று தந்து துன்பப்படுத்துவார்கள். அந்த வழியைச் சேர்ந்தவள் தான் தன் தாயும் என்பதை எவ்வளவு அழகாய்ப் பாட்டு காட்டுகிறது !

'நீங்கென்றால் நீங்குமோ !' என்ற ஒரு வரியில் எத்தனை இகழ்ச்சியும் ஏக்கமும் சித்திரமாக அமைந்திருக்கின்றன ? தாயின் செய்கையால் தன் வியாதி நீங்காது என்ற ஏளனத்தோடு இதயத்தின் ஏக்கமும் மலைபோலிருப்பது வெளிப்படுகிறது.

சரி, தாயின் சடங்குகளால்தான் நோய் குணமாக வழியில்லை. மற்றவர்கள் ஏதாவது செய்ய முயலலாமோ ? இல்லை. சாதாரணமாய்ப் பரிகாரங்களாலும், மருந்துகளினாலும் தீர்த்து விடலாம் என்று மக்கள் எண்ணக்கூடிய வியாதி அல்ல தன்னுடையது என்பதை வெகு அழுத்தமாய்க் கூறிவிடுகிறாள். அப்படிப்பட்ட வியாதிதான் என்ன ?

- போராட்டு
வென்று களங்கொண்ட
வெஞ்சின வேல்க்கோதைக்குஎன்
நெஞ்சு களங்கொண்ட
நோய் !

என் நெஞ்சைத் தின்னும் நோய்க்கு அக்கோதை (சேரன்) தான் மருந்து, வேறு மருந்தில்லை என்பது எவ்வளவு அழுத்தமாய் விழுந்திருக்கிறது. இரண்டாயிரம் வருடங்

களுக்கு முன்னேயும் மூடநம்பிக்கை இருந்துதானிருக்கிறது. அதன் அர்த்தமற்ற தன்மையைக் கவி கையாண்டிருக்கும் அற்புதம், உலகம் அழிந்தாலும் அழியாத உயிரோவியமாகக் காட்சி யளிக்கிறது.

பாட்டை இருமுறை பாடினார்கள். அவ்வளவுதான். என் மனம் காணாததைக் கண்டுவிட்டதைப்போல் ஒரே பரவசமாகிவிட்டது. இதென்ன, டி. கே. சி. அவர்கள் ஏதாவது வித்தை காட்டுகிறார்களா? இல்லை. புத்தகம் தொட்டால் உதிரும் என்ற நிலையில் கையில் வைத்திருக்கிறார்களே, அதுவும் பொய்யா? அந்த நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ? என்ற ஒன்றிலேதான் எத்தனை உணர்ச்சிகள் வெளியாகின்றன! அதற்கேற்றாற்போல், டி. கே. சி. அவர்கள் தாமே அப்பெண்ணாகி அவ்வரியை எத்தனை பாவத்தோடு சித்திரித்தார்கள்? ஆம்! அன்று என் கண்கள் திறக்காமல் இருக்க முடியுமா? கண்டேன் அன்று கவியில் காதலை.

இந்தப் பாட்டைக் கேட்ட பின், இலக்கியங்களில் மூட நம்பிக்கைகளே மலிந்திருக்கின்றன, உண்மையில்லை, அறிவிற்கு ஏற்க்கூடியது ஒன்றுமில்லை, காதல் இல்லை. கருத்து இல்லை என்பதை எப்படி ஒப்ப முடியும்? இலக்கியத்திலிருந்து வெகு தூரம் விலகியிருந்த என்னை அப்பாட்டு ஆட்கொண்டுவிட்டது. முத்தொள்ளாயிரத்தின் சிறந்த இப்பாட்டை என்று கேட்டேனோ அன்றிருந்தே இலக்கியப் பித்துப் பிடித்துவிட்டது. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் அறிவுறுத்தியபடி, அப்பாட்டில் காதல் மட்டுமா, எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன.

முத்தொள்ளாயிரத்தின் ஒரு பாட்டின் மூலமே, மாம்பலத்தில் நாங்கள் நடத்திய இலக்கியப்பண்ணை ஆரம்பமாயிற்று. இரண்டாயிரத்து எழுநூறு பாட்டுக்கள் உள்ள இந்த

நூலில் நமக்குக் கிடைத்திருப்பதென்னவோ மிக மிகச் சொற்பம். இதை எண்ணும்போது ஏற்படும் வருத்தம் அளவிட்டுரைக்க முடியாது. இப்படி நமது கலைச் செல்வங்கள் எத்தனை இந்தக் கதிக்கு ஆளாயினவோ ?

ஒரு பாட்டை எத்தனை முறை வேண்டுமானாலும் பாடிப் பாடி பரவச மடையலாம். இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னுள்ள பாட்டானாலும் இன்றைய நிலைக்கும் அது பொருத்தமாகவே யிருக்கிறது. ஆம்! உயிருள்ள கவிகள் என்றும் பொருத்தமும் பிரகாசமும் உள்ளவைகளே !

பாட்டை எத்தனைமுறை வேண்டுமானாலும் பார்க்கலாம்.

காராட்டு உதிரம் தூஉய்
அன்னை களன் இழைத்து
நீராட்டி நீங்கென்றால்
நீங்குமோ? - போராட்டு
வென்று களங்கொண்ட
வெஞ்சின வேல்க்கோதைக்(கு)என்
நெஞ்சு களங்கொண்ட
நோய்.

# சேரி நிலை

பண்டித - ரத்தினம்

ஊரின் புறத்தொரு மூலையிலே - நதி
ஓரத்தி லேவயற் காட்டுக்குள்ளே
நீரைக்கண் டோடிய பாம்பினங்கள் - எங்கும்
நின்றிரை தேடி நெளிந்திடவும்
ஆரும் பயப்படும் கள்ளிப்புதர்க் - குள்ளே
ஆன வழிசெல்லும் சேரியிலே
ஈரம் துளித்திளங் காற்றடிக்க - அசைந்
தீச்சை துடிக்க இருண்டிடுமே.

குட்டைத் தவளைகள் கூக்குரலால் - நரிக்
கூட்டங்கள் நண்டுகள் வேட்டையிட்டு
நெட்டைக் குரலினை நீட்டிடவும் - கண்டு
நெஞ்சம் கலங்கிச் சிறுவர்களும்
திட்டுத் திடுக்கிட்டுத் தாய்மடிக்குள் - வீழ்ந்து
தேம்பி அழுது திகைத்திடவே
பட்ட துயரங்கள் அத்தனையும் - சொல்லிப்
பாவி மனம்பதைத் தேங்குகின்றாள்.

காலை முதல்மறு காலைவரை - தொண்டை
கத்தி உழைத்துக் கலங்குகின்றார்
வேலை இருக்குது கூலியில்லை - இனி
வேறு பிழைக்க வகையறியார்

மேலும் பசியினுல் வாடுகின்ருர் - வெளி
மேவும் எலும்பொடுங் கூடுகின்ருர்
காலங் கடந்த பழக்கமென்றே - கதை
கட்டி வழங்கியும் காட்டுகின்ருர்.

உள்ளங் குளிரக்கள் ஊற்றிக்கொண்டார் - கையில்
உள்ளது முற்றும் தொலேத்துவிட்டார்
பிள்ளே மனேவி மறந்துவிட்டார் - சோற்றுப்
பிச்சையும் கேட்கத் துணிந்துவிட்டார்
கொள்ளேப் பிணிகளும் கூடிக்கொண்டே - அவர்
கூட்டத்தைக் கொன்றே அழித்திடுமால்
வள்ளல் தமிழகம் வாழ்ந்திடவே - வழி
மாற்றி அமைத்திடல் வேண்டுமன்ருே.

புண்ணிய நாட்டுப் பழம்புதல்வர் - இவர்
போல வருந்திஞேர் யாருமிலர்
கண்ணிய மான தமிழகத்தீர் - இதைக்
கண்டும் கருதாது செல்லுகின்றீர்
பண்ணிய வேலேப் பயன்தெரியும் - இந்தப்
பாக்கியம் என்று கிடைத்திடுமோ ?
எண்ணிய வாறு சுதந்திரமும் - கூட
இன்பமும் வந்து கலந்திடுமே.

# மகாதேவ தேசாய்

க. அருணாசலம்

**1938**-ம் ஆண்டில் தமிழ் நாட்டிலிருந்து சிலர் வர்தாவில் கிராமக் கைத்தொழில் பயின்றுகொண்டிருந்தோம். மகன்வாடியில்தான் பயிற்சிச்சாலை. அங்குள்ள காரியாலயத்தின் தாழ்வாரத்தில் எல்லாப் பத்திரிகைகளையும் போடுவார்கள். காலையிலிருந்து மாலைவரைக்கும் நல்ல உடலுழைப்பு இருக்கும். மாலை உணவுக்குப் பிறகு, பிரார்த்தனைக்கு முன் கொஞ்சநேரம் ஓய்வு. இந்தச் சமயத்தில் உலாவச் செல்லுகிறவர்கள் நண்பர்களுடன் உலாவப் போவார்கள். பத்திரிகை படிப்பதற்கும் இதுதான் ஒழிந்த நேரம். ஒருநாள் சாயங்காலம் நான் வாசல்பக்கத்தில் நின்றுகொண்டு 'சுதேசமித்திரன்' பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

அச்சமயம், வெகுதூரம் நடந்து களைத்த ஒருவர், கையில் மழைக்குரிய 'ஓவர் கோட்'டுடன் பக்கத்தில் நின்றார். தோளில் பாரமான பை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. தலையில் தொப்பி அணிந்திருந்தார். காலெல்லாம் சேறு படிந்திருந்தது. இவரை இதற்குமுன் பல தடவை பார்த்திருக்கிறேன்; ஆனால் சந்தித்துப் பேசியதில்லை. நின்றவர், நான் படித்துக்கொண்டிருந்த பத்திரிகையைப் பார்த்தார். பார்த்ததும், "நீங்கள் தமிழரா? எனக்குத் தமிழ் சொல்லிக்கொடுக்க முடியுமா?" என்று ஹிந்தியில் கேட்டார். எதிர்பாராது வந்த இக்கேள்வி என்னைத் திடுக்கிடச் செய்

தது. ஆனுலும் ஒன்றும் யோசிக்காமல், 'முடியும்' என்றேன். 'அப்படியானுல் நேரம்?' என்று ஒரு சிறிது யோசித்தார். "எனக்கு இந்த நேரம்தான் ஒழிவாக இருக்கிறது. சேவாகிராமத்திலிருந்து வந்ததும் அரைமணி நேரம் ஓய்வெடுப்பது வழக்கம். இந்த நேரத்தில் தமிழ் படிக்கலாமென நினைக்கிறேன். உங்களுக்குச் செளகரியமாயிருக்குமா?" என்று கேட்டார். 'செளகரியப் படுத்திக் கொள்கிறேன்' என்று சொல்லி அவரைத் தொடர்ந்து மாடிக்குச் சென்றேன். அவரது நூல் நிலையத்திலிருந்து, ராஜாஜி எழுதிய 'கண்ணன் காட்டிய வழி' என்னும் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்து காற்ரேட்டமான இடத்தில் உட்கார்ந்தார்.

"இந்தப் புத்தகத்தைப் படிக்கவேண்டும். எரவாடாச் சிறையில் நண்பர்களின் உதவிகொண்டு சில தமிழ் எழுத்துக்கள் கற்றேன். ஆனுல் எல்லாம் அனேகமாக மறந்துவிட்டேன். மறுபடியும் கற்றுக்கொள்ள ஆவலாயிருக்கிறது. ஆரம்பிக்கலாமா?"

சொல்லித்தரும் வித்தையை அக்காலத்தில் நான் பயின்றிருக்கவில்லை. எழுத்துக்கள்கூடச் சரியாகத் தெரியாத ஒருவருக்குக் 'கண்ணன் காட்டிய வழி'யைச் சொல்லித் தருவது எப்படி என்பது எனக்குப் புலனுகவில்லை, ஒரே கலக்கமாகிவிட்டது. அகத்தை முகம் காட்டுமே! எனது சங்கட நிலைமையை உணர்ந்துகொண்ட அவர், "நீங்கள் கவலைப்படவேண்டாம். எனக்குக் கீதையில் உள்ள சுலோகங்களும் அவைகளின் அர்த்தமும் தெரியும். தமிழில் உள்ளதைச் சரியான உச்சரிப்புடன் வாசிக்கக் கற்றுக்கொடுங்கள். ராஜாஜியின் விளக்கங்களுக்கு மட்டும் மொழிபெயர்த்துச் சொல்லுங்கள் அதுபோதும். நான் தெரிந்துகொள்வேன்" என்று சொன்னுர்.

சாதாரணப் பேச்சுக்கு வேண்டிய ஹிந்தி எனக்குத் தெரியும். அதைக்கொண்டு இவ்வளவு நேரம் சமாளித்தேன். இனி ராஜாஜியின் விளக்கங்களை ஹிந்தியில் மொழிபெயர்க்க வேண்டுமே என்று யோசிக்கும் போது, அதற்கும் பதில் அவரே சொல்லி விட்டார். " ஹிந்தியிலேயே சொல்லவேண்டுமென்பதில்லை. ஆங்கிலத்தில்கூடச் சொல்லலாம். அதுவும் கஷ்டமாயிருந்தால், எல்லாவற்றையும் கலந்தும் சொல்லலாம். எப்படியாவது எனக்கு விளங்கும்படி செய்தால் போதும் " என்றார்.

குரு வணக்கத்துடன், கண்ணன் காட்டிய வழியிலுள்ள குரு வணக்கத்தையே படிக்க ஆரம்பித்தோம். முதலில் நான் வாசிப்பேன், பின்தொடர்ந்து அவர் வாசிப்பார். அதே சமயத்தில் எழுத்துக்களையும் அவைகளின் ஒலிகளையும் கவனித்துக் கொண்டார். படித்ததை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேன். மகாதேவ தேசாய் ராஜாஜியிடமுள்ள அனுமான் பக்தியின் ரகசியத்தை எனக்கு எடுத்துக் காட்டினார். " இனத்தோடுதான் இனம் சேரும். ஒருவர் தம்மையொத்தவர்களுடன் தான் இணக்கம் வைத்துக்கொள்ள விரும்புகின்றனர். அனுமான் பேச்சில் வல்லவன். பேரறிஞன். அஞ்சா நெஞ்சமும் கொள்கையில் உறுதியும் உடையவன். இதே குணங்களையுடைய ராஜாஜி அனுமானைத் தனக்குக் குருவெனத் தெரிந்து வணக்கம் செலுத்துவதில் ஆச்சரியமொன்றுமில்லை " என்று சொல்லி முடித்தார்.

இதற்குள், குறிப்பிட்ட முப்பதுநிமிஷங்கள் ஆகிவிட்டபடியால் அன்றைய பாடத்தை அதனுடன் நிறுத்திவிட்டு விடைபெற்றுக் கொண்டேன்.

இரவெல்லாம் மகாதேவ தேசாய்க்குச் சீக்கிரத்தில் எப்படித் தமிழ் சொல்லிக் கொடுப்பது என்பதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். மறுநாள் நண்பர்கள் சில

ருக்கு எழுதிச் சில தமிழ்ப் புத்தகங்கள் வரவழைத்தேன். ஆனால் அவைகளில் சிலவற்றைக்கூட முற்றும் கற்றுக் கொள்ள அவருக்கு ஓய்வு கிடைக்கவில்லை.

"சென்ற மாதம் அவர்களுடைய (தமிழர்களுடைய) மொழியைக் கவனமாகப் படித்து வந்தேன். அதைப் படிக்கப் படிக்க அந்த மொழியிலுள்ள அழகு அதிகமாகத் தெரிகிறது. அது நயமிக்க அமிர்தம் போன்ற மொழி. தமிழர்களின் மத்தியில் பூர்வ காலத்திலும் இப்போதும் அறிஞரும் ஞானிகளும் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரிகிறது. இந்தியா முழுமையும் ஒரே நாடு என்னும் எண்ணம் வளர்ந்தோங்க வேண்டுமானால் சென்னை மாகாணத்திற்கு வெளியில் உள்ளவர்களும் தமிழ்மொழியைத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று காந்தியடிகள் பல ஆண்டுகளுக்கு முன் 'மாடர்ன் ரிவியூ' பத்திரிகையில் எழுதியதை எனக்கு ஞாபகப்படுத்துவார். தமிழ் கற்பதில் அவருக்கு அளவற்ற ஆவல் இருந்தது. அவருக்கிருந்த ஆசை எல்லாம் ராஜாஜி எழுதும் சிறு கதைகளை மூலத்திலேயே படித்து ரசிக்க வேண்டுமென்பதுதான்.

மகாதேவ தேசாய் குஜராத்தி இலக்கியத்தை நன்கு கற்றுணர்ந்தவர். வங்காளி பாஷையிலும் நல்ல தேர்ச்சியுண்டு. ரவீந்திரரின் கீதாஞ்சலியையும் வேறு சில புத்தகங்களையும் குஜராத்தியில் மொழிபெயர்த்திருக்கிறார். இவரது பரந்த அறிவை இவருடன் கண்ணன் காட்டிய வழியைப் படித்தபோது நான் அனுபவித்தேன். ஒரு சுலோகம் படிப்போம்: அதையொத்த கருத்துக்களை ஷேக்ஸ்பியரிலிருந்தும் காளிதாசனிலிருந்தும் கீதாஞ்சலியிலிருந்தும் எடுத்துக் காட்டுவார். அவருடைய அபார ஞாபகசக்தியை நினைத்து நினைத்து நான் வியப்படைந்ததுண்டு. தாம் கல்லூரியில் படித்த ஆங்கிலப் பாடல்களை

அப்படியே முழுதும் தட்டுத்தடங்கலின்றிச் சொல்லுவார். மகாதேவ தேசாய் தமிழ் படித்ததெல்லாம் மூன்று மாதந் தான். இக்காலத்தில் நான் அடைந்த லாபம்தான் அதிகம் என்று சொல்லவேண்டும். அவர் தம்மை மறந்து வெளி யிட்ட கருத்துக்கள் என்னை அப்படியே வேறு உலகத்துக் குக் கொண்டுபோய்விடும். என் வேலையை மறந்து அங்கேயே உட்கார்ந்துவிடுவேன். கடைசியில் அன்று தமிழில் இரண்டு வாக்கியங்கள் தான் மகாதேவ தேசாய் படித்திருப்பார்.

மகாதேவ தேசாய் கூர்ஜர நாட்டில் பிறந்தவர். செல்வம் மிக்க ஆமதாபாத் நகரத்தில் இவர் இளம் வயதிலேயே வக்கீல் வேலை தொடங்கினர். அதே சமயத்தில் தேசத்தில் ஒரு பெரும் கொந்தளிப்பு நடந்துகொண்டிருந்தது. தேச விடுதலைக்காகத் தலைவர்கள் கிளர்ச்சி செய்துகொண்டிருந் தார்கள். அன்னி பெசண்ட் அம்மையும் திலகரும் அச்சம யம் தலைமை தாங்கினின்றனர். இவரும் அதில் பங்குகொண் டார். நிர்வாகக் காரியதரிசியானர். ஹோம்ரூல் லீகின் காரியதரிசிகளாயிருந்தவர்கள் பலர் இப்போது 'சர்'களாக வும், 'பகதூர்'களாகவும் மாறி, ஏகாதிபத்தியத்தின் இரும்புத் தூண்களாக இருக்கின்றனர். ஆனல் தேசாயின் கதை வேறு. இவர் காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தொண்டு செய்ய விரும்பிச் சபர்மதிக் கரையில் காந்தியடிகளால் ஆரம்பிக்கப்பெற்று நடந்துவந்த சத்தி யாக்கிரக ஆசிரமத்தில் அங்கத்தினரானர். பல்கலைக் கழகங் களில் தாம் கற்ற கல்வியை மறந்து, உண்மையான அறி வுக் கல்வி பயின்றார். சமைப்பது, துணிமணிகளை வெளுப் பது, கக்கூஸ் சுத்தம் செய்வது முதலிய வேலைகளும் செய் தார். காந்தியடிகளின் அந்தரங்கக் காரியதரிசி பதவி கிட் டிற்று. உயிர் துறக்கும்வரை இவ்வேலையைச் சீரிய முறை யில் செய்துவந்தார்.

மகாதேவ தேசமாய் காந்தியடிகளின் நிழல்போல அவருட னேயே இருந்துவந்தார். காந்திஜி பேசும் ஒவ்வொரு பேச்சையும் குறித்துவைத்து ஒழுங்குபடுத்தி வெளியிட் டார். இவர் ஒரு 'பாஸ்வெல்' என்று தெரிந்தவர்கள் சொல்லுவார்கள். உயிருடன் இருந்திருந்தால் காந்தியடி களைப்பற்றிய விரிவான சரித்திரம் ஒன்று இவர் எழுதி யிருப்பார். அது ஜான்ஸனைப்பற்றி பாஸ்வெல் எழுதியதை விடப் பல வழிகளில் சிறந்ததாயிருந்திருக்கும்.

ஜான்ஸனுக்கு பாஸ்வெல் எப்படியோ அப்படியே காந்தி யடிகளுக்கு இவர் இருந்தார் என்று சொல்லுவதைவிட, ராமனுக்கு அனுமானைப்போல இருந்தார் என்பதே பொருத்தம். அனுமானின் தொண்டுள்ளமும் பளிங்கு மன மும் மகாதேவ தேசாய்க்கும் உண்டு. இவரது நெஞ்சம் இரக்கமுடையது. எவராவது படும் துயரைக் கண்டால் இவரால் சகிக்க முடியாது. காந்தியடிகளுக்கு ஏதா வது இடுக்கண் என்றால், இவரால் தாங்கவே முடி யாது. ஒரு காரியமும் இல்லாமல் காந்தியடிகளைப் பேட்டி காண விரும்புவர்களைக் கண்டால், இவர் மனம் புண்ணு கும். மகாத்மா உண்ணுவிரதம் ஆரம்பித்த ஒவ்வொரு சமயத்திலும் இவர் அவருடன் வாதாடுவது வழக்கமாம். ஆனால் வாதாடி காந்திஜியின் முடிவை மாற்ற முடியுமா?

ஆகாகானின் அரண்மனையிலிருந்து தம்மீது சாட்டிய குற்றங்களை நிரூபிக்குமாறு காந்தியடிகள் அரசப் பிரதி நிதியைக் கேட்டாரல்லவா? அதற்குப் பதில் ஒரு குறிப் பிட்ட காலத்திற்குள் எதிர்பார்க்கப்பட்டது. விரும்பிய பதில் கிடைக்காவிட்டால் உண்ணு விரதம் ஆரம்பிப்ப தென காந்திஜி முடிவு செய்திருந்தார். இந்தப் பதிலுக் காகத் தேசாய் சிறை வாசலில் காத்துக்கொண்டிருந்தார். எதிர்பார்த்ததற்கு மாறுகவே பதில் வந்தது. காந்தியடிகள்

உண்ணுவிரதம் ஆரம்பிப்பது திண்ணம் எனத் தேசாய் அறிந்தார். இதை அவரால் தாங்க முடியவில்லை. நெஞ் சடைத்தது. கீழே விழுந்தார். இதுதான் இவரது முடிவு. யாது செய்தும் மகாதேவரை இவ்வுலகிற்கு மீட்பதற் கில்லை.

மகாதேவ தேசாய் ஓயாத உழைப்பாளி. காந்திஜியின் வலது கைபோல் இருந்து வந்தார். காந்திஜி சேவாகிராமத்தில் வசிக்க ஆரம்பித்த காலத்தில் மகாதேவ தேசாய் வர்தா விலேதான் இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டு விட்டார். எனவே, ஒவ்வொரு நாளும் வர்தாவிலிருந்து சேவாகிராமம் சென்று தபாலைக் கவனித்துவிட்டு மறுபடி யும் திரும்பி வர வேண்டியதாயிற்று. இந்த ஐந்து மைல் தூரத்தையும் பல தடவை நடந்தே சென்றார். இந்த நேரத் தில் கீதையைப் பாராயணம் பண்ணிக்கொண்டே நடப் பார். காலையில் நான்கு மணிக்கு எழுந்தால் இரவு ஒரு மணி வரையும்கூட வேலை செய்துகொண்டேயிருப்பார்.

தமக்கிருந்த எல்லா வேலைகளிடையேயும் ஒவ்வொரு நாளும் ஐந்நூறு கஜம் நூல் நூற்பதென்னும் நியதியி லிருந்து என்றும் வழுவியதில்லை. பேச்சுரிமையற்ற ஊமை யராயும் செய்தொழிலற்று மிடிமையிலாழ்ந்த பிணியாள ராயும் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்காக ஆற் றும் தொண்டு என்றே இவ்வேலையைச் சிரத்தையுடன் செய்துவந்தார். ராட்டையின் முன் அமர்ந்து இவர் நூற்கும் காட்சியே கண்களுக்கு ஓர் விருந்து. எந்த வேலை யையும் இவர் முழு மனதுடன் செய்வார். ஒவ்வொன்றி லும் கலையுணர்ச்சி ததும்பும். பேனாவை எவ்வளவு சாமர்த் தியமாக ஓட்டினாரோ அதைவிடப் பன்மடங்கு திறமை யுடன் இவர் தம் இராட்டினத்தைச் சுழற்றினார்.

மனத்தினிலே ஒளி யுண்டானால் வாக்கினிலே ஒளியுண்டாகும். மகாதேவ் எழுத்தாளர்களுக்கு ஓர் இலக்கு. தம் தாய் மொழியான குஜராத்தியில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும், போற்றற்குரிய எளிய நடையைக் கையாண்டார். இவரது பேச்சும் ஆணித்தரமாயிருக்கும். பேச ஆரம்பித்தால் உள்ளம் கசிந்து உருகுவதுபோல் இருக்கும். கேட்போரது கல் மனமும் கரைந்துவிடும். இவர்தம் திறமையெல்லாம் அன்பு வழியை அனைவருக்கும் காட்டவே உபயோகப்பட்டது.

சத்திய தரிசனத்திற்காக இவர் மகத்தான தியாகங்களைச் செய்திருக்கிறார். ஆனால் அவை தியாகங்கள் என்று இவர் எப்போதும் சொல்வதில்லை. அவைகளெல்லாம் சுதந்திரம் விரும்பும் ஆண்மகன் ஒவ்வொருவனும் செய்யவேண்டியவை என்பது இவரது கோட்பாடு. அடக்கமும் அமைதியும் நிறைந்த லக்ஷ்ய வாழ்க்கை வாழ்ந்தார். உள்ளம் நினைத்ததைப் பேசினார். பேசியதைச் செய்தார். இவருக்கு ஒரே புதல்வன்; இப்போது வயது இருபது இருக்கும். சுதந்திர புருஷர்களை உண்டாக்கும் கல்விச்சாலைகள் ஏற்படும்வரை, பெற்றோரே தம் பிள்ளைகளின் கல்விக்குப் பொறுப்பாயிருக்கவேண்டுமென்பது தேசாயின் எண்ணம். புதல்வர் நாராயண தேசாயும் தம் தந்தையுடனிருந்தே அனைத்தையும் கற்றார். ஹரிஜன் பத்திரிகைக்குத் தம் தந்தை எழுதியதை டைப் அடிப்பதிலும் தந்தையின் சார்பாகக் கடிதங்கள் எழுதுவதிலும் ஈடுபட்டு ஒருவாறு எழுத்துக் கலையிலும் பயிற்சி பெற்றார். தந்தையாருடன் சுதேச மன்னர்களின் நாடுகளுக்குச் சென்று அரசியல் நுணுக்கங்களை ஓரளவு அறிந்தார். புத்தக அறிவைவிடத் தன்னறிவும் கடவுளறிவும் பெரிதென மதித்த மகாதேவர் தம் புதல்வருக்கும் தம் வாழ்க்கையின் மூலம் அவ்வறிவையும் ஊட்டியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அஹிம்சைத் தொண்டர்களின் முன்னணியில் இருந்த மகாதேவ தேசாய் இன்று நம்மிடையில் இல்லை. ஆனால் அவர் எழுதிய எழுத்துக்கள் நமக்கும் எதிர்கால மக்களுக்கும் கலங்கரை விளக்கம்போல் இருந்து வழி காட்டும். அவர் சொல்லியுள்ள பர்தோலிக் கதையைப் படித்தால் கல்நெஞ்சனும் கண்ணீர் விடுவான். மிருகபலத்தை மேலென நம்பியவனும் அன்பின் பலத்தை எளிதில் உணருவான்.

உயிர் போமளவும் மகாதேவ தேசாய் செய்த சேவை, அன்பிற்கும் சத்தியத்திற்குமே செய்த சேவையாகும்.

# புரட்சி

வ. அ. தியாகராஜன்

ஜூலியஸ் ஸீஸர் இறப்பதற்கு முன் ஆகாயத்தில் பலவித உற்பாதங்கள் ஏற்பட்டன. இவைகளைக் கண்டு எல்லோரும் அஞ்சினார்கள். ஆனால் ஒருவன் மாத்திரம் அஞ்சவில்லை. "நல்ல மனிதர்கள் உற்பாதங்களைக் கண்டு ஏன் அஞ்சவேண்டும்?" என்றான். இவன்தான் காஷியஸ்.

இப்படிப்பட்ட மனிதர்கள் ஒவ்வொரு நாகரிகத்திலும் இருக்கிறார்கள். உலகமெல்லாம் தலைகீழாய்ப் போவதைப் பார்ப்பதிலும், அப்படிப் போக ஒத்தாசை செய்வதிலும் இவர்களுக்கு ஒரு திருப்தி. சமுத்திரத்தில் புயல் காற்று அடிக்கும்போது, அமைதியா யிருக்கும் சமுத்திரத்தின் அடியே அசையுமல்லவா? அப்போது அடியிலிருக்கும் மீன்கள் மேலே வரும். பெரிய மீன்களைப் பிடிக்க விரும்புகிறவன் அப்போது அவைகளைச் சுலபமாய்ப் பிடித்துவிடலாம். ஆனால் அவன் திரும்பி வருவது கஷ்டம். இதுபோலவே, புரட்சிக்காரர்கள் புரட்சியைக் கிளப்பி விட்டு விடலாம். ஆனால், புரட்சி என்னும் புயல்காற்றின்மேல் இவர்கள் சவாரி செய்து வெற்றிகரமாய் வந்து சேருவார்களென்று யார் சொல்லமுடியும்?

மனித சமூகத்தில் புரட்சிகள் ஏன் ஏற்படுகின்றன என்பதையும், அவற்றால் உண்டாகும் பயன்களையும் கெடுதிகளையும் முதலில் கவனிப்போம். பிறகு புரட்சிகள் வரவொட்

டாமல் தடுக்கவேண்டுமா என்பதையும் கவனிப்போம். பர்க் என்னும் ஆங்கிலேய அரசியல்வாதி, பொதுமக்களுக்குப் புரட்சியில் அதிக விருப்பமில்லை என்று கூறுகிறான். புரட்சியால் எல்லாரும் கஷ்டப்படுகிறார்கள். புரட்சியால் அவர்கள் இழப்பது அதிகம், அடையும் பயன் கொஞ்சம். அதனால் அவர்கள் புரட்சியை விரும்புவதில்லை. எல்லாரும் அமைதியையே தேடுகிறார்கள். ஆனால், அரசாங்கம் சரியான முறையில் போகாவிட்டால், பொது ஜனங்கள் முதலில் முணுமுணுக்கிறார்கள். பிறகு புரட்சியைக் கிளப்பி விட்டு விடுகிறார்கள். புரட்சிகள் ஜனங்களால் ஏற்படுவனவல்ல. அரசாங்கம் தன் கடமையைச் சரியாய்ச் செய்யாததால் ஏற்படுகின்றனவென்று தெரிகிறது. ஒவ்வொரு இடத்துக்கும் சில உரிமைகளும் சில கட்டுப்பாடுகளும் உண்டு. பொதுவாக அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்பது ஜனங்களுடைய கடமை என்றும் ஜனங்களைக் காப்பாற்றுவது அரசாங்கத்தின் கடமை என்றும் சொல்லலாம். ஆனால் அரசாங்கத்தை நடத்திவருபவர்கள் தங்கள் வேலைக்குரிய பணத்தை மாத்திரம் வாங்கிக்கொண்டு தங்கள் வேலையைச் சரியாய்ச் செய்யாவிட்டால் அரசாங்கம் எப்படி நடக்கும்? பொதுஜனங்கள் அரசாங்கத்தின் காமதேனு. இவர்கள் செலுத்தும் தீர்வையால் அரசாங்கம் நடக்கிறது. தீர்வையெல்லாம் ஜனங்கள் கட்டவேண்டியது. வந்த பணத்தை இஷ்டப்படி இறைத்துவிட்டால் அரசாங்கம் எப்படிச் செம்மையாய் நடக்கும்? பிரான்சில் உண்டான புரட்சிக்கும் ருஷ்யாவில் உண்டான புரட்சிக்கும் என்ன காரணம்? கொடுப்பதெல்லாம் ஒருவர் பக்கம், வாங்கிக்கொள்வதெல்லாம் மற்றொருபக்கம் என்னும் விதியால் விளைந்த பஞ்சந்தான் காரணம். "தலையானால் நான் ஜெயித்தேன்; பூவானால் நீ தோற்றாய்" என்னும் இரட்டை விதியின் பயன் இதுவே. சரித்திரம் தர்க்கசாஸ்திர விதிகளை அனுபவத்தின் மூலமாகத் தோற்றுவிக்கின்றதென்று ஓர் ஆங்கில அறிஞன்

கூறுகிறுன். சரித்திரத்தின் அனுபவம் கூறுவதென்ன வென்ருல், எப்படி ஒருவன் கால்பந்து விளையாட்டில், பந்து தன்னிடம் வரவேண்டுமானுல் மற்றவன் பக்கமாக அதை உதைக்கிருனே அதுபோல, அரசாங்க முறைகளிலும் நமக்குத் திரும்பிவரும் எதிரொலி எப்படிப்பட்டதென்று கவனிக்கவேண்டும்.

ஒரு புழு எவ்வளவு அற்ப ஐந்துவாயிருந்தாலும்கூட, அதனை ஒருவன் அதிகமாக மிதித்து விடுவானுனுல், அது கடிக்கவே முயலுகிறது. அதுபோல, தனி மனிதனுடைய உரிமைகளை மிதித்து அதனுல் கஷ்டத்தை விளைத்துக் கொண்டு ஓர் அரசாங்கம் இருக்குமானுல் அது எப்படி நீடித்திருக்க முடியும்? சாதாரண ஜனங்கள் எல்லோருமே சாதுக்கள் என்று சொல்ல நான் முன்வரவில்லை. தனி மனிதனிடத்தில் எவ்வளவோ கொடிய குணங்கள் இருக்கின்றன. இவைகளை ஒரு நாட்டுக்கு வெளியே உள்ளவர்கள் மேலேயோ அல்லது ஒரு நாட்டுக்குள்ளே வேண்டாதவர்கள் மேலேயோ கொஞ்ச காலம் திருப்பிவிடலாம். இதனுல் அரசாங்கத்தார் கொஞ்சம் பயனையும் அடையலாம். ஆனுல் இது ஒரு துஷ்ட தேவதையை ஏவல் விடுவது போல் ஆகும். இது பலிக்காவிட்டால், தன்னை ஏவினவர்களையே அழித்து விடுமாம். பிரான்சில் உண்டான புரட்சி பஞ்சத்தினுல் ஏற்பட்டது. ருஷ்யாவில் உண்டான புரட்சி வெளிநாட்டிலடைந்த தோல்வியால் ஏற்பட்டது. எந்த அரசாங்கம் தன் வேலையைச் சரியாய்ச் செய்யாமல் இருக்கிறதோ அது தனக்கு உள்ளேயும் வெளியேயும் பகைவர்களை உண்டாக்கிக்கொண்டு, அவர்களால் நசுக்கப்படுகிறது. இந்துதேச சரித்திரத்தில் முகம்மதிய அரசாங்கத்தின் கடைசி நாட்களும் இந்த விதியை நிரூபிக்கின்றன. ஸ்பெயின் தேசத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்கும் இதுவே காரணம்.

புரட்சியைச் சரித்திர மூலமாய்ப் பார்த்தோம். இப்போது தத்துவ மூலமாய்ப் பார்ப்போம். நீட்சே என்னும் ஜெர்மானிய அறிஞன் 'துன்ப முடிவுடைய நாடகத்தின் தோற்றம்' என்னும் புத்தகத்தில் பின்வருமாறு கூறுகிருன்: "மனித வாழ்க்கை துன்ப முடிவுடைய ஒரு நாடகத்தைப் போன்றது. இதில் அழிக்கும் சக்தியும் இருக்கிறது, பாதுகாக்கும் சக்தியும் இருக்கிறது. அழிக்கும் சக்தியைக் கொண்டு பாதுகாக்கும் சக்தியை வளர்க்கவேண்டும். அப்போதுதான் இருட்டிலிருந்து வெளிச்சமும் புரட்சியிலிருந்து அமைதியும் ஏற்படும்." இதுதான் இந்துதேச ஞானிகளும் சொல்வதும். ஒருபுறம் கண்ணனுடைய குழலோசை; மற்ருெருபுறம் குருக்ஷேத்திரப் போர். ஒருபுறம் இனிமை; மற்ருெருபுறம் கோர நாட்டியம். இவ்விரண்டிலும் ஒரே ஆன்மா. குருக்ஷேத்திரத்தைப் பதரிவனமாக்குவதே இந்தக் கோர தாண்டவத்தின் பொருள்.

ஒரு நாட்டில் புரட்சிக்காரர் சிலராகவும், பழைய காலத்து வாழ்க்கையைப் பெருமையாகக் கொண்டாடுபவர் சிலராகவும், நிகழ்கால வாழ்க்கையில் திருப்தியடைந்தோர் பலராகவும் இருந்தால், அந்த நாட்டில் அரசியல் சரியாய் நடைபெறும் என்று அர்னஸ்ட் பார்க்கள் என்னும் ஆங்கில அரசியல் நிபுணர் ஒரு சொற்பொழிவில் சொன்னுர். பொதுவாக மக்கள் அமைதியாய் இருக்கவேண்டுமானுல், அரசாங்கம் தன்னுடைய வேலைக்காரர்களை அதிக ஜாக்கிரதையாய்க் கவனித்து வரவேண்டும். எப்படி ஒரு தோட்டக்காரன் தோட்டத்தில் களை வளராமல் பார்த்துக்கொள்கிருனே அப்படியே அரசாங்கமும் தன்னிடம் வேலை செய்பவர்களிடையே தவறுகள் உண்டாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

சாதாரணமாக, விரோதிகளில்லாமற் போனுல் மனிதன் தன் வேலையைச் சரியாய்ச் செய்வதில்லை. அதனுல்

புரட்சிக்காரர்கள் பொதுவாக அரசாங்கத்துக்கு எதிர்த்து நின்றாலும், அரசாங்கத்திலுள்ள தவறுகளை எடுத்துக் காட்டுவதில் நிபுணர்களா யிருப்பதால், அவர்கள் அரசாங்கம் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்கிறார்கள். பாற் கடலைக் கடைந்தபோது தேவர்களும் அரக்கர்களும் எதிர் நின்றார்கள். இதுபோலவே மனித வாழ்க்கையிலும் அரசாங்கத்தாரும் புரட்சிக்காரரும் எதிர் நிற்பதாலேயே நன்மையும் தீமையும் விளைகின்றன. புரட்சிக்காரர்கள் பலப்பட்டால் அமைதி இல்லாமல் போகிறது; புயல் காற்றில் அகப்பட்ட கப்பலைப்போல் அரசாங்கம் தத்தளிக்கிறது. விரோதிகள் இல்லாவிட்டால், காற்று வீசாமல் அமைதியில் அகப்பட்டுக்கொண்டு முன்னே போக முடியாத கப்பலைப்போல், அரசாங்கம் நின்ற இடத்தில் நின்று விடுகிறது. புரட்சிக்காரர்கள் முன்னேறினால் எல்லாக் கட்டுப்பாடுகளும் பறிக்கப்பட்டு நீதி என்பதே போய்விடுகிறது. நியாயம் அநியாயமாகவும், அநியாயம் நியாயமாகவும் மாறி விடுகிறது. ஆனால் புரட்சிக்காரர்கள் இல்லாத நாட்டில் அதிகாரம் மதம் பிடித்த யானையைப்போல் அளவுக்கு மிஞ்சிப் போய்விடுகிறது. "நம்முடைய சுகங்களில் முக்கால் பாகம் கஷ்டமாகவே இருக்கட்டும். இவைதான் நம்மைத் தேக்கவைக்காமல் முன்னே போகச்செய்கின்றன" என்றான் ஆங்கிலக் கவி ப்ரௌனிங். அரசாங்கத்தின் முன்னேற்றத்தைப் புரட்சிக்காரரும், புரட்சிக்காரரின் முன்னேற்றத்தை அரசாங்கமும் தேடுவது இயற்கையின் விதி. புரட்சியினால் உண்டாகும் தீமைகள் பல. ஆனால் சில நன்மைகளும் உண்டாகின்றன. சிவன் அழிக்கும் தெய்வம். சிவனை யார் வழிபடுகிறார்கள்? ஜனங்கள் தங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று விஷ்ணுவை வழிபடுகிறார்கள். ஆனால் சிவன் அழிப்பது எதை? காமத்தை. எது அழிக்கப்பட வேண்டுமோ, எது தீமையோ, அதுவே அழிபடுகிறது. அதனால் ஒவ்வொரு புரட்சிக்கப்பாலும் ஓர் அமைதி

ஏற்படுகிறது. "வாழ்க புரட்சி" என்று கூவுகிருர்கள். புரட்சி எப்படி வாழமுடியும்? புரட்சி புரண்டுகொண்டே தானே போக வேண்டும்? புரட்சிக்காரன் பிறருடைய புரட்சியைத் தேடுகிருனேயொழிய தன்னுடைய புரட்சியைத் தானே தேடுவதில்லை. இதனுல் என்ன தெரிய வருகிறதென்ருல், புரட்சிக்காரர்கள் கூட அமைதியையே தேடுகிருர்கள் என்பதுதான். ஆனுல் ஓர் அரசாங்கம், "நமக்குப்பின் பிரளயம்" என்று சொல்லிவிட்டுப் பொது நலத்தைத் தேடாமலிருக்குமாளுல் அதற்குப் பின்வரும் புரட்சியின்வேகம் அதிகமாகவே இருக்கும். நாம் புரட்சியில் அமைதியையும், அமைதியில் புரட்சியையும் தேடவேண்டும். எப்படி வேகமாய்ச் சுற்றுகின்ற ஒரு பம்பரம் தூங்குவதைப்போல் தோன்றுகிறதோ அப்படியே, ஆழ்ந்த அமைதி, மாற்றத்தின் விதியை ஒட்டியே நிற்கிறது.

ருக் வேதத்தில் ஒரு மந்திரம் இருக்கிறது. "வாழ்க்கைப் போரில் கடவுளின் கருணையால் நாம் நம்முடைய கருமங்களைச் சரியாய்ச் செய்து முடிப்போமாக." யஜுர் வேதத்தில் மற்ருெரு மந்திரம் இருக்கிறது. "இயற்கையிலும், தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் சாந்தம் ஏற்படுமாக. அப்படிப்பட்ட சாந்தம் எனக்கும் ஏற்படுமாக!" இவ்விரண்டு மந்திரங்களிலும் ஒன்றின் பொருள் மற்ருென்ருல் வெளிப்படுத்தப்படுகிறது. கஷ்டப்பட்டுச் செய்யும் வேலையிலேயே சாந்தி இருக்கிறது. இதுதான் புரட்சி.

# மனக் குரங்கு

கி. சரசுவதி அம்மாள்

ராமச்சந்திரன் கையில் கடிதம் இருந்தது. அதைப் படித்து வரும்போது அவனுடைய முகத்தில் கொஞ்சங் கொஞ்சமாகப் பயத்தின் அறிகுறியும் கவலையின் நிழலும் படர்ந்தன. படர்ந்தபின் அவை மீண்டும் கலையத் தொடங்கி, கடிதத்தை முடித்து, அவன் ஒரு பெருமூச்சு விட்டபொழுது, பெரும் புயல் அடித்து ஓய்ந்ததுபோலாயிற்று அவன் மனம்.

அவன் தாய் எழுதியிருந்த கடிதம் அது. அதில் அவன் தமக்கை சாவித்திரி தவறிக் கிணற்றில் விழுந்துவிட்டாளென்றும், அகஸ்மாத்தாக அவர்கள் வீட்டிற்கு வந்திருந்த அவன் மாமா கிணற்றில் குதித்து அவளைக் காப்பாற்றினரென்றும் கடிதம் சொல்லியது. விஷயம் சுருக்கமாக இருந்தாலும், ஒரு பெரும் புயலைக் கிளப்புவதற்கு அது போதுமானதாக இருந்தது.

ராமச்சந்திரன் பெருமூச்சு விட்டபோது அவனுக்கு இருந்ததெல்லாம் ஒரே ஓர் உணர்ச்சிதான். "இந்த மட்டும் சாவித்திரி பிழைத்தாளே, பிழைக்கும்படி பகவான் அருள் செய்தாரே!" என்று கடவுளிடத்தில் நன்றியறிவு ஏற்பட்டது.

தன் மனத்துக்குள் அந்த விபத்தை அவன் கற்பனை செய்துகொண்டிருந்தான். மனம்ஒருவாறு சமாதானம் அடைந்திருந்தாலும் கடிதம் முதலில் ஒரு கலக்குக் கலக்கிவிட்டதல்

லவா? அதன் விளைவு இன்னும் முற்றும் நீங்கினபாடில்லை. அப்போது சிவராமன் வந்து அவன் மன எழுச்சிகளை முற்றும் வேறு வழியில் திருப்பிவிட்டான். சிவராமன் ராமச்சந்திரனோடு பி. ஏ. வகுப்பில் படிப்பவன். ஹாஸ்டலில் இருவரும் ஒரே அறையில் இருப்பவர்கள். மனோதத்துவ சாஸ்திரத்தில் நிபுணனென்று சிவராமன் சொல்லிக்கொள்வான்; ராமச்சந்திரன்போன்ற நண்பர்களும் அதை ஆமோதிப்பார்கள். அவனோடு சேர்ந்து இவ்விஷயங்களை விவாதிக்க ராமச்சந்திரனுக்கு ஆசை அதிகம். அவனுக்கும் சொந்தத்தில் கொஞ்சம் கற்பனைசக்தி உண்டு. இப்போது கடித சமாசாரம் தெரியவுமே சிவராமன், "சாவித்திரி தவறி விழுந்தாளென்று நிச்சயமாகத் தெரியுமா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டான். பலத்த சந்தேகம் ராமச்சந்திரன் மனத்தில் கிளம்பிவிட்டது. "பின் எதுவாயிருக்கும்?" என்கிற சர்ச்சையில் அவன் மனம் அலைபாயத் தொடங்கிவிட்டது. "தவறி விழுவதானால், கிணற்றின் கைப்பிடிச்சுவர் மிகவும் தாழ்வாக இருக்கவேண்டுமே" என்றான் சிவராமன்.

"அதுதான் இல்லை, சுவர் உயரம் மார்புமட்டுமாவது இருக்கும்; அதற்குக் குறையாது."

"அப்படியானால் தவறி எப்படி விழுகிறது!"

"தண்ணீர் எடுக்கக் கிணற்றண்டை போனவள் மயக்கம் போட்டு விழுந்துவிட்டாளாம். 'ஹிஸ்டீரியா' என்று டாக்டர் சொல்லுவதாக அம்மா எழுதியிருக்கிறாள்."

'ஹிஸ்டீரியா' வியாதி உள்ளவர்கள் உயிருக்கு ஆபத்து வரக்கூடியது எதுவும் செய்யமாட்டார்களென்று சிவராமன் என்ன சொல்லுகிறது? ராமச்சந்திரன் 'முதல் உதவி'க்காக வைத்திருக்கிற சிறு வைத்தியப் புத்தகத்தில்கூடப் படித்திருக்கிறான். பலவீனத்தினால் மயக்கம் போட்டு

விழுந்தால் கிணற்றுக்கு வெளியேதான் விழ நியாயம் உண்டு. இடுப்பளவு கைப்பிடிச் சுவருள்ள கிணற்றுக்குள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாலொழிய அதற்குள்ளே விழ இடமில்லையே! - இப்படி ஒவ்வொன்றாகக் காரணங்களையும், சந்தர்ப்பங்களையும், அவர்கள் எடுத்துச் சொல்லி விவாதித்து, ஒவ்வொன்றாக விலக்கினார்கள்.

"சாவித்திரி சந்தோஷமாகத்தானே இருந்தாள்!" என்று நடுவில் சிவராமன் ஒரு கேள்வியைப் போட்டான். அந்தக் கேள்வி எதற்காக? அவன் என்ன நினைக்கிறான்? ஒருகால் சாவித்திரி தற்கொலை செய்துகொள்ள நினைத்தாளென்று அவனுடைய ஊகம் செல்லுகிறதோ! ராமச்சந்திரன் ஹிருதயம் ஒரு நிமிஷம் அடித்துக்கொள்வதே நின்றது. மறுநிமிஷம் அவ்வளவுக்கவ்வளவு வேகமாய் அடித்துக் கொண்டு உடம்பு முழுதும் குபீரென்று வியர்வை ஆறாகக் கொட்டிவிட்டது.

"சீசீ, அதற்குக் காரணம் வேண்டாமா? என்ன, கண்ட படி பிதற்றுகிறோமே!" என்று தன்னையும் சேர்த்துச் சொல்லிக் கொள்வதுபோல, சிவராமனைக் கடிந்துகொண்டான்.

சிவராமனும், இம்மாதிரியான சந்தேகங்களைக் கிளப்பும் படியாகத் தான் பேசியது பிசகென்று உணர்ந்து பேச்சை மாற்றிக்கொண்டான். ஆனால், மனிதனுடைய மனம் அப்படி லேசில் அடங்கிவிடக் கூடியதா? ஒரு சிறு துரும்பை ஆதாரமாகக்கொண்டு அது செய்கிற வேலைதான் எவ்வளவு? பிறகு தனிமையிலிருந்த நேரமெல்லாம் ராமச்சந்திரன் அதைப்பற்றியே எண்ணித் தவிக்கலானான்.

சாவித்திரியும் அவள் கணவனும் ஒற்றுமையாகவும் இன்பமாகவும் வாழ்ந்தார்களா? இந்தக் கேள்வி இதுவரையும்

அவன் மனத்திலே எழுவதற்குக் கடுகளவுகூட இடமில்லை. வீட்டில் அவள் அம்மாவோ அண்ணுவோ அந்தமாதிரிச் சந்தேகங்கொள்ள இடமே ஏற்படவில்லையென்பது நிச்சயம். இதை ராமச்சந்திரன் நன்கு அறிவான்.

கணவன் நல்ல இளமையில், எடுத்ததும் முந்நூறு ரூபாய் சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகத்தில் ஸிம்லாவில் இருக்கிறுனென்ருல், அங்கே சந்தோஷக் குறைவை யார் தான் எதிர்பார்ப்பார்கள்? அதுவும், சாவித்திரியின் முழுச் சம்மதத்தின் பேரிலேயே அவளுக்கு விவாகம் நடந்தது. அப்போது அவள் அறியாச் சிறுபெண்ணல்ல. அவளுக்குப் பதினெட்டு வயது நடந்துகொண்டிருந்தது.

தந்தை உயிரோடு இருந்தவரையும் அவர் தம் பெண் கல்யாணத்தைப்பற்றிச் சிந்திக்கவே இல்லை. சென்னைப் பெண்கள் கலாசாலையில் அவளைச் சேர்த்துப் படிக்க விடவேண்டுமென்பதுதான் அவர் விருப்பம். இது விஷயத்தில் அவருக்கும் அவர் மனைவிக்கும் பலத்த அபிப்பிராய பேதம் ஏற்பட்டதால் அது நிறைவேருமலே இருந்தது. தனியாக வெளியூரில் வயசு வந்த பெண்ணை விடுவதற்கு அவள் சம்மதிக்கவில்லை. 'ஸ்கூல் பைனல்' பரீக்ஷை கொடுத்துவிட்டுச் சாவித்திரி வீட்டிலேயே இருந்தாள். திடீரென்று தந்தை இறந்துபோகவே, பிறகு ஒரு நிமிஷமும் பெண்ணைக் கல்யாணமில்லாமல் வைத்துக்கொள்ளத் தாய் சம்மதிக்கவில்லை.

சாவித்திரியின் அதிருஷ்டம் நல்லவனுய்க் கிடைத்தான். அதில் அவளுக்கு இருந்த சந்தோஷம் ராமச்சந்திரனுக்கு நன்ருய்த் தெரியும். அவளுக்கும் ராமச்சந்திரனுக்கும் ஒன்றரை வயசுதான் வித்தியாசம். இந்தச் சொற்ப வயது வித்தியாசத்தினுலோ என்னவோ, அவர்கள் இருவருக்குள்ளும் அன்பு அதிகமாக இருந்தது. ஐந்தாறு வயது மூத்தவ

ஞன அவர்கள் தமையனைத் தனியென்றுதான் சொல்ல வேண்டும்.

ராமச்சந்திரன் மனத்தில் இவ்விஷயங்களெல்லாம் ஓடின. அவனுக்குத் தெரிந்தவரையில் சாவித்திரிக்கு மன வருத்தம் ஒன்றும் ஏற்படவில்லை; ஏற்பட்டால் அவனை அறியாமல் இருக்க முடியாது. சாவித்திரிக்கு ஏதாவது மன வருத்தம் இருந்தால் அவனிடம் சொல்லாமல் இருப்பாளா? ஒரு காலும் மாட்டாள். பேருக்குச் சாவித்திரி மூத்தவள் ஆனாலும், ராமச்சந்திரன்தான் அவளைவிடப் பெரியவன்போல நடந்துகொள்வான். சிறு வயதிலிருந்து விளையாட்டுக்களில் கூட அவன் சொற்படிதான் நடப்பாள். அப்படி இருக்கிறவளுக்கு, உயிரை வெறுக்கக்கூடிய மனவருத்தம் இருந்தால், அவனிடம் தெரிவிக்காமல் இருக்கமாட்டாள் என்பது நிச்சயம்.

ஆனால் அவள் கல்யாணமான பிறகு, இந்த இரண்டரை வருஷ காலமாக அவர்கள் இருவரும் அதிகமாகச் சேர்ந்தே இருக்கவில்லை. அவன் காலேஜ் படிப்புக்காகச் சென்னை வந்துவிட்டான். அவள், கணவன் வீடு போய்விட்டாள். கல்யாணத்தின்போது ஆறு மாதம் கழித்து அழைத்துப் போவதாக அவள் கணவன் சொல்லியிருந்தான். ஒரு மாதமானவுடனே அவளைக் கொண்டுவந்து விடும்படி கடிதத்தின்மேல் கடிதம் போட்டு வருவித்துக்கொண்டான். இப்போது அந்த நிகழ்ச்சி வேறுவிதமான ரூபத்தில் வந்து புகுந்தது. அதோடு அந்தச் சமயத்தில், 'சொன்ன சொற்படி நடக்கமாட்டான் போலிருக்கிறதே, இதுதான் முன்பின் தெரியாத இடத்துச் சம்பந்தத்தின் பலன். நல்லவர்கள் கெட்டவர்கள் என்பதுகூடத் தெரிகிறதில்லை' என்று அம்மா வருந்தினதும் நினைவுக்கு வந்தது. அதுமட்டுமா? சாவித்திரிக்கு முதல் பிரசவமாகி மூன்றும் மாதத்

தில் அவளையும் குழந்தையையும் பார்க்கவந்த அவள் கண வன் அவளை உடன் அழைத்துப்போவேனென்று பிடிவாதம் பிடித்து அழைத்துச் சென்றுனே!

சாவித்திரி குழந்தையுடன் ஊருக்குப் போன அன்று அவர் கள் வீடு இருந்த காட்சி அவன் மனக்கண்முன் அப்படியே வந்தது. "இப்படித்தான் நீக்குப்போக்குத் தெரியாமல் ஒருவன் நடப்பானே! உத்தியோகம் செய்துவிட்டால் போதுமோ" என்று அவள் மாமாவும் அம்மாமியும் பேசி அம்மாவின் வருத்தத்தை அதிகப்படுத்தினுர்கள். "ஒரு மாதங் கழித்து நான் படிக்கப் போகுமுன் கொண்டுவந்து விடுகிறேன்" என்று ராமச்சந்திரன் சொன்னதற்கு அத்திம்பேர் ஒத்துக் கொள்ளவில்லை. "சிறு குழந்தையை யும் அவளையும் அழைத்துக்கொண்டு அவ்வளவு தொலைவு தனியே பிரயாணம் செய்ய உன்னுல் முடியாது; அதுவும் இந்த யுத்தக் காலத்தில்" என்று சொல்லிவிட்டார். சாவித் திரிகூட, "எப்படிடா சின்னக் குழந்தையை அம்மா இல் லாமல் என்னுல் தனியாக அந்தத் தூரதேசத்தில் வைத்துக் கொண்டிருக்க முடியும்?" என்று ராமச்சந்திரனிடம் சொல்லிக் கவலைப்பட்டாள். இவ்வளவுக்கும் அண்ணு பேசாமல்தான் இருந்தான்.

இன்று இந்த நிகழ்ச்சிகளை நினைத்தபோது ராமச்சந்திர னுக்குக் கோபம் பொங்கி வந்தது. "பெரியவனுயிருந்தும் ஒரு வார்த்தை சொல்லாமல் இருக்கிருனே, நான் எப்படி யாவது ஆபீசில் லீவு கேட்டு அழைத்து வருகிறேன். பிரசவித்த உடம்பு கொஞ்சம் தேறட்டுமென்று சொல் லக் கூடாதா?" என்று அவர்கள் தாய் அவனிடம் சொல்லிச் சொல்லி வருந்தினுள். அண்ணுவின் வேலை பாங்கி வேலைதான். லீவு கிடைக்காமல் போய்விடாது. ஆனுல் அவன் எப்போதுமே ஒரு மாதிரிதான். ஒன்றிலும்

அதிகமாகப் பட்டுக்கொள்ள மாட்டான். அதுவும் அவனை எதிர்பார்க்கும் சமயத்தில் மூக்கை உடைப்பதுபோலச் செய்வது அவன் வழக்கம். அண்ணா இருக்கும்பொழுது சிறுவனான ராமச்சந்திரன் சொல்லுக்கு மதிப்பு ஏது?

சாவித்திரியை அவன் கணவன் அழைத்துப் போனான். ஆறு மாதத்திற்கெல்லாம் அவள் மறுபடியும் கர்ப்பம் தரித்தாள். உடம்பு பலஹீனம் ஏற்படுவதற்கு நியாயம் இருக்கிறது. ஆனால், உயிரை எதற்காக மாய்த்துக்கொள்ள வேண்டும்? அந்தமாதிரி அவளுக்குச் சங்கடம் இருப்பதற்குச் சிறிதும் இடமில்லை.

இச்சமயத்தில் அவன் சமீபத்தில் படித்த புத்தகமொன்று நினைவிற்கு வந்து மனத்தைச் சிறிது கலக்கிற்று. அது ஸ்திரீ புருஷர்களின் சரீர சம்பந்தமான இச்சைகளைப் பற்றின புத்தகம். ஆண் பெண் இருவரில் ஒருவருடைய அசாதாரண வேட்கையினால் மற்றொருவருக்கு ஏற்பட்ட பொறுக்க முடியாத கஷ்டத்தைப்பற்றி அதில் விரிவாக வர்ணித்திருந்தது. ஏதோ ஜோடனைக் கதை, உண்மை வாழ்க்கையில் நடக்கக்கூடியதல்ல என்றுதான் ராமச்சந்திரன் அதைப் படித்துக்கொண்டிருந்தபொழுது நினைத்தான். இப்பொழுது சாவித்திரியைப்பற்றிய நினைவோடு அந்தப் புத்தகத்தில் இருந்த செய்திகளும் பக்கத்தில் நின்றன. அதில் கூறியவை ஏன் உண்மையாக இருக்கக் கூடாது? சாவித்திரியின் செய்கை அதற்கு உதாரணமாக இருப்பதில் என்ன தவறு? - இந்தச் சந்தேகம் எங்கிருந்தோ அவனையும் அறியாமல் உதித்தது. மிகுந்த சந்தோஷத்தில் தொடங்கிய வாழ்க்கைகூட ஒன்றிரண்டு பிரசவத்திற்குப் பிறகு துன்பத்தில் முடிந்ததாக அதில் சொல்லப்பட்டிருந்தது. அப்படி ஏதாவது இருந்தால் சாவித்திரி அதை எப்படி யாரிடம் சொல்லுவாள்? பிரச

வித்த பலஹீனமான உடம்புடன் சாவித்திரி அவன் அகக் கண்முன்னே நின்ருள். அவளுக்கருகில் ஆரோக்கியமான திடகாத்திரத்தோடு அவள் கணவன் நின்ருன். மாறி மாறிக் காட்சியளித்த இருவரிடையே ஏன் அந்தமாதிரி ஒரு சிக்கல் இருக்கக்கூடாது? இந்தக் கேள்வி அவனைப் பொறுக்கமுடியாத வேதனைக்குள்ளாக்கியது. 'வெளியிலே நாம் கண்ணுரப் பார்ப்பதை நம்பக்கூடாது. உள்ளே மன துக்குள்ளே மனிதர்கள் நேர்விரோதமாக இருக்கிருர்கள்' என்ற தத்துவம் அவன் சந்தேகத்துக்குத் துணைசெய்தது.

அத்திம்பேர் கிறிஸ்துமஸ் லீவுக்கு வரப்போவதாக அம்மா எழுதியிருந்தாள். முதலில், சாவித்திரி பிரசவித்து நான்கு மாதங்களாகிறபடியால் அழைத்துப்போவதாக இருந்தா ராம். இப்பொழுது இந்தச் சமாசாரத்தை அண்ணு அவ ருக்கு எழுதியிருக்கிருனும். முக்கியமாய் ஓய்வு வேண்டு மென்று டாக்டர் சொல்லுகிருராம். அதனல் அவர் அழைத் துப் போகமாட்டாரென்று நினைப்பதாக அம்மா கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள். அவர் வரப்போவதற்கும் சாவித்திரி கிணற்றில் விழுந்ததற்கும் சம்பந்தம் ஏதாவது இருக் குமோ? இவ்விதம் நினைக்கவுமே, ஏதோ ஆபத்தான விஷ யத்தில் நுழைவதாக அவனுக்குத் தோன்றிற்று. கண்டபடி மனத்தை அலையவிடக்கூடாது என்று தீர்மானித்தான். இன்னும் ஒருவாரத்தில் அவனே கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு ஊர் போகப் போகிருன். சாவித்திரியோடு மனம்விட்டுப் பேசவேண்டும். ஏதாவது சிறிது சந்தேகம் தான் நினைத்த படியே தோன்றினலும், தக்க பரிகாரம் செய்யவேண்டும். சாவித்திரியைத் தங்கள் வீட்டிலேயே என்றும் வைத்துக் கொள்ளும்படி நேர்ந்தால், அதற்கு வேண்டிய ஏற்பாடு களை, அண்ணு செய்யாவிட்டால்கூட, தான் செய்யவேண் டும். இன்னுமா சிறுபிள்ளை? பட்டணத்தில் தனியே ஹாஸ்

டலில் வசித்ததில் அவனுக்கு நல்ல தைரியம் ஏற்பட்டிருக்கிறது.

இப்படி ஒருவகையான முடிவுக்கு வந்த பிறகுதான் அவனுக்குத் தன் நினைவு வந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை; காலேஜ் கிடையாது; பாதிப் பகலைப் படிக்காமல் கண்டபடி யோசனையில் அலையவிட்டது அசட்டுத்தனம் என்று எண்ணினான்.

சிவராமன் வேண்டுமென்றே நம்மைத் தனியே விட்டுப் போயிருக்கிறான். இருக்கட்டுமே, நாமும் எங்காவது வெளியில் போய் வந்தால் போகிறது. உடனே தன் மாமாவின் பெண்ணும் அவள் அகமுடையானும் மயிலாப்பூரில் வசிப்பது அவள் நினைவிற்கு வந்தது. அவன் மாமா மாப்பிள்ளை ஒரு டாக்டர். டாக்டர் போர்டு தொங்கவிட்டுச் சில வருஷங்கள் ஆகிறதானாலும், வரும்படி அதிகம் இல்லாதவன். ராமச்சந்திரனோடு அவனுக்குப் பேச அவகாசம் நிறைய இருக்கும். 'நாம் படித்த அந்தப் புத்தகத்தைப்பற்றி டாக்டரான அவன் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டால் என்ன?' இந்த எண்ணம் தோன்றினதுதான் தாமதம்; அவன் உடனே மயிலாப்பூரை நோக்கிச் சென்றான்.

சாவித்திரி கிணற்றில் விழுந்தது, காப்பாற்றப்பட்டது எல்லாம் அவர்களுக்கும் முன்பே தெரிந்திருந்தன. அவனுடைய மாமா தம் பெண்ணுக்கு எல்லாவற்றையும் எழுதியிருந்தார். ராமச்சந்திரனைக் காணவுமே அவன் மாமா பெண், "சாவித்திரி பிழைத்தது புனர்ஜன்மமாமே! நல்லவேளை! அப்பா அங்கிருந்தது நல்லதாய்ப் போச்சு" என்றாள்.

"ஆமாம்" என்றான் ராமச்சந்திரன். அந்தப் பேச்சைத் தொடர்ந்து பேச அவன் விரும்பவில்லை. சாவித்திரிக்கு

நல்ல வரன் கிடைத்ததில் அவன் அம்மாமிக்கு, ஏன் அவன் அம்மங்காளுக்குக்கூட, பொருமை இருந்ததென்பது அவனுக்குத் தெரியும். 'ஏதோ ரொம்ப இரங்குவது போலத்தான் நடிக்கிருள்!' என்று நினைத்துக் கொண்டான்.

"நீ இந்தப் பக்கமே வருகிறதில்லையே! உட்காரு. புதுப்பால் வந்திருக்கு; நல்லதாய்க் காப்பி கொண்டுவருகிறேன். சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்று எழுந்து உள்ளே சென்ருள். அதுதான் சமயமென்று தான் நினைத்து வந்த பேச்சை மாமா மாப்பிள்ளையுடன் தொடங்கினுன் ராமச்சந்திரன். பிறகு பேச்சுச் சுவாரஸ்யத்தில் மாமா பெண் காப்பி கொண்டு வைத்ததையும், தானே அதை எடுத்து அருந்தினதையுங்கூட அவன் தெரிந்துகொள்ளவில்லை. மணி ஏழு அடித்த பிறகுதான் ஹாஸ்டலுக்கு நாழிகையானது தெரிந்து விடைபெற்றுச் சென்ருன்.

ஒருமணி நேரம் டாக்டரோடு செய்த சம்பாஷணையில் அவன் தெரிந்துகொண்டது அதிகம் இல்லை. "வைத்திய புத்தகத்தை எல்லாம் கதைப் புத்தகமாக அடித்துச் சமூகத் தொண்டிற்குப் பதில் சமூகக் கெடுதல்களைச் செய்கிருர்கள். ஜனங்களுக்கு அரைகுறை அறிவினுல் கெடுதியும், வைத்தியத் தொழிலுக்குப் பெருத்த அபகாரமுமே ஏற்படுகின்றன" என்று அவன் வெகு ஆத்திரத்தோடு பேசினுன். தான்தெரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணிய விஷயத்தில் அவன் சந்தேகம் தீரவே இல்லை.

ஹாஸ்டலுக்கு வந்தபின், இந்த விஷயத்தைப்பற்றிச் சிந்தனை செய்யவே கூடாதென்று சங்கற்பம் செய்துகொண்டான். ஆகவே, ஊர் போகும் வரையும் சிவராமனேடு இது விஷயமாகப் பேசவே இல்லை. அடியோடு மறந்துவிட வேண்டுமென்றே ராமச்சந்திரன் பேசாதிருந்தான்.

டாக்டரோடு விவாதித்ததில் தனக்கு உண்டான சந்தேகத்தை வேறிடத்திலும் பரவ இடம் கொடுத்திருப்போமோ என்று அவன் சிறிதும் சிந்திக்கவில்லை. ஆனால் அவன் மாமா பெண், "என்ன, ராமுவோடு பேச்சுப் பலமாயிருந்ததே, என்னை நீங்கள் இருவரும் கவனிக்கவே இல்லையே" என்று கணவனைக் கேட்டபொழுது, "சிறு பிள்ளைகள் படிக்கக்கூடாத புத்தகத்தைப் படித்துவிட்டு ஏதேதோ நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மூளைக் குழப்பத்தில், சாவித்திரிகூடத் தவறித்தான் விழுந்தாளோ, வேறு ஏதாவது காரணம் இருக்குமோ என்று இவனுக்குச் சந்தேகம் போலிருக்கிறது" என்று அவன் சொன்னதிலிருந்து, அவள் ஒருவாறு இவன் சந்தேகத்தை ஊகித்திருந்தாளென்று தெரிந்தது. அவள் சும்மாயிருப்பாளா? மறுநாளே ஊரிலிருந்த தன் தாய்க்கு எழுதின கடிதத்தில் அது மாதிரி நினைக்க இடமுண்டா என்று கேட்டதோடு நில்லாமல், ராமு சந்தேகிக்கிறானென்றும் எழுதிவைத்தாள். அவள் அம்மாவுக்கு நாத்தனாரிடத்தில் என்றுமே பொறாமை உள்ளூரப் புகைந்துகொண்டிருந்தது. நம் மாப்பிள்ளை அவ்வளவு பரீக்ஷைகளையும் கொடுத்துவிட்டு, வரும்படி இல்லாமல் திண்டாடும்பொழுது, நாத்தனாருக்குமட்டும் சர்க்கார் உத்தியோகத்தில் நல்ல மாப்பிள்ளை கிடைத்துவிட்டானே என்கிற எண்ணம். மீனாவைவிடச் சாவித்திரி என்ன விதத்தில் மேல்? என்று அவள் நினைத்து நினைத்துப் புழுங்கிக்கொண்டிருந்தாள்.

தன் பெண் எழுதிய கடிதம் அவள் பொறாமை உள்ளத்தில் விசித்திரமான விளைவை உண்டாக்கியது. "ஏன் இந்தச் சந்தேகம் உண்மையாயிருக்கக் கூடாது?" என்றுதான் அவள் கூசாமல் நினைத்தாள். 'ராமுவுக்கே சந்தேகம் என்றால் இருக்கத்தான் இருக்கும்' என்று நிச்சயித்தாள். தன்னிடம் சாவித்திரியைப்பற்றி விசாரிக்க வந்தவர்களிடமெல்

லாம் "என்னவோ, ஏதோ, யார் கண்டா" என்கிற பாணி யில் பேசினுள். வைக்கோல் போருக்கு வேண்டுவதெல்லாம் ஒரு பொறி நெருப்புத்தானே? நல்ல சொல் பரவுவது கஷ்டமாயிருக்கலாம்; அபவாதத்திற்குக் கேட்பானேன்? விஷயத்தைக் குறிப்பாகக் கேள்விப்பட்ட அவர்கள் பந்துக்கள், தெரிந்தவர்கள், யாரும் தங்களுக்குத் தோன் றினபடி பேசி அவரவர்கள் மனம்போல் ஜோடனை செய்து கொண்டார்கள். சாதாரண மனிதர்களுக்கும் கற்பனை உணர்ச்சி இல்லையா? கவிகளுக்கும் எழுத்தாளர்களுக்குந் தான் சொந்தமா என்ன?

கடைசியாக ராமச்சந்திரன் ஊர் போனபோது, அம்மா வுக்கும் அண்ணுவுக்கும், பிறகு சாவித்திரிக்குங்கூட விஷயம் எட்டி, மிகுந்த வருத்தத்தைக் கொடுத்திருந்தது. சாவித்திரி இருந்த பலஹீன நிலைமையில் அவளால் அதைத் தாங்கவே முடியவில்லை. என்றைக்கும் அவளுக்கு அந்தரங்க மானவன் ராமச்சந்திரன். அவனைக் காணவும் அவள் தாங் காமற் கண்ணீர்விட்டுப் புலம்பிவிட்டாள். "என் வாழ்வைக் கண்டு யாருக்குப் பொருமை தாங்கவில்லையோ தெரிய வில்லை. இந்தமாதிரி அபாண்டமான பழியைக் கட்டிவிட்டு வேடிக்கை பார்க்கிருர்கள்" என்ருள். "ஐயோ ராமு, உங்கள் அத்திம்பேரைப்போல அன்புள்ள கணவர் உலகில் உண்டா? என் காலில் கல் உறுத்தச் சகிக்கமாட்டாரே. அவர் கொடுமைதாங்காமல் நான் பிராணனைவிடப் பார்த்த தாக ஊரெல்லாம் சொல்லுகிருர்களாமே?" என்று அவள் சொல்லி அழுதபோது, ராமச்சந்திரனுக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை. அம்மாதிரி நினைத்தவர்களில் தானும் ஒருவனுயிற்றே என்று நினைத்தபோது, பிராண னையே விட்டுவிடவேண்டும்போல் இருந்தது. அவன் என்ன நினைத்திருந்தான்? இங்கே விஷயம் எப்படி யிருக்கிறது? இங்கு வேருக இருப்பதை அறிந்து அவனறியாமலே அவ

னுக்குப் பெருமூச்சு மேலும் மேலும் எழுந்தது. தான் கொண்ட சந்தேகத்திற்குச் சிறிதும் இடமில்லை என்பதை அறியும்போது அவனுக்குப் பெரிய ஆறுதல் ஏற்பட்டது. "உண்மை வேருக இருக்கும்பொழுது ஊரார் எதைச் சொன்னுல் நமக்கு என்ன? சூரியனைப் பார்த்து நாய் குரைப்பதுபோன்றது அவர்கள் செய்கை" என்று தேற்றினுன். தன் சந்தேகம் தெளிந்ததில் உண்டான திருப்தியிலே அவன் பேசினுன். அந்தப் பெண்மையுள்ளத்தில் அடாப் பழியினுல் எழுந்த புயலைச் சிந்தித்துப் பார்க்க அவன் முன் வரவில்லை. "நாளைக்கு உன் அத்திம்பேர் வருகிருரே. அவர் காதில் இது விழுந்தால் அவர் எவ்வளவு வருந்துவார்?" என்று சொல்லி அவள் மறுபடியும் அழுதாள்.

"அவருக்குத் தெரியும்படி விடக்கூடாது. நீ அவரிடம் சொல்லி வருந்தாதே" என்று சாவித்திரிக்குப் புத்திமதி சொன்னுன். அவள் உடம்பு மெலிந்து பலஹீனமாக இருப்பதைப் பார்த்தபோது அவனுக்குச் சகிக்கவே இல்லை. "உடம்பு ஏன் இப்படிப் போயிற்று?" என்று அங்கலாய்த்தான். "உடம்புதானே இன்னும் தேறவில்லை? பலஹீனம் ரொம்ப அதிகம். அதனுல்தான் ஜலம் எடுக்கப் போனவளுக்கு மயக்கம் வந்து சமாளித்துக் கொள்ளத் தெரியாமல், கயிற்றைப் பிடிக்கப்போய் கிணற்றுக்குள்ளேயே சாய்ந்துவிட்டேன்" என்ருள்.

"எங்காவது, சமாளித்துக் கொள்வதற்காக, தொங்கும் கயிற்றைப் பிடிப்பார்களா?" என்று ராமச்சந்திரன் கேட்டான்.

"இல்லாவிட்டால் இவ்வளவு அபக்கியாதியை எப்படிச் சம்பாதித்துக் கொள்ளுகிறது!" என்ருள் சாவித்திரி அங்கலாய்ப்போடு.

இந்தச் சிறிய சமாசாரம் தெரியாமல், தெரிந்து கொள்ளவும் முயலாமல், குருட்டு யோசனையில் அவன் என்ன பாடுபட்டுப் போனுன்! சிவராமன்தான் இவ்வள வுக்கும் காரணம், மனோதத்துவம், மனோதத்துவமென்று சொல்வதெல்லாம் பிதற்றல்! அவனிடத்தில் இப்பொழுது ராமச்சந்திரனுக்குப் பொறுக்க முடியாத கோபம் வந்தது. 'மனோ தத்துவ ஆராய்ச்சியாவது! மண்ணுங்கட்டியாவது!' என்று வைதான்

'பட்டணம் போய் முதலாவதாக அதை மறக்கும்படி அவ னுக்குச் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் உனக்கும் எனக்கும் இனி முகாலோபனம் இல்லையென்று சொல்லி விடவேண்டும்' என்று தீர்மானித்துக்கொண்டான்.

சாவித்திரி வரையில் விஷயம் எட்டும்படியாக விட்டதற்கு அம்மாவை ராமச்சந்திரன் கோபித்துக்கொண்டான். "நான் சொல்லாமல்தான் இருந்தேன். உங்க அம்மாமி இருக் காளே, அவள்தான் சாவித்திரியிடம் நேரில் அங்கலாய்க்க ஆரம்பித்துவிட்டாள். ஊரார் சொல்லிக்கொள்வதையெல் லாம் முடிந்துகொண்டு வந்து சொன்னுள். என்ன பண்ணு கிறது?" என்று அவன் தாய் சொன்னதை அவன் ஒப்புக் கொள்ளவில்லை.

"அம்மாமி அப்படிப் பேசுவாளென்று தெரிந்தால் அவளைச் சாவித்திரியிடம் அணுகவே விட்டிருக்கக்கூடாது!"

"போடா, நீ என்னமோ சொல்லுகிருய்! ஊர் அபவாதத் துக்கே அம்மாமிதான் காரணமென்று எனக்குச் சந்தேகம். அதற்கு என்ன பண்ணுகிறது? அதையெல்லாம் நம்மால் தடுக்க முடியாது. காதில் போட்டுக்கொள்ளாமல் இருந் தால் எல்லாம் தானே ஓய்ந்துவிடும்" என்று அவன் அண்ணு மத்தியஸ்தத்துக்கு வந்தான். "ஊர் அபவாதத்

திற்கே அம்மாமிதான் காரணம் " என்பதைக் கேட்கவுமே ராமச்சந்திரனுக்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை.

" அம்மாமிதான் காரணமானால் பேசாமலா இருக்கிறது? அவளைச் சண்டைபிடித்துத் தீர்க்கவேண்டாமா? எதை யுமா பொறுத்துப்போவது? அதற்கும் ஓர் அளவு இல் லையா?" அவனுக்குக் கோபம் தாங்காமல் வந்தது. " நீ வேதாந்தி. தர்மபுத்திரர் அவதாரம். பொறுத்துக்கொண்டு சும்மாயிருப்பாய். என்னால் முடியாது. நான் போய்க் கேட்டு விட்டு வருகிறேன் பார் " என்று ஆத்திரத்துடன் கூறிக் கிளம்பினான்.

" இந்தா, அவசரப்படாதே " என்று அவன் தமையன் அவனை அமர்த்தினான். " இவைகளையெல்லாம் கேட்கப் போனால் விபரீதத்தில் முடியும். நமக்கு உண்மை தெரியாது. ஏதோ ஊகந்தான். சாவித்திரி கல்யாணமானதிலிருந்து அவர்களுக்குப் பொருமை. அவ்வப்பொழுது ஏதேதோ சொல்லுகிறார்கள். எத்தனை நாளைக்கு இதெல்லாம்? தானே ஓயவேண்டியதுதான். பந்துக்களுக்குள் கண்டபடி பேச்சுக்கு இடம் வைத்துக்கொள்ளக் கூடாது " என்று கண்டிப்பாய்க் கூறினான்.

ஆனால் ராமச்சந்திரனால் சும்மா இருக்க முடியவில்லை. சாப் பாடான பிறகு சகஜமாய்ப் போகிறதுபோல மாமா வீட் டிற்குப் போனான். அம்மாமியோடு பேசினான். பேச்சுக்கு நடுவில், சாதாரணமாய்க் கேட்பதுபோல, " மாமி, நீங்கள் சாவித்திரியைப்பற்றி நினைத்துக்கொண்டதே தப்பு. அதற்கு மேல், அதை ஊர் அறியும்படி விடலாமா?" என்று அங்கலாய்த்தவண்ணம் கேட்டான். அம்மாமி லேசுப்பட் டவளா? சும்மாயிருந்துவிடுவாளா? " விளையாட்டுப்போல் என்னவோ என்மேல் பழி போடுகிறாயே. ஐயோ, அப்பா,

நான் என்னத்தைக் கண்டேன்! தேமேனு இருக்கேன். என்னைச் சந்தியில் இழுக்காதே. நீதான் என்னமோ சந்தேகப் படுகிருப்போலே இருக்குன்னு மீனு எழுதினுள். அதைக் கூட, 'அசட்டுப் பிள்ளை' என்று நான் காதில் போட்டுக் கொள்ளவில்லை" என்று ஒரு போடுபோட்டாள்.

ராமச்சந்திரனுக்கு இடிஇடித்துக் காலடியில் விழுந்த அதிர்ச்சி ஏற்பட்டது. சேற்றில் கல்லை எறிந்து சேறு முழுதும் தன் பேரிலேயே தெரித்திருப்பதைக் கண்டான். அந்த நிமிஷத்தில் அவனுக்கு யாரைக் கோபிப்பதென்றே தெரியவில்லை. என்ன அபவாதம்! அவன் ஆத்திரம் இருந்த இடம் தெரியாமல் மங்கியது. பேசாமல் வீடு வந்தான்!

தன்னைத்தானே அவன் வெறுத்தான். இவ்வளவு வீண்பழிக்கும் தானே வித்து என்பதை எண்ணியபோது அவன் உடல் நடுங்கிற்று. முதல் முதலாகத் தமையனிடத்தில் அவனுக்கு மதிப்பு ஏற்பட்டது. 'அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பதற்கேற்ப அவன் நடந்துகொண்டிருக்கிறுன். அவன் அன்புள்ள சாவித்திரியின் வருத்தம் முழுவதற்கும் அவனே காரணமாயிருக்கிறுன். அவனைவிடக் குற்றவாளி உலகில் வேறு யார்? - இந்தச் சிந்தனையில் மூழ்கியிருந்த அவன் மனம் புண்பட்டு வருந்திற்று. சாவித்திரியின் குழந்தைகளை விளையாட்டுக் காட்டுவதில்தான் அவனுக்குச் சிறிது ஆறுதல் ஏற்பட்டது.

மறுநாள் அவனுடைய அத்திம்பேர் வந்தார். அவரைக் காணவுமே சாவித்திரி கொஞ்சம் உற்சாகம் கொண்டாள். அவர் இருந்த பத்து நாட்களும் சந்தோஷமாகவே கழிந்தன. ராமச்சந்திரனுல்கூட வருந்திக்கொண்டிருக்க முடியவில்லை. சாவித்திரியின் சந்தோஷம் அவனையும் தன்னை மறந்து சிறிது சந்தோஷமாயிருக்கச் செய்தது. அவன் அத்திம்பேர் திரும்ப ஊருக்குப் புறப்படும்பொழுது சாவித்

திரியும் அவரோடு போவேனென்று பிடிவாதம் பிடித்தாள். அவள் கணவன் சொல்லிப் பார்த்தான்; மற்றவர்களும் சொன்னார்கள். யார் சொல்லியும் அவள் கேட்கவில்லை. 'அங்கிருந்தாலே தன் உடம்பு தேருது' என்று சாதித்து விட்டாள். ராமச்சந்திரன் ஏதேதோ நடத்தப் போவதாக வந்தவன், அவரவர்கள் மனம்போல நடந்துகொள்ளட்டு மென்று பேசாமல் இருந்துவிட்டான். இது விஷயத்தில் அண்ணாவைப் பின்பற்றச் சந்தேகமற நிச்சயித்துவிட்டான். சாவித்திரியோடு அவன் தாயும் போவதென்று ஏற்பாடா யிற்று. சாவித்திரி பயணத்தை நிறுத்திவிட எண்ணிவந்த அவன், அம்மாவுக்கும் சேர்த்து மூட்டை கட்டினான்! எல்லாரும் ஒன்றாய்ப் பட்டணம் வந்து, பிறகு சாவித்திரி, அவள் கணவன், அம்மா மூவரும் ஸிம்லா சென்றார்கள்.

ஒருநாள் அவர்களை ஒருங்கே பார்த்த சிவராமன் "உன் அத்திம்பேர் உன் தமக்கையிடத்தில் உயிராய் இருப்பார் போலிருக்கிறதடா!" என்றான்.

"உன் மனோதத்துவ சாஸ்திர ஆராய்ச்சியால் கண்டுபிடித் தாயா? இதைப் பார்: அதைப்பற்றிப் பேசுவதாயிருந்தால் உனக்கும் எனக்கும் சிநேகம் நின்றுபோனதென்று தெரிந்து கொள். அதனால் எனக்கு ஏற்பட்ட கஷ்டமும் அவமான மும் ஜன்ம ஜன்மத்துக்குப் போதும்" என்றான் ராமச் சந்திரன் ஆத்திரத்துடன்.

"நீயாகக் கற்பித்துக்கொண்டு கஷ்டப்பட்டதற்கு யார் என்ன செய்கிறது? நான்மட்டும் உன் அத்திம்பேரையோ, அக்காவையோ முன்பே பார்த்திருந்தேனானால் உன் சந்தே கத்தை அடியோடு தொலைத்திருக்கமாட்டேனா!" என்று ஒரே அடியாக அடித்தான் சிவராமன். மன இயல்பைப் பற்றிப் படித்தவனோ இல்லையோ; உலக இயல்பை அவன் தெரிந்துகொள்ளவில்லையே!

... MADRAS
29 MAR 1944

# எழுத்தாளரின் பசி

ஆர். வேங்கடராஜுலு

எழுத்தாளர்கள் சாப்பாட்டு ராமர்கள் என்று நிரூபிப்பது என் எண்ணமல்ல. எழுத்தாளருக்குப் பசி அதிகம் என்பதைக் காட்டுவதே நோக்கம். 'பசியா? எனக்குக் கிடையாதே!' என்று எந்த எழுத்தாளராவது வம்பு பேசுவாரானால் அதைப்பற்றியும் யாருக்கும் கவலை கிடையாது. பசியா வரம்பெற்ற இவர்கள் விஷயத்தில், சாமர்த்தியமிருந்தால் ரேஷன் அதிகாரிகள் கவனித்துக் கொள்ளட்டும்.

பசி பொல்லாதது என்று சொல்லிப் பயந்து பயனில்லை. பசி, பெரும் பிணி என்று இழிவாகக் கூறிவிடுவதனால் மாத்திரம் மனிதனையோ அல்லது உயிருள்ள எந்த ஜீவராசியையுமே அது விட்டுவிடவும் போவதில்லை. பசி ஓயாமல் வந்துகொண்டுதானிருக்கிறது. உழைப்பவனுக்குப் பசி அதிகம். பணம் படைத்த பாவத்தால் ஒரு வேலையும் செய்யாதிருக்கும் சோம்பேறிக்குப் பசி குறைவு. தன்னிடம் வலிய வர மறுக்கும் பசியை, ஜீரண சக்தி மருந்துகளை ஓயாது விழுங்கியாவது வரவழைக்க இவனும் முயன்று கொண்டுதானிருக்கிறான். ஆகையால் பசி, பணக்காரனும் விரும்பாத ஒன்று அல்ல. இக்கால நாகரிக அலங்கோலத்திலே மனிதனுடைய மூளையில் எத்தனையோ விதமான கோளாறுகள் முளைத்திருக்கின்றன. அவற்றிலே ஒன்று பசியைப் பற்றியது. நல்ல பசி, நல்ல ஆரோக்கியத்திற்கு அறிகுறி என்பது எல்லாருக்கும் தெரிந்த உண்மை. ஆனால்

பசிக்கிறதென்பதைப் பகிரங்கமாய்ச் சொல்லிக்கொள்ள ஏழ்மைப்பட்டவர்களுக்குச் சங்கோஜம்! பசியில்லை என்று சொல்லிக்கொள்ளுவதில் பணக்காரனுக்கு ஒரு பெருமை! எழுத்தாளர் நிலைமை இன்று மோசமாக இருக்கிறது என்றால் அந்தக் கோளாறும், பசியைப்பற்றிய இப்பாழும் சங்கோஜமே முக்கிய காரணம்.

எழுத்தாளர்கள் தேவ அமிர்தம் உண்டு அவதரித்தவர்களல்ல. இவர்களுக்கும் பசியுண்டு. பாட்டாளிகளைவிட இவர்களுக்குப் பசி இன்னும் அதிகம். உடல் தத்துவ ஆராய்ச்சிக்காரர்கள் இதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். மனோதத்துவ ஆராய்ச்சியாளரும் ஆமோதிக்கின்றனர். ஒரு மணி நேரம் உழைக்கப் பாட்டாளிக்கு எவ்வளவு தேகசக்தி வேண்டுமோ அதைவிட மூன்று மடங்கு அதிக தேக சக்தி, மூளை வேலைசெய்யும் எழுத்தாளருக்குத் தேவை என்பது இவர்கள் கருத்து. படிக்கும் புத்தகங்களோ அல்லது தலைக்கு மேலே சுழலும் மின்சார விசிறியோ எழுத்தாளருக்கு இந்த சக்தியைக் கொடுத்து விட முடியாது. எழுத்தாளருக்கு அதிக தேக சக்தி வேண்டி யிருக்கிறதென்றால் அதற்கு அதிக ஆகாரம் வேண்டும். பாட்டாளியின் பசியைவிட எழுத்தாளரின் பசி மூன்று மடங்கு அதிகம் என்பதும் இதனால் நிச்சயமாகிறது.

உடலுழைப்பாளியைவிட எழுத்தாளிக்குப் பசி மும்மடங்கு அதிகம் என்பது சிலருக்கு ஆச்சரியமாய்த் தோன்றலாம். ஆனால் இது அனுபவ உண்மை. சில எழுத்தாளருக்கு அவ்வளவு அதிக பசி இருக்கக் காணோமே என்றும் சிலர் கேட்கலாம். இதில் உண்மையும் உண்டு. ஆனால் காரணம்மாத்திரம் முற்றிலும் வேறு. மெக்காலே, தான் மெலிந்து குட்டையனா யிருந்ததற்கு ஒரு காரணம்

கூறுவதுண்டு : "இளம் வயதில் எனக்குப் போதுமான சாப்பாடு கிடைக்காது போனதே இதற்குக் காரணம்" என்றுர் மெக்காலே. ஆகவே, இன்று சில எழுத்தாளருக்குப் பசி குறைவாக இருக்கிறதென்ருல், இளமையில் கிடைத்த ஆகாரம் போதாததாக இருந்ததே காரணமாயிருக்கலாம். புஷ்டியான உணவுக்கு வேண்டிய செளகரியம் பின்னுல் இல்லாது போனதும் பசியைப் பாழாக்கியிருக்கும். ஆனுல், வளர்ச்சி பெருத, வற்றிப்போன அவர்கள் உடல்கள், உண்மையைக் கட்டாயம் வெளிப்படுத்துகின்றன. ஆகையால் சில எழுத்தாளருக்குப் பசி அதிகமில்லை என்ருல், பசிக்குப் போதிய ஆகாரம் கிடைக்காதுபோனது காரணமேயன்றி, அவர்களுக்குப் பசி இல்லை என்பதல்ல.

ஒரு பிரபல தெலுங்கு எழுத்தாளர் எனது பழைய நண்பர். நன்ருகச் சாப்பிட இன்று அவருக்கு வசதியுண்டு. என்ருலும் போதிய பசி கிடையாது ; சரியாக அவர் சாப்பிடுவதுமில்லை. எழுத்தாளருக்குச் சகஜமான உற்சாகம் இவர் உயிரை விடாப்பிடியாகப் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தபோதிலும், உடல் மாத்திரம் வற்றிக்கொண்டே போயிற்று. "ஏன் நல்ல ஆகாரத்தைச் சாப்பிடக் கூடாது?" என்று நான் கேட்டதற்கு, "என் அத்தையின் 'கொள்ளிக்கட்டைச் சட்னி' செய்த கதி இது" என்ருர். அதன் விவரத்தையும் சொன்னுர் : சிறு வயதில், ஆந்திர பட்டணமொன்றில் வக்கீலாக இருந்த தமது மாமாவின் வீட்டிலிருந்துகொண்டு படித்து வந்தாராம். மாமன் மனைவி கொடியவள். 'கொள்ளிக்கட்டைச் சட்னி'யும் கொஞ்சம் சோறுமே தினசரி இவருக்குக் கிடைத்த ஆகாரம். அந்தச் சட்னி வேறு ஒன்றுமில்லை ; பழுப்பு மிளகாயும் உப்பும் வைத்து அரைக்கப்பட்டது. கொள்ளிக்கட்டை போன்ற நிறம் பெற்றிருந்ததால் அந்தச் சட்னிக்கு இந்த எழுத்தாளர் அப்பெயரிட்டிருக்கிருர். இதனுல் சாப்பாட்

டில் வெறுப்புத் தோன்றி, பசி குன்றிப் பிற்காலத்திலும் சாப்பிட முடியாமலிருக்கிறதென்பது அவர் சொன்ன காரணம். இதன் பலன் என்ன? இப்பொழுது ஆபத்தானதொரு நோய்க்கு ஆளாகி அவதிப்படுகிறார்.

இன்னுமொரு எழுத்தாளநண்பர் தற்சமயம் வட இந்தியாவிலிருக்கிறார். இவர் நிலைமையும் அதுதான். ஆனால் மாமன் மனைவியின் 'கொள்ளிக்கட்டை சட்னி' செய்த வினையல்ல இவருக்கு. குழந்தைப் பருவத்தில் தாயை இழந்தார். மாற்றாந்தாயின் கொடுமை அதிகமாம். அந்த அம்மாள் இவருக்கு வயிற்றுக்குப் போதுமான சோறு போடாததால் நல்ல பசியில்லாதுபோய் உடல் இன்றும் எலும்புந் தோலுமாய் இருப்பது மாத்திரமல்ல; பெண் இனம் என்றாலே இவருக்குப் பொல்லாத வெறுப்பு!

சில எழுத்தாளர்களுக்கு அதிகப் பசி இல்லாமலிருப்பதற்கு இதைப்போன்ற காரணங்கள் ஏதாவது இருக்கலாம். இவையல்ல என்றால், எழுத்தாளன் ஏழையாகவே இருக்க வேண்டியிருக்கும் துர்ப்பாக்கியம் முக்கிய காரணம். சாப்பாடு தனக்கு முக்கியமல்ல என்று எல்லாரிடத்திலும் ஒரு பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் மற்றோர் எழுத்தாளரையும் நான் அறிவேன். அறிவுப் பசியைத் தவிர தனக்கு வயிற்றுப் பசி கிடையாது என்றும் ஜம்பமாகச் சொல்லிக் கொள்ளுவார். ஆனால் இந்தத் 'துறவி'க்குப் பணப் பசியும் பதவிப் பசியும் அதிகம். இவ்விரு பசியையும் தீர்த்துக் கொள்ள எதையும் செய்யத் துணிந்தவர் அவர். ஆகையால் பேராசைக்காரனுக்கு இருக்கவேண்டிய இந்தப் பசிகள் வந்து எழுத்தாளருக்கு இயற்கையாக இருக்கவேண்டிய வயிற்றுப் பசியை ஒருவேளை மந்தித்திருக்கலாம். இதனால் எழுத்தாளனுக்குப் பசிக் குறைவு என்று ஏற்பட்டுவிடாது.

'கம்பனும் எங்கள் ஜாதி' என்று எழுத்தாளர்கள் உறவு கொண்டாடுகிருர்கள். கம்பன் எழுத்தாளர் ஜாதி என்ருல், ஔவையும், மற்றுமுள்ள கவிகளும் அந்த ஜாதியைச் சேர்ந்தவர்களே. இவர்களுக்கும் பசி அதிகமாகவே இருந் திருக்கிறது. பசி இல்லையென்ருல், 'கூலி வாங்கிப் போமள வும் நில்லாய் நெடுஞ்சுவரே' என்று பாடிக் கம்பன் நெல் வாங்கிப் போயிருக்கமாட்டான். 'இடும்பைகூர் என் வயிறே உன்னேடு வாழ்தலரிது' என்று பசியை நொந்து ஔவை பாடவேண்டிய அவசியமுமில்லை. பசிக்காத பிறவி யாக இருந்திருந்தால், வேளூர்ப் பூதன் வைத்த விருந்தில் கிடைத்த வரகரிசிச் சோறும், கத்தரிக்காய்ப் பொரியலும், புளித்த மோரும் தின்றுவிட்டு, 'விருந்திட்ட சோறு எல்லா உலகும் பெறும்' என்று ஔவை புகழ்ந்தே இருக்க முடியாது. அதே கிழவி, பாண்டியன் கல் யாண விருந்தைப்பற்றிச் சொல்லியிருப்பதும் கவனிக்கத் தக்கது. '......அண்டி நெருக்குண்டேன், தள்ளுண்டேன், நீள்பசியி ஞலே சுருக்குண்டேன் சோறுண்டிலேன்' என்று சொல்லி வயிற்றுக்குச் சோறு கிடைக்காததால் வயிறு சுருங்கியதையும் சாப்பிடாததையும் கூறுகிருர்.

'அட கெடுவாய்! பலதொழிலு மிருக்கக் கல்வி அதிக மென்றே கற்றுவிட்டோம் அறிவில்லாமல்' என்று படிக் காசுப் புலவர் மனம் நொந்து பாடியது ஏன்? அவர் வருந்திப் பாடியதற்கு, அதிகப் பசியையும் அதைத் தீர்க்க இயலாது போனதையும் தவிர வேறு காரணம் ஏது? 'கல் லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானு?' என்று படைத்தவனை நிந்தித்துப் பாடிய கவிராயர், 'எங்கும் பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத் தான் புவியிற்ருன் பண்ணிஞனே" என்று பாடியதும் அதிகப் பசியின் அவதியினுலேயே.

மேனுட்டு எழுத்தாளருக்கும் இந்த அதிகப் பசியுண்டு. அவர்களில் பலருடைய வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந் தால் பெரும் பசிக்கு ஏற்றபடி அதிகத் தீனி தின்ப வர்களாக இருந்திருப்பது விளங்கும். காதல் கவிதை கள் எழுதுவதில் மகா சமர்த்தரான ரோஸட்டிக்கு விடிந்ததும் அரை டஜன் முட்டைகளும் ஏராளமான மாமிசமும் அற்ப ஆகாரம். தாக்கரே என்ற பெரிய எழுத்தாளிக்கோ பசி இன்னும் கொஞ்சம் அதிகம். பெண் எழுத்தாளியான சார்லட் பிராண்டேக்குத் தாக்கரேபேரில் அதிகப் பிரேமை. அவர் அவதார புருஷர் என்பது இப் பெண்மணியின் எண்ணம். ஒரு நாள் தாக்கரேயை இவள் ஒரு விருந்தில் சந்தித்தாள். அது பலமான விருந்து. தாக் கரே சாப்பிடுவதைப் பார்த்துக்கொண்டே வந்தாள். மேஜைக்கு வரும் தட்டுக்களையெல்லாம் தாக்கரே சாப்பிட் டுக் காலிசெய்தவண்ணமிருந்தார். சாப்பாட்டுராமர் என்று யாராவது அவரை நினைத்துவிடப் போகிறுர்கள் என்பது அவள் பயம். ஓயாமல் தாக்கரே சாப்பிட்டுக்கொண்டே இருந்ததைப் பார்த்துப் பதைபதைத்த அவள், தன்னையும் அறியாமல், "ஐயோ தாக்கரே! போதும் நிறுத்தும்" என்று கூச்சலிட்டாளாம். தாக்கரேயைப் பற்றிய மற்றுேர் சம்பவமும் உண்டு. அவருடைய முக்கிய நண்ப ரொருவர் அவரை விருந்துக்கு அழைத்திருந்தார். வருவதாக வும் இவர் சொல்லியிருந்தார். ஆனல் இவர் தங்கியிருந்த ஹோட்டலில் நடந்து கொண்டிருந்த சமையல் வாசனை வந்தது. தமக்குப் பிடித்தமான சில பதார்த்த வகைகளும் சமைக்கப்படுகின்றனவென்பதும் தெரிந்தது. வயிறும் பசித்தது. நண்பர் விருந்து போனுலும் போகட்டுமென்று தம் ஹோட்டலிலே சாப்பாட்டுக்கு உட்கார்ந்துவிட்டார்.

சிறந்த நாவலாசிரியரான அலெக்ஸாண்டர் டூமாஸும் நன்ருய்ச் சாப்பிடக் கூடியவர். மாமிச ஆகாரத்தின்

அருமை பெருமையைத் தாக்கரே தமது நூல்களில் வருணித்திருப்பதைப் போலவே டூமாஸின் நாவல்களி லும் நல்ல சாப்பாட்டைப்பற்றிய வருணனைகள் அதிக மிருக்கின்றன. டிக்கன்ஸூம் அதிகப் பசிக்காரரே. கவி களான ஆலிவர் கோல்ட்ஸ்மித், டென்னிஸன் ஆகியவர் களும் அதிக ஆகாரத்தை ஆவலுடன் உண்டவர்களே. ஜி.கே. செஸ்டெர்டனும் இதில் சளைத்தவரல்ல. 'நியூயார்க் பிரஸ்' என்ற அமெரிக்கப் பத்திரிகைக்கு தலையங்கம் எழுதி வந்த 'டட்ளி மாமா' என்ற பிரபலஸ்தரின் பசியும் மற்றோர் உதாரணம்.

"நமது குழந்தைப் பருவத்தில் நாம் தின்ற அருமையான பண்டங்களின்மீது ஆவல் கொள்ளுவதைத் தவிர, தேசாபி மானம் என்பது வேறு என்ன?" என்றுகூட சீன அறிஞ ரான லின்-யு-டாங் வேடிக்கையாய்க் கேட்கிறார்.

இவற்றிலிருந்து தெளிவாவது என்ன? எழுத்தாளருக்கு அதிகப் பசி இருப்பது சகஜம். ஆகவே அவர்களுக்கு அதி கச் சாப்பாடும் அவசியம். அதிகமாய்ச் சாப்பிடுவதால் மூளை வளர்ச்சி கெட்டுவிடும் என்பதும் முதல்தரமான மூட நம்பிக்கை. ஆகையால் அதிகப் பசி என்று சொல்லிக் கொள்வதற்கு எழுத்தாளர் வெட்கப்பட வேண்டியதே எதுவும் கிடையாது. திடமான உடலிலேயே திறமையான மூளை இருக்க முடியும். இது எல்லோரும் ஒப்புக்கொள் ளும் உண்மை. உழைப்புக்குப் போதிய சக்தியை உட லுக்கு அளிக்கும் ஆகாரமில்லாமற் போனால் திடமான உடலிருக்க முடியாது. ஆகவே சரியான ஆகாரமும், அதை அடைவதற்கு வேண்டிய வசதியும் எழுத்தாள னுக்கு அவசியம். இதைச் சொல்லப் பண்டைக்கால எழுத்தாளர்கள் அனாவசியமாக வெட்கப்பட்டதில்லை.

இக்கால எழுத்தாளருக்குச் சங்கோஜம் வந்து குறுக்கிடு கிறது! கேவலம் வெறும் நடைப்பிணமாக இருக்க வேண் டிய நிலைமையை அடைந்ததுதான் இதன் பலனாக எழுத் தாளன் இன்று அடைந்திருக்கும் கதி.

'பன்றிக்கு அதன் மூளை எப்படியோ அதேபோல மனிதன் மூளையும் உணவைத் தேடுவதற்கான ஓர் உறுப்பே' என்று லார்டு பால்போர் கூறினார். ஆனால் சோற்றைத் தேடுவதற்கு மாத்திரம் மூளையை உபயோகிப் பவன் அல்ல எழுத்தாளன். எந்த எழுத்தாளனாவது இந்த வேலையிலே தனது மூளையையெல்லாம் செலவிட்டுக்கொண் டிருப்பானானால் அவன் ஜாதிகெட்ட எழுத்தாளனே என்பதிலும் சந்தேகமில்லை. 'ஒருவனுடைய இதயத்தை அடைவதற்குச் சரியான வழி வயிற்றின்மூலமே' என்பது சீனப் பழமொழி. வயிறு வற்றினால் மன உறுதி ஒடுங்கும்; உடலில் சக்தி குன்றும்; மூளையும் குழம்பும். குழம்பிய மூளையினிடமிருந்து எந்தச் சிறந்த வேலையையும் எதிர்பார்க் கவும் முடியாது. ஆகையால், சோறு தேடுவது ஒன்றையே கவனித்துக்கொண்டிருப்பவன் ஜாதிகெட்ட எழுத்தாளன் யென்றால், புஷ்டியான ஆகாரத்தின் அவசியத்தை மறந்து விடும் எழுத்தாளி, ஏமாளி.

எழுத்தாளிகளானதும் அவர்கள் ஏமாளிகளாகவும் ஆகி விடுவதே இதிலிருக்கும் முக்கிய ஆபத்து. எழுத்தாளர் உழைப்பைக்கொண்டு ஏய்த்துப் பிழைக்கிறவனுக்கு இது சௌகரியமாகிவிடுகிறது. எழுத்தாளரின் எளிய வாழ்க்கை யின் சிறப்பைப்பற்றிப் புகழவும் ஆரம்பித்து விடுகிறார்கள். ஏழ்மையி லிருக்கும் இவர்களிடம் சிக்கனத்தையும் சொல் லப் புறப்படுவது அக்கிரமம் மாத்திரமல்ல, அவர்களை அட் டூழியமாக அவமதிப்பதுமாகும். பட்டினி கிடப்பவனிடம் போய்க் கொஞ்சமாய்ச் சாப்பிடுவதின் மேன்மையைப்பற்

றிப் பிரசாரம் செய்வதற்கே இது சமம். "வயிறு நிரம்பியிருப்பது ஒன்றே சிறந்த காரியம். மற்றவைகளெல்லாம் வீண் ஆடம்பரங்கள்" என்றுர் சீனக் கவிஞரொருவர். மற்ற ஆடம்பரங்களுக்கு வழியில்லாது போனாலும் வயிறு நிரம்பியிருப்பதற்கான வழி எழுத்தாளருக்கு வேண்டும்.

எழுத்தாளரின் வாழ்க்கை லட்சியம் உயர்ந்தது; எழுத்தாளரின் சேவை மனிதசமூகத்திற்கே அத்தியாவசியமானது என்பதையும் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிருர்கள். ஆனால் எழுத்தாளர் வாழ்க்கை நிலை சீர்கெட்டே இருந்து வருமானால், நிலைமை என்ன? 'பணக்காரர்களையும்விட அதிகமாய்ப் பணத்தைப்பற்றியே சதா எண்ணிக்கொண்டிருக்கும் ஒரு வகுப்பு நம் சமூகத்திலிருக்கிறது. அவ்வகுப்பினரே ஏழைகள். ஏழைகள் வேறு எதையும் எண்ணவே முடியாது. இதுதான் ஏழைகளின் துயரமும்' என்றுர் ஆஸ்கார் ஒயில்ட். ஏழைக்குப் பணம் கிடைப்பதில்லை. இதனாலேயே அவன் நினைவும் கனவும் பணத்தைப் பற்றியதாகவே இருக்கிறது. நல்ல சாப்பாட்டுக்கு வேண்டிய வசதி எழுத்தாளனுக்கு இல்லையானால் இவன் கதி என்ன? சோறு ஒன்றையே அவன் புத்தி சிந்தித்துக்கொண்டிருந்துவிடும். இதனால் எழுத்தாளன் தொழில் தர்மம் கெடுகிறது. திறமை குட்டிச்சுவராகிறது; இவன் சேவை கிடைக்காததால் சமூகத்திற்கும் பெரு நஷ்டம்.

இதைப்பற்றிச் சமூகம் சிந்திக்காமலிருக்கலாம். 'தூங்கினவன் தொடையில் திரித்தது லாபம்' என்று முதலாளி வர்க்கம் இருக்கும். ஆனால் தொழில் தர்மத்துக்கே இதில் ஆபத்து அடங்கி யிருப்பதால் எழுத்தாளர் இனியும் தூங்கி ஏமாளிகளாக இருக்கத் தயாராயில்லை. யாசித்துப் பிழைப்பது சுலபம்; ஆனால் அது மானக்கேடு. உண்மையான எழுத்தாளனின் உள்ளம் இதற்கு உடன்படாது.

அடைய வேண்டிய உரிமையை அதட்டிக் கேட்டு அடைவ தென்ற துணிவு எழுத்தாளரிடையே தோன்றி வரு கிறது. ஏழ்மைத்தனம் இருப்பானேன்? எதிரியிடம் தங் கள் பிறப்புரிமையை அற்பத்துக்கு விற்றதே இதற்குக் கார ணம் என்பதையும் உணர்ந்து விழிப்பையும் அடைந்திருக் கின்றனர்.

வாழ்க்கை நிலை உயர வழிசெய்தாக வேண்டுமென்ற எழுத்தாளரின் வற்புறுத்தல்கள் அதிகரித்திருக்கின்றன. சமீபத்தில் நடந்த தமிழ் நாட்டுப் பத்திரிகை எழுத்தாளர் மகாநாட்டுத் தீர்மானம் இதற்குச் சரியான எடுத்துக்காட்டு. அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மகாநாடும் எழுத்தாளர் வாழ்க்கை நிலைமை சீர்பட, பரிசீலனைக்கு ஒரு கமிட்டி நிய மித்திருக்கிறது. எழுத்தாளர் பசி விஷயத்தில் இனியும் பராமுகமாக இருக்க முடியாதென்ற உணர்வு பிறந்திருக் கிறதென்பதற்கு இது ஓர் அறிகுறி. பத்திரிகை எழுத் தாளர் நிலைமையும், பொதுவாக எல்லா எழுத்தாளர் வாழ் வும், உயரும் நற்காலம் வரலாம். அதைக் காட்டும் அடையா ளங்களே இவை.

# காசி யாத்திரை

சகோதரி சுபலக்ஷ்மியம்மாள்

ஆயுளில் ஒரு முறையாவது காசிக்குப் போய்க் கங்கையில் ஸ்நானம்செய்து விசுவநாதரைத் தரிசிப்பதில் நமக்கெல்லாம் எவ்வளவோ மகிழ்ச்சி ஏற்படுகிறது. 1908-ல் என் பெற்றோர் ஒருமுறை காசியாத்திரைக்குப் புறப்பட்டார்கள். நானும் அவர்களோடு சென்றேன். வைதிக முறைப்படி புரோகிதர்களை அழைத்து யாத்திராதானமெல்லாம்செய்து விட்டுக் கிளம்பினோம்.

இடையிலே புண்ணிய நதியாகிய கிருஷ்ணாநதியில் நீராட வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. பெஜவாடாவில் இறங்கினோம். அங்கே ஒரு சத்திரம். அதில் ஒரு பெரிய முற்றம். அதன் நடுவில் ஒரு கிணறும், சுற்றி நாற்புறமும் தாழ்வாரங்களும், பிரயாணிகள் தங்குவதற்கான அறைகளும் இருந்தன.

தெலுங்குப் பிராமணர் ஒருவர் நீராடவந்தார். கிணற்றடியில் நின்று அவர் ஸ்நானம்செய்தது நிரம்ப வேடிக்கையாய் இருந்தது. ஒரு சிறு செம்பினால் நாலு செம்பு தண்ணீரைக் கிணற்றிலிருந்து இழுத்தார். இரண்டு செம்பு நீரில் தம் இடுப்பிலிருந்த அழுக்கு வேஷ்டியை நனைத்துக் கொண்டார். மற்ற இரண்டு செம்பு நீரைத் தலையில் கொட்டிக் கொண்டார். அவ்வளவுதான்: ஸ்நானம் முடிந்தது. ஒரு மடிசஞ்சியிலிருந்து தண்ணீரே கண்டறியாத அழுக்குப்

படிந்த பட்டு மடி ஒன்றை எடுத்துக் கட்டிக்கொண்டார். ஏதோ மந்திரத்தைச் சொல்லி முணுமுணுத்துக்கொண்டே போய்விட்டார். சமீபத்திலிருந்த அழகான கிருஷ்ணாநதியில் அமிழ்ந்து நீராடித் துணிகளைச் சுத்தமாய்த் துவைத்துச் சுசி யாக இருக்க வேண்டுமென்ற எண்ணம், பாவம், உள்ளூர் வாசிகளுக்கு இருப்பதில்லை. ஆனால் நாங்கள் ஆனந்தமாய்க் கிருஷ்ணாநதியில் நீராடி,பின் அந்த ஊரைச் சுற்றிப்பார்த்து விட்டு மறுநாள் ராஜமகேந்திரபுரம் சென்றோம்.

அங்கே கோதாவரிக் கரையில் ஓரிடத்தில் கூழாங்கற்கள் சிறியதும்பெரியதுமாக ஏராளமாய்க் குவிந்துகிடக்கின்றன. இதுகாரணமாகத்தான் போலும் அந்த இடத்துக்கு கோடி லிங்கத்துறை என்று பெயர். அந்தத் துறையிலே நாங்கள் ஸ்நானம் செய்தோம். பிறகு கல்கத்தா சென்று அங்கே ஒரு வாரம் தங்கி அங்குள்ள ஜைனர் கோயில், மல்லிக் அரண் மனை முதலிய காட்சிகளையெல்லாம் பார்த்தோம். ஒருநாள் இரவிலே அங்கிருந்து மீண்டும் கிளம்பி மறுநாள் பகல் பன்னிரண்டு மணிக்குக் காசி க்ஷேத்திரத்தை அடைந்து அங்குள்ள ஹனுமான் மடத்தில் தங்கினோம்.

காசிக்கு வாரணாசி என்றும் பெயர். வாரணை, அசி என்ற இரண்டு உபநதிகள் அங்கு வந்து கங்கையில் சேருவதால் காசிக்கு இந்தப் பெயர் வந்தது. கங்கையிலே ஸ்நானம் செய் வதற்குரிய படித்துறைக்குக் கட்டம் என்ற பெயர் வழங் கும். காசியிலே அனேகக் கட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கட்டத்திலும் சிறிய கோயில்கள் உள்ளன. இவற்றுள் முக்கியமானவை விசுவேசுவர கட்டமும், விசுவநாதர் கோயிலும்.

தென்னிந்தியாவிலே மனத்தைக் கவரும் அழகான பெரிய கோபுரங்களுடன் கூடிய கோயில்களைவிட, புகழ்பெற்ற அந்தக் காசிக் கோயில் எவ்வளவோ சிறப்பாய் இருக்கும்

என்று நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால் அதன் சிறிய கோபுரத்தையும் வீடுபோலிருந்த அந்தக் கோயிலையும் பார்த்தபோது எங்களுக்கு மிகுந்த ஏமாற்றமுண்டாயிற்று. உள்ளே நான்கு தாழ்வாரம். பின்புறத்தில் கர்ப்பகிரகம் அமைந்திருந்தது. அதில் ஐந்து ஆறு அடி சதுரமும் ஒன்றிரண்டடி ஆழமுமுள்ள ஒரு சிறு தொட்டி முற்றம் இருந்தது. இதன் நடுவில் சிறியதொரு சிவலிங்கம். இதுவே விசுவநாதர் உருவம். தாழ்வாரத்தில் ஒரு பக்கமாக விசாலாக்ஷி அம்மையின் திருவுருவம் இருந்தது.

பக்தர்களும் யாத்திரையாக வந்தோரும் கங்கையில் நீராடிவிட்டுச் செம்பில் ஜலமெடுத்து வந்து அதை அவர்களே லிங்கத்திற்கு அபிஷேகம்செய்து சில மலர்களால் அருச்சித்துக் கற்பூர ஆரத்தி எடுக்கிறார்கள். பிறகு தங்களுக்கு ஏதோ இஷ்டமான காணிக்கையை அந்த முற்றத்தில் போட்டுவிட்டு விசுவநாதரை வலம்செய்து திரும்புகிறார்கள். பகல் பன்னிரண்டு மணிக்குள் முற்றமானது அபிஷேக நீரினால் நிறைந்து சிவலிங்கம்கூடத் தெரியாமல் மூடிவிடும். அங்கே அருகில் உட்கார்ந்திருக்கும் அர்ச்சகர்கள் அப்போது கோயில் கதவை மூடிவிட்டு முற்றத்து நீரை வடியச்செய்து அதிலுள்ள காணிக்கைப் பணத்தைச் சேர்த்து எடுத்துக் கொள்கிறார்கள். இந்த அர்ச்சகர்களுக்குப் பண்டாக்கள் என்ற பெயர் வழங்குகிறது.

நாங்கள் போன சமயம், கங்கையில் வெள்ளம் அதிகமாக இல்லை. அரை ஆறுதான் நீர் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அங்கு நடந்த சில விஷயங்கள் மனத்துக்கு மிக்க அருவருப்பாயிருந்தன. விசுவேசுவர கட்டத்தில் படித்துறைக்குப் பக்கத்தில் உயர்ந்த அகன்ற மேடையில் பிணங்களை எரிக்கிறார்கள். முக்கால் பாகம் எரிந்தவுடனேயே, அவற்றையெல்லாம் அப்படியே கங்கையில் தள்ளிவிட்டு,

அடுத்த பிணத்தை எரிப்பதற்குச் சிதை தயாராக்குகிறார்கள்! சில சமயம் இரண்டு பிணங்கள் கூட அடுத்தடுத்து இரண்டு சிதையில் எரிந்து கொண்டிருக்கின்றன. இந்த இடத்திலும் 'அனுமந்த கட்டம்' என்ற கட்டத்திலும் பிணங்களை எரிப்பது மிகப் புண்ணியமென்று மக்கள் கருதுகிறார்கள். இறந்துபோன இளங் குழந்தைகளைத் துணியில் மூடிப் படகில் நடு ஆற்றுக்குக் கொண்டுபோய் நீரில் போட்டு விடுகிறார்கள். கரையில் எத்தனையோ நாவிதர்கள் குப்பைகளையெல்லாம் நதியில் போடுகிறார்கள். இறந்துபோன நாய் எலி எல்லாம் நதியில்தான். ஊரிலுள்ள சாக்கடைகளெல்லாம் ஆங்காங்கு நதியில் வந்து சேருகின்றன.

புனிதமான கங்காதேவி இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டும் தன் புனிதத் தன்மை கெடாமலிருக்கிறாள். லக்ஷக்கணக்கான யாத்திரிகர்களுக் கிடையில் காலரா முதலிய வியாதிகள் அதிகமாய்ப் பரவாமற் செய்கிறாள். இதற்குக் காரணம், கங்கா ஜலத்தில் நோய்க் கிருமிகளைக் கொல்லக்கூடிய ஒருவிதக் கிருமிகள் இருப்பதுதான் என்று ஜலத்தைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டர்கள் சொல்கிறார்கள்.

அந்தக் காலத்தில் கங்காதேவியிடம் ஒரு பெரிய மகத்துவம் இருந்ததாகப் பேதை ஜனங்கள் நம்பினார்கள். அதாவது, புண்ணியம் செய்துள்ள சுமங்கலிகளைக் கங்காதேவி தனக்குள் ஐக்கியம் செய்துகொண்டு, அவர்களைச் சுவர்க்கத்துக்கே நேரில் அழைத்துச் செல்கிறாளாம்! நல்ல ஆபரணங்களணிந்து கொண்டு கங்கையில் ஸ்நானஞ்செய்ய இறங்கின அனேகப் பெண்மணிகள் மாயமாய் மறைந்தனர். இவ்விதம் அருமையான மனைவிகளையும் பெண்களையும் இழந்தோர் அனேகர். இந்த மாயத்தின் மர்மம் விளங்காமல், மேற்படி கதையை நம்பிக்கொண்டு ஒன்றும் செய்ய இல்லாதவர்களாய் ஊர் திரும்பினர்.

பிறகு ஒரு சமயம் ஹிந்து சமஸ்தானத்தின் அரசர் ஒருவர் அங்கே சென்றிருந்தபோது, இக்கதையை நம்பாமல், அதன் உண்மையைக் கண்டுபிடிக்கத் தீர்மானித்தார். பல ஆட்களை ஸ்நானக் கட்டங்களிலிருந்து கவனிக்கும்படி செய்து, வெகுநாளாக நடந்து வந்த சூதைக் கண்டுபிடித்தார். திருட்டுக்கூட்டத்தார் சிலர் நீரில் நன்ருய் நீந்தவும், ஜலத்துக்குள்ளேயே சிறிது நேரம் மூச்சை யடக்கிக்கொண்டு இருக்கவும் பழக்கஞ் செய்துகொண்டு, பிரவாக காலத்தில் நிரம்ப ஆபரணங்களுடன் பெண்கள் ஸ்நானஞ் செய்யுமிடத்தில் மறைந்திருந்து ஜலத்துக்குள்ளேயே நீந்தி வந்து இரண்டிரண்டு துறைகளுக்கிடையிலுள்ள நீண்ட சுவர்களின் பக்கமாக இழுத்துச்சென்று தனியான இடத்திலோ அல்லது ஜலத்துக்குள்ளேயோ அமிழ்த்தி, நகைகளைக் கழற்றிக்கொண்டு பிணத்தை நடு வெள்ளத்தில் விட்டுவிடுவார்கள். இந்தச் சூதைக் கண்டுபிடித்து விளம்பரப் படுத்திய பிறகு, ஜனங்கள் ஜாக்கிரதையா யிருக்க ஆரம்பித்தனர்.

இரண்டாம் முறை நாங்கள் காசிக்குச் சென்றபோது எங்களுக்கே இந்தச் சூது நேரில் தெரியவந்தது. ஒருநாள் நாங்கள் ஜலத்தில் அமிழ்ந்து ஸ்நானம் செய்து கொண்டிருந்தபோது, என் தங்கைபடியில் நின்றுகொண்டு வெள்ளத்தின் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது பக்கத்துத் துறையிலிருந்து நீந்திக்கொண்டு வந்தவனெருவன் நீரினுள் முழுகி மேலே வராமலிருந்ததைக் கவனித்து, எங்களை உரக்கக் கூவி, உடனே கரையேறச் சொன்னுள். நாங்கள் பயந்துகொண்டு கரையேறியபின், அந்த மனிதன் சற்றுத் தூரம் சென்று, தலையை மேலே தூக்கி எங்களை ஒருமுறை பார்த்துவிட்டு நடுச் சுவரைத் தாண்டி அடுத்த படித்துறையில் மறைந்துவிட்டான்!

கங்கைக்கரையை யடுத்துள்ள தெருக்களெல்லாம் மிகக் குறுகலானவை. பல தெருக்களில் படித்துறைக்குப் போகும் வழியில் சிமெண்டுக் கற்கள் போட்டிருக்கிருர்கள். நதியில் ஸ்நானஞ் செய்து ஈரத்துடன் ஜனங்கள் நடப்பதால், அந்தத் தெருக்களில் சேறும் களியும் கலந்த ஜலத்தின்மேல் தான் நடக்கவேண்டும். ஆரம்பத்தில் எனக்கு அது சற்று அருவருப்பாயிருந்தது. ஆனல், அப்படி நடந்ததில் நாலைந்து நாட்களுக்குப் பிறகு என் உள்ளங்கால்களிலிருந்த வெடிப்புக்களெல்லாம் மறைந்துபோய், கால் மிருதுவாக ஆகிவிட்டது. கங்கையில் கலந்துவரும் நுண்ணிய களிக்கு இந்தச் சக்தியிருந்ததைக் கண்டு வியந்தோம்.

பிற்காலத்தில் பிரான்சு தேசத்துக் களிமண் ஸ்நானத்தைப் பற்றிப் படித்தபோது கங்கை மண்ணின் நன்மை ஞாபகத்துக்கு வந்தது. நம் பெரியோர் காலத்தில் கைகால்களை மண்ணினல் சுத்தஞ் செய்துகொள்வதைப்பற்றிக் கேட்டிருக்கிறேன். ஆனல் அந்த மண்ணும் சுத்தமா யிருக்க வேண்டுமென்பதை உணரவேண்டும். சில வியாதிகளுக்கு உபயோகப்படுத்தும் 'அன்டிபிளாஜிஸ்டன்' என்பது, ஒருவித வெள்ளைக் களிதான். உடம்புப் பொடியுடன் சுத்தமான வெள்ளைக் களிமண்ணையுஞ் சேர்த்து உபயோகித்தால் தோல் மிருதுவாகும். காசி, பிரயாகை முதலான இடங்களில் கங்கையில் ஸ்நானம் செய்ய வரும் அந்நாட்டுப் பெண்கள் பலர் சிறு சிறு சட்டிகளில் விற்கும் கெட்டியான தயிரைத் தலையில் தேய்த்துக் கொண்டு கடலைமா அல்லது களிமண்ணை நீரில் கரைத்துத் தேய்த்து முழுகுகிருர்கள்.

காசியில் ஒருவாரந் தங்கி, ஹிந்துக் கல்லூரி முதலான பல இடங்களையும் பார்த்துவிட்டுப் பிறகு பிரயாகைக்குச் சென்று அங்குள்ள சிவமடத்தில் தங்கினேம்.

தென்னிந்தியாவிலிருந்து வரும் யாத்திரிகர்களின் உதவிக்காகத் தென்னிந்தியப் பிராமண வைதிகர்கள் அனேகர் காசி, பிரயாகை, கயை, ஹரித்துவாரம் முதலிய இடங்களிலிருக்கிறார்கள். அந்தத் தேசத்துப் பண்டாக்கள் அனேகரும் வைதிக விஷயங்களைக் கவனிக்கின்றனர். அவ்விடத்துப் பாஷை தெரியாத நம்மவர்களுக்கு, நம் நாட்டு வைதிகர்கள் மிக்க உதவியாயிருக்கின்றனர்.

அலகபாத்துத்தான் பிரயாகை ; திரிவேணி என்ற பெயரும் இதற்கு உண்டு. கங்கை யமுனை என்ற இரண்டு நதிகள் இங்கே கூடுகின்றன. அந்தர்வாஹினியான சரசுவதிநதியும் கங்கை யமுனையுடன் இங்கே கலப்பதாக ஐதிகம். ஆகவே இந்த மூன்று நதிகளும் சேருமிடம் திரிவேணி எனப்படும். கங்கை நீர் சற்று வெளுப்பாயும், யமுனை நீர் கறுப்பாயுமிருக்கிறது. ஆற்றின் நடுவில் இவை கூடுமிடத்துக்குப் படகுகளில் சென்று ஸ்நானம் செய்வதுமுண்டு.

ஆடவர் க்ஷவரம் செய்துகொண்டு சங்கல்பம் செய்துவிட்டு, ஸ்நானம் செய்கிறார்கள். சுமங்கலிகள் அந்த க்ஷேத்திரத்தில் 'வேணிதானம்' செய்வது (அதாவது கூந்தலைத் தானம் செய்வது) மிகவும் புண்ணியமாம். கங்கைக் கரையில் மனைவியின் தலைமயிரைப் பின்னி மேளதாளத்துடன் அந்தப் பின்னலிலிருந்து இரண்டு மூன்று அங்குலம் கத்தரித்து அதைத் தட்சிணையுடன் ஒரு பிராமணனுக்குக் கொடுக்க வேண்டும். குறைந்த தட்சிணை பதினைந்து ரூபாய். பக்தியும் நம்பிக்கையும் பூர்ணமாயுள்ள சில சுமங்கலிகள் திருப்பதி மொட்டைபோல வேணி முழுவதையுமே களைந்து மிகுந்த தட்சிணையுடன் தானஞ் செய்கிறார்கள்.

என் தகப்பனாருக்கு இதில் நம்பிக்கையே யில்லையாதலால், என் தாயார் வேணிதானம் செய்யவேண்டியதில்லை யென்று தீர்மானித்து விட்டார். இந்தத் தீர்மானத்தைத் தெரிந்து

கொண்ட சிவமடத்து வைதிகர், தம் வரும்படி குறைந்து போகும் என்ற வருத்தத்தினுல், வேணிதானம் செய்யாமற் போனுல் மிகுந்த பாவம் சம்பவிக்கும் என்றும், பலவித கஷ்டங்கள் உண்டாகும் என்றும் சொல்லி, என் தாயார் மனத்தைச் சஞ்சலத்துக்குள்ளாக்கினுர். அங்கு வந்த ஒரு குடும்பத்தினர், வேணிதானஞ் செய்யாமல் கயைக்குப் போனவுடனே, ஒரு குழந்தை இறந்துபோய், குடும்பத் தலைவருக்கும் தேக அசௌக்கியம் ஏற்பட்டதாம்! உடனே அவர்கள் பயந்துகொண்டு, திரும்பிப் பிரயாகைக்கு வந்து, வேணிதானம் செய்துவிட்டுப் போனுர்களாம்.

மற்றொரு குடும்பத்தினர், வேணிதானஞ் செய்யாமலும் அதைப்பற்றி ஏளனமாகப் பேசிவிட்டும் போனுர்களாம். கோதாவரி ஸ்டேஷனுக்குப் போவதற்குள், குடும்பத் தலைவர் திடீரென்று மாரடைப்பினுல் இறந்து போனுராம்! அதற்கு முன்பே ரயிலில் தூங்கிக்கொண்டிருந்த அவர் மனைவியின் கனவில் கோதாவரி தேவி பிரசன்னமாகி, "என் தங்கையாகிய கங்கா தேவிக்கு உன் வேணியைக் கொஞ்சமும் கொடுக்காமல் வந்தாய். ஆதலால் அதை முழுவதும் நான் வாங்கிக்கொள்ளப் போகிறேன்" என்று சொன்னுளாம்! அந்த அம்மாள், பாவம், கோதாவரியி லிறங்கி, இறந்துபோன கணவனுக்கு வேண்டிய அபரக்கிரியைகளைச் செய்துவிட்டுப் பதினொராம் நாள் தன் கூந்தல் முழுவதையும் களைந்துவிட்டு வெள்ளைப் புடவை யுடுத்தி ஊர்போய்ச் சேர்ந்தாளாம். இதைப்போன்ற இன்னும் சில பயங்கரமான உதாரணங்கள்.

"நீங்கள் பெரிய சுமங்கலியா யிருக்கிறீர்கள். உங்கள் கணவரோ பிடிவாதமான நாஸ்திகரா யிருக்கிறுர். உங்களுக்கு வேண்டி மூன்று ரூபாய் தட்சிணை மாத்திரம் வாங்கிக்கொள்கிறேன் நீங்கள் வேணிதானம் செய்துவிட்டுத்தான் போக

வேண்டும்'' என்று அவ்வைதிகர் சொன்னார். என் தாயாருக்கும், முதலில் அவ்வுதாரணக் கதைகளை யெல்லாம் கேட்டுச் சற்றுச் சபலம் உண்டானாலும், பிறகு கடவுள் பக்திக்கும் வேணி கொடுப்பதற்கும் சம்பந்தமில்லை, இதெல்லாம் பணம் பறிப்பதற்கான வழி என்று மனத்தைச் சமாதானம் செய்துகொண்டார்.

ஸ்நான கட்டத்தில் விற்கும் புஷ்பம் பால் இவற்றை வாங்கி 'கங்கா மாஜி'க்கு அபிஷேக அர்ச்சனை செய்து படகில் சென்று திரிவேணி சங்கமத்தில் ஸ்நானம் செய்தோம். கங்கைக் கரையில் ஓரிடத்தில் நிலப் பரப்புக்குக் கீழ் ஒரு நீண்ட பெரிய நிலவறை. அங்கு அந்த க்ஷேத்திர சம்பந்தமான புத்தகங்கள் படங்கள் முதலிய வியாபாரம். ஒரு பெரிய மரத்தின் அடிமரம் காய்ந்திருந்தது. அதன் மேற்பாகந்தான் கயையிலுள்ள கிளைகளும் இலைகளும் கூடிய வட விருக்ஷமாம். (அதன் வேர் எங்கோ இருப்பதாகச் சொன்னார்கள், ஞாபகமில்லை.) அந்த அடிமரத்தின் எதிரில் துணியை விரித்து இருவர் அதன் பக்கத்தில் உட்கார்ந்து காசுபோடச் சொல்லிக் கேட்கின்றனர். இப்படிக் காசு சம்பாதிப்பதற்கு வேண்டிப் பற்பல ஏற்பாடுகள். வெளியில் வந்து பழைய காலத்துக் கோட்டை ஒன்றைப் பார்த்தோம். நாலைந்து நாள் அங்கிருந்துவிட்டுப் பிறகு கயைக்குப் போனோம்.

கயையில் செல்வவந்தரான ஒரு கயாவாசிக்குக் கடிதம் எழுதியிருந்தோம். அவர் ஸ்டேஷனுக்கு அனுப்பியிருந்த ஒரு வைதிகருடன், நம்மூர் ஜட்கா குதிரைகளைப் போன்ற பலவீனமான இரண்டு குதிரைகள் கட்டிய கோச்சு வண்டியொன்றில் ஏறிக்கொண்டு, எங்களுக்காக ஒழித்து வைத்திருந்த ஒரு வீட்டில் போய்த் தங்கினோம். அந்த ஊருக்குப் போகும் யாத்திரிகர்கள் பதினைந்து இரவு அல்லது ஒன்பது

இரவு அல்லது மூன்று இரவாவது தங்கி, கோயிலிலுள்ள விஷ்ணு பாதம், நதிக்கரை, வட விருக்ஷம் இந்த மூன்று இடங்களிலும் பிதிர்க்களுக்குத் தர்ப்பணம் சிரார்த்தம் செய்து பிண்டம் போடவேண்டும். எங்களுக்கு அவகாச மில்லாமையால் ஒரே இரவுதான் அங்குத் தங்க முடிந்தது. முதல்நாள் பிற்பகல் அங்குப்போய் மறுநாள் இரவு புறப் பட்டுவிட்டோம்.

அந்த ஊர்த் தெருக்களும் காசியைப்போலக் குறுக லானவை. அசுத்தமோ சொல்லமுடியாது. நாங்கள் அங்கே போன மறுநாள், தென்தேசத்து அம்மாள் ஒருத்தியைச் சிராத்த சமையல் செய்ய ஏற்படுத்திவிட்டு, நாங்கள் ஆற் றுக்குச் சென்று ஸ்நானம்செய்து, கோயிலில் விஷ்ணு பாத தரிசனம் செய்துகொண்டு வட விருக்ஷம் பார்க்கப் போனோம்.

விருக்ஷத்தைச்சுற்றி உயர்ந்த சதுரமான பெரிய மேடை. அங்கு விருக்ஷத்தின் நிழலில் சுமார் முப்பது நாற்பது பேர் உட்கார்ந்து எதிரில் வாழை இலையில் வடித்த அன்னமும் எள்ளும் வைத்துக்கொண்டு, ஸ்தாதைகளுக்குப் பிண்டம் வைத்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு மூன்று பேருக்கு ஒரு வைதிகராக எதிரில் உட்கார்ந்து, மந்திரம் சொல்லி வைக்கிறார். "உம், இன்னும் யார் யாருக்குப் பிண்டம், ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றார் வைதிகர். பெற் றோர், கூடப்பிறந்தவர்கள், வயிற்றிற் பிறந்தவர்கள், இன் னும் கிட்டின பந்துக்கள், யார் யார் இறந்து போனவர் களோ அவர்கள் பெயரை ஒவ்வொன்றாகச் சொல்லி ஒவ் வொரு பிண்டமாக எடுத்து வைத்து எள்ளும் தண்ணீரும் அதன்மேல் போடுகிறார்கள். இந்த வைதிகர் யாவரும் தென் இந்தியப் பிராமணர்களே.

அந்த ஊரில், சிதம்பரம் தீக்ஷிதர்களைப்போல நூற்றுக் கணக்கான கயாவாசிகள் இருக்கிறார்கள். பரம்பரையாக இவர்களுக்கு வைதிகத் தொழில்தான். இவர்கள் பிரம்ம புத்திரர்களாம். இவர்களுக்கு இந்த ஒரே ஜன்மந்தானும். பிரம்மாவே இவர்களைக் கயாவில் வந்து அவதரிக்கச்செய்து அங்கு வரும் யாத்திரிகர்களது பாவத்தைப் போக்கி, 'சுபஸ்வீகரணம்' சொல்லி முத்தியளிப்பதற்காக ஏற் படுத்தி யிருக்கிறாராம். இவர்களே நேரில் வந்து வைதிகக் காரியங்களைச் செய்துவைப்பது கிடையாது. சிராத்த ஓம அக்கினிக்கு எதிரில் வந்து உட்கார்ந்தால், தென்னாட்டு வைதிகர் ஒருவர்தான் மந்திரம் சொல்கிறார். கயாவாசிகள் 'பிராமணார்த்த போஜனம்' செய்கிறார்கள். பிறகு வட விருக்ஷத்தின் கீழ் யாத்திரிகர்களுக்குச் சுபஸ்வீகரணம் சொல்லி ஆசீர்வதிக்கிறார்கள். பெருந் தொகையான தட் சிணை வாங்கிக்கொண்டு, தங்களிடம் வேலை செய்யும் தென் தேச வைதிகர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள்.

நாங்கள் வடவிருக்ஷம் பார்க்கப் போனபோது அந்த ஊரில் பதினைந்து நாளிருந்து செய்யவேண்டிய கர்மங்கள் யாவும் முறையாகச் செய்து முடித்த தென்தேசத்து வயோதிக அந்தணர் ஒருவர் அங்கே காத்திருந்தார். சுமார் பதினெட்டு வயதுள்ள ஒரு கயாவாசிச் சிறுவன், பட்டுச் சரிகையாலான நிஜார், நீண்ட சட்டை, தலையணி, கழுத்து ஆபரணங் களுடன் ஒரு பல்லக்கில் வந்திறங்கிக் கம்பீரமாக இந்த அந்தணருக்கெதிரில் வந்து நின்றான். இவர்களுக்கிடை யில் மொழிபெயர்த்துச் சொன்ன தென்னாட்டு வைதிகர் ஒரு வர் சுபஸ்வீகரணம் சொல்வதற்கு இருபத்தைந்து ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். (இந்தத் தொகை அவரவர்களுக்குள்ள சொத்தின் மேல்தான் கணக்கிடப் படுகிறது.) அந்த ஏழை அந்தணர், பாவம், தம்மால் அத்தனை கொடுக்க இயலாதென்றும், கொண்டுவந்த பணம்

யாவும் செலவாகிவிட்ட தென்றும், திரும்பி ஊர் போய்ச் சேர்வதற்கே பணம் போதாதென்றும் மன்றுடினர். கடைசியில் பேரம் பேசி, பதினைந்து ரூபாய் கொடுப்பதாக முடிவாயிற்று. அதுவரைக்கும் அலட்சியமாய் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த கயாவாசி, பேரம் முடிந்தவுடன் புன்சிரிப்போடு அந்த ஏழை அந்தணரைக் கடாட்சித்து, வாடிப்போன ஒரு மாலையை அவர் கழுத்தில் போட்டு, முதுகில் தட்டிக் கொடுத்து, "உன் பிதிர்க்கள் யாவரும் கரையேறி விட்டார்கள்" என்று சுபஸ்வீகரணம் சொல்லிவிட்டுப் பிறகு பல்லக்கிலேறிப் போய்விட்டான். அந்தணரும் சந்தோஷமாய் வைதிகர் சொற்படி வட விருக்ஷத்தின் கீழிருந்து கொண்டு ஓர் இலை, ஒரு காய், ஒரு பழம்-இவற்றை விட்டுவிடுவதாய்ச் சபதம் செய்துவிட்டுப் போனுர்.

பத்து மணிக்கு வீடு திரும்பினேம். சிரார்த்த சமையல் தயாராயிருந்தது. வைதிகப் பிராமணர் உதவியுடன் என் தகப்பனுர் சிராத்தம் செய்து முடித்து, கோயிலில் விஷ்ணு பாதத்தில் பிண்டம் வைத்துவிட்டு வந்தார். ஆல விருக்ஷத்தின் கீழ்ப் பார்த்த அதே கயாவாசிப் பையன் சிரார்த்தச் சாப்பாட்டுக்கு வந்தான். இலையில் சிறிதளவு அன்னம், அதன்மேல் நிறைய நெய், பருப்பு இவற்றைக் கலந்து மிகக் குறைவாகவே சாப்பிட்டு, மற்றக் கறி வகைகளையெல்லாம் சிறிது ருசி பார்த்துவிட்டு, எழுந்து தாம்பூலம் வாங்கிக்கொண்டு போய்விட்டான். விசாரித்ததில், இவன் இன்னும் நாலைந்து இடங்களில் சிரார்த்த சாப்பாடு உண்ண வேண்டுமென்றும், ஒவ்வோர் இடத்திலும் இந்தமாதிரிச் சிறிதளவே சாப்பிடுவதுதான் வழக்கமென்றும் தெரிந்தது. இவன் தகப்பனுர் வைதிகத்திலேயே சம்பாதித்த லட்சப் பிரபு. அவர்தான் எங்களுக்கு இடவசதியெல்லாம் செய்திருந்தவர்!

அன்று நாங்கள் சாப்பாடாகி இளைப்பாறிக் கொண்டிருந்த போது, அவர் என் தகப்பனுரைத் தம்மிடம் வரும்படி ஆளனுப்பினுர். என் தகப்பனுர் அவர் வீட்டுக்குப் போனவுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுத் தாமாகவே என் தகப்பனுருக்கு சுபஸ்வீகரணம் சொல்லி ஒரு வெள்ளி விஷ்ணு பாதமும் சிறிதளவு அட்சதையும் கொடுத்தனுப்பினுர். எங்களைச் சேர்ந்தவர்கள் யார் வந்தாலும் அவருடைய விலாசத்துக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டு, என் தகப்பனுர் விலாசத்தையும் வாங்கி வைத்துக் கொண்டார். என் தாயார் அந்த அட்சதை அரிசியை வாங்கி, ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டிருந்து, பட்டணம் திரும்பினதும் வீட்டிலிருந்த அரிசியுடன் அதைச் சேர்த்துவிட்டார். அரிசிக் கஷ்டமின்றி அட்சயமாயிருக்குமென்பது நம்பிக்கை!

அன்றிரவு ரயிலுக்குப் போவதற்கு அந்தக் கயாவாசி தம் வண்டியில் எங்களை ஸ்டேஷனுக் கனுப்பினுர். அந்தப் பக்கத்து ஸ்டேஷன்களில் டிக்கட்டு விற்கும் கிளார்க்குகளோ மகா மோசம். மூன்று டிக்கட்டு வேண்டுமென்று கேட்டோம். அரைமணி நேரம் கணக்குப் பார்த்துவிட்டுக் கடைசியில் மூன்று அரை டிக்கட்டுக்கள் கொடுத்துச் சில்லறையும் கொடுத்தான். அதுவரைக்கும் பொறுமையுடன் காத்துக்கொண்டிருந்த எங்களுக்கு எப்படியிருக்கும்? சிரிப்பு ஒரு பக்கம். ரயில் தவறிவிடப் போகிறதே என்னும் அவசரம் ஒரு பக்கம். பிறகு நாங்கள் முழு டிக்கட்டு என்பதை அந்த முழு முட்டாளுக்கு எடுத்துச் சொல்லி டிக்கட்டுக்குள்ள தொகையையும் கணக்கிட்டுக் கொடுத்துவிட்டு, டிக்கட்டைப் பெற்று வந்துசேர்ந்தோம்.

# இரு வேறுலகம்

எஸ். வேங்கடசுப்பிரமணியம்

ஸ்ரீமான் சங்கரய்யர் பிரபல விஞ்ஞானி. பல ஆராய்ச்சிகள் செய்து புதுப்புது உண்மைகளை உலகுக்குக் காட்டியவர். மேல் நாட்டவர்கள் இவருடைய ஆராய்ச்சியைப் பிரமாதமாகப் பாராட்டி, அனேகப் பரிசுகள் வழங்கி யிருக்கிறார்கள். அமெரிக்காவுக்குப் பல தடவை சென்று தம் ஆராய்ச்சிகளை அங்குள்ளவர்களுக்கு விளக்கியிருக்கிறார். அங்கேயே சில வருஷம் தங்கி ஆராய்ச்சி நடத்திப் புது முடிவுகளைக் கண்டிருக்கிறார்.

சொந்த நாட்டிலும் இவர் உதவியை நாடி ஆராய்ச்சிகள் நடத்திய மாணவர் பலர். அவர்களுக்கெல்லாம் உற்சாக மூட்டி, சரியான வழியையும் காட்டி அவர்கள் நன்மதிப்பையும் பெற்றிருக்கிறார். அந்த மாணவர்களைப் போய்க் கேட்டாலே போதும். 'சங்கரய்யரைப்போல உலகில் உண்டா ஒருத்தர்' என்பார்கள். அவரிடத்தில் அவ்வளவு நன்றியும் விசுவாசமும். அவர் உண்மையை நாடிச் செல்லுகிறார் தம்முடன் உண்மையை நாட வருகிறவர்களுக்கு, தாம் கண்டதைச் சொல்லுகிறார்.

சங்கரய்யரிடம் பல மாணவர்கள் படித்துப் போயிருக்கிறார்கள். அவருடைய அனுபவத்தில், பட்டம்பெற்றதும், ஆராய்ச்சி செய்ததுபோதும் என்று நிறுத்திக்கொண்டவர்களும், பட்டந்தான் லட்சியமென்று ஆராய்ச்சி செய்யவந்து

னிறுத்திக்கொண்டவர்களுமே அதிகம். இன்னும் சிலர், இவருடனிருந்தால் எங்கேயாவது ஒரு காலேஜில் ஆசிரியர் வேலை ஒன்று கிடைத்துவிடாதா என்றே ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆனால், இப்போது ஒரு புதுமை கண்டார். மாணவர் ஒருவர் அவரிடம் வந்தார். ஆனர்ஸ் படித்தவர் என்றாலும், பரீட்சைகளைப் பொருட்படுத்தாமலே படித்திருக்கிறார். விஞ்ஞானத்தில் ஒரு பகுதியைப் பிரமாதமாக ஆராய்ந்திருக்கிறார். உலகத்தில் இன்றுவரை அதைப்பற்றி யார் யார் என்ன என்ன சொல்லியிருக்கிறார்களோ அவ்வளவும் அவருக்குத் தெரியும். அதனுடன் தம் சொந்த ஆராய்ச்சியில் சில முடிவுகளைக் கண்டு வைத்திருந்தார். சங்கரய்யரிடம் வந்தவுடன் பிரமாதமாக ஆராய ஆரம்பித்துவிட்டார். சங்கரய்யருக்கே திகைப்பாயிருந்தது. சாதாரணமாய் இரண்டு வருஷம் ஆராய்ச்சித் துறையிலிருந்தாலே மாணவர்களுக்குச் சலிப்புத் தட்டிவிடும். ஆனால், இவருடைய உற்சாகத்தைப் பார்க்கும்போது, சலிப்பு என்றால் இன்னது என்று இவருக்கே தெரியாதோ என்று எண்ணும்படி இருந்தது. இவர் ஆராய்ச்சிகளை வெளியிட வெளியிடப் பட்டங்களெல்லாம் வந்தன. ஆனால் இவர் பட்டம் பதவிகளைப் பொருட்படுத்தியவராகத் தோன்றவில்லை. சங்கரய்யரிடம் வந்தால், ஆராய்ச்சிகளைப்பற்றித்தான் பேச்சு. உலகத்திலே விஞ்ஞான உலகம் ஒன்றுதான் உண்டு என்று எண்ணிவந்தாரோ அவர் என்று ஆச்சரியப்படும்படி யிருந்தது.

இவரைப் பார்த்ததில் சங்கரய்யருக்குத் தம் ஆராய்ச்சி உலகம், விஞ்ஞான உலகம் எல்லாம் மறந்துபோய் விட்டது. 'இப்படியும் ஒரு பிரகிருதி யுண்டா? விஞ்ஞானம் என்றால் இப்படியும் ஒரு மனிதனைக் கவரவா செய்யும்? கடவு

ளின் மனித சிருஷ்டிதான் என்ன அற்புதம்!' என்று ஒரே அதிசயத்தில் மூழ்கிவிட்டார். மாணவரின் ஆர்வத்தில் தமக்குக் கால்பங்குக்கூட இருக்கவில்லை என்றுமே எண்ணலானார்.

* * * *

சங்கரய்யருக்கு விஞ்ஞானத்தில் வெறி என்றால், அவர் மனைவிக்குக் கலையில் மோகம். எப்போது பார்த்தாலும் அவர்கள் வீட்டு மேல்மாடியிலிருந்து கர்நாடக ராகங்களில் ஒன்றில்லாவிடில் ஒன்று வந்துகொண்டே இருக்கும். ஆம், மெல்லிய தம்புரா சுருதியுடன்கலந்து ஸஹானா வரும்போது யாருக்குமே ஒரு விநாடி வாசலில் நின்று அந்த இசையமுதத்தைப் பருகிவிட்டுப் போகத்தான் தோன்றும். இன்னொருநாள் அந்தத் தெருப் பக்கம் போனால் கதம்ப வாசனையுடன் சதங்கைச் சத்தமும் 'கல் கல்' என்று கேட்கும்; கொஞ்சம் நின்று கேட்டால், நட்டுவனார் காம்போதி ராகத்தில் இரண்டுகளைச் சவுக்கத்தில் 'இவன் ஆரோ' என்ற பாட்டுக் காதில் விழும். பாட்டின் பாவமும் சங்கீதமும் நம் முன் ஒரு பெண் அபிநயம் செய்வதுபோலவே தோன்றும். கலை அப்படி அங்கு வளர்ந்துகொண்டிருக்கும்.

சங்கீதசபாக்கள், கலை அபிவிருத்திக் கழகங்கள், எல்லாவற்றிலும் ஸ்ரீமதி ஜானகிசங்கரய்யர் பெயரில்லாமலிராது. இந்தம்மாள் இப்படி முனைந்தால் மற்ற வீட்டுப் பெண்களைப் பற்றிக் கேட்கவேண்டுமா? அவர்களும் சங்கீதம் பயில ஆரம்பித்தார்கள். தங்கள் பெண்களுக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்தார்கள். சங்கீதக் கச்சேரிகளுக்கும் சபைகளுக்கும் போகத் தொடங்கினார்கள், பிரசங்கம் செய்யத் துணிவும் ஏற்பட்டது. இப்படிப் பல துறைகளில் ஸ்ரீமதி சங்கரய்யர் காரணமாகப் பெண்கள் முன்னேற்றமடைந்தார்கள்.

இவையெல்லாவற்றையும்விட அந்த அம்மாளுக்குப் பெய ரும் புகழும் ஏற்பட்டது, ஒரு விஷயத்தைக் கருதித்தான். எத்தனையோ சங்கீத வித்துவான்களை, முன்னுக்கு வரமுடி யாமல் போயிருக்கவேண்டியவர்களை, உற்சாகப்படுத்திப் பொருளுதவியும் கொடுத்துப் பொது மக்களுக்கு அவர்க ளுடைய திறமையை அறிமுகப்படுத்தி வைத்தாள். அதனால் வித்துவான்களும் கலைஞர்களும் அந்த அம்மாளிடம் பக்தி கொண்டிருந்தார்கள்.

* * * *

அந்த மாணவர் எப்போதும்போல் தம் ஆராய்ச்சிக் கட்டு களுடன் சர்வகலாசாலைக்கு வந்தார். வந்து சங்கரய்ய ரைக்கூடப் பார்க்கவில்லை. அவர்பாட்டுக்குத் தம் ஆராய்ச்சி யில் முனைந்துவிட்டார். ஆனால் அய்யருக்கோ எண்ண மெல்லாம் வேறுவிதமாக இருந்தது.

'நாமும் விஞ்ஞானத்தில் பெயரும் புகழும்பெற்று விட்ட தாகச் சொல்லிகொள்ளுகிறோமே. ஆனால் இவருக்கிருக்கும் ஆத்திரத்தில் கால் பங்காவது நமக்கு இருந்ததா. அப்படி யானால் இவர் நம்மைவிட எவ்வளவு பெயரும் புகழும் பெற வேண்டும்' என்று எண்ணியபோது ஏதோ ஒரு எண்ணம் குறுக்கிட்டது. "டே முனியா...பியூன்" என்று கூப்பிட் டார். முனியன் வந்தான். "டேய், அவர் இருக்கிறாரே அவர் பெயர் என்ன, மறந்து போச்சு" என்று கேட்டார்.

ஆம். விஞ்ஞானத்துறையி லிருப்பவர்களுக்குத்தான் சாப் பிட்டோமா நிற்கிறோமா இருக்கிறோமா என்பது ஒன்றுமே ஞாபகமிராதே! ஆர்க்கிமிடிஸ் அரையில் துணியில்லாமலே தெருத் தெருவாய் ஓடினவரல்லவா? சங்கரய்யர் அந்த மாணவர் பெயரை மறந்ததில் ஒன்றும் அதிசயமில்லை அல்லவா?

"அவர் பெயர் மிஸ்டர் கறுப்பன் ஸார்" என்றான் முனியன்.

"கறுப்பனா? அப்படியா? என்ன சாதிக்காரர்?"

"ஏன் ஸார். அவர் ஹரிஜன்தான். அதில் என்ன சந்தேகம்?" என்று முனியன் சொன்னான்.

சங்கரய்யருக்கு அதிசயம் இவ்வளவு அவ்வளவு என்றில்லை. "ஹரிஜனா? என்னமா இருக்கு? கட்டாயம் இவரை அமெரிக்காவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும். இவர் ஹரிஜன்; அதனால் நம் அரசாங்கமே உதவி புரியும். அதில் கஷ்டமொன்றுமிராது. இவர் மேல் நாட்டுக்குப் போனால் - என்ன பெயர்! என்ன புகழ்! சே சே, பெயரும் புகழும் கிடக்கட்டும். ஆராய்ச்சிக்குத்தான் எவ்வளவு வசதிகள்! உலகமே பிரமிக்கும்படியாக உண்மைகளை எடுத்துச் சொல்லக்கூடும். கட்டாயம் இவர் மேல்நாட்டுக்குப் போக ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று அபார உற்சாகமடைந்தார். அந்த உற்சாகத்தில், நேரே அங்கு ஆராய்ச்சிச் சாலையிலிருந்த கறுப்பனிடம் போனார்.

அவரோ, தம்மையும் உலகையும் மறந்து ஆராய்ச்சியில் கண்ணுங் கருத்தோடுமிருந்தார். அவருக்கு அதைத் தவிர ஒன்றுமே தெரியாது. அந்த நிலையில் 'ஸார்' என்று சங்கரய்யர் அழைத்ததும், திடுக்கிட்டார்.

"என்ன?" என்று கேட்டார் கறுப்பன்.

"ஒன்றுமில்லை. இன்றைக்குத்தான் நீங்கள் 'ஹரிஜன்' என்பது தெரிந்துகொண்டேன்" என்று அர்த்தமில்லாமல் சிரித்துக்கொண்டே சொன்னார். அதற்குமேல் ஒரு வார்த்தை சொல்லவில்லை. தம் எண்ணத்தை யெல்லாம் ஒன்றும் சொல்லவேயில்லை.

முன்னும் பின்னும் பாராமல் தாம் சொன்னது கறுப்பனை என்ன பாடு படுத்தும் என்பது அப்பாவி சங்கரய்யருக்குத் தெரியாது.

அடுத்த நாள் எப்போதும்போல் சங்கரய்யர் கலாசாலைக்கு வந்தார். மாணவர்களும் வந்திருந்தார்கள். ஆனால் கறுப்பனைக் காணவில்லை. அவருக்கு ஒருகால் உடல் நலமில்லையோ என்று நினைத்துக்கொண்டார் சங்கரய்யர். அடுத்த நாளும் அவர் வரவில்லை. மூன்றாவது நாளும் வரவில்லை. சங்கரய்யருக்குக் கவலை சொல்லி முடியாது.

* * * *

பதின்மூன்று பதினான்கு வயது இருக்கும் அந்தப் பையனுக்கு. வெண்ணிறக் கதராடை உடுத்திருந்தான். நன்றாய்ச் சீவி விடப்பட்ட கிராப்புத் தலை. முகத்தில் நல்ல களை. நெற்றியில் சாந்துப்பொட்டு. பார்க்க அழகாயிருந்தான்.

பார்க்கில் இரண்டு நண்பர்கள் சூழ உட்கார்ந்திருந்தான். இல்லை, பாடிக்கொண்டிருந்தான். அவன் பாட்டைக் கேட்டுச் சொக்கிப்போய் உட்கார்ந்திருந்தார்கள் அவர்கள். நல்ல சாரீரம். அந்தச் சாரீரத்தில்,

உயர்ந்த சிகரக் கும்பந் தெரியுதாம்
அதைக் கண்ட பேர்க்கு

என்று சவுக்க காலத்தில் பாடிக்கொண்டிருந்தான். அந்த வழியே சென்று கொண்டிருந்த ஸ்ரீமதி சங்கரனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஏது, இவ்வளவு சுகமான சாரீரம், அதிலும் வார்த்தைகளை அழுத்தமாகச் சொல்லிப் பாடுகிறான், மயிர்க்கூச்சல் எடுக்கிறதே என்று வியந்து நின்றுவிட்டாள். பையன்,

உயர்ந்த சிகரக் கும்பந் தெரியுதாம்
அதைக் கண்ட பேர்க்கு

என்று இரண்டு தடவை, மூன்று தடவை சொல்லிப் பார்த்தான். கேட்பவருக்குத் திருப்பித் திருப்பிக் கேட்க இனிமையாகத்தான் இருந்தது. ஆனல் அவன் சங்கடம் அறிவாரில்லே. நான்காவது தடவையாக அவன் பாட ஆரம்பித்த போது ஸ்ரீமதி சங்கரனுக்கு விஷயம்விளங்கிவிட்டது. அதாவது, பையனுக்கு அடுத்த வரி மறந்துவிட்டது என்பது. பையன் மறுபடியும்,

அதைக் கண்ட பேர்க்கு

என்று நிறுத்தியதும்,

உள்ளங் குளிரக் கருணை புரியுதாம்

என்று எடுத்துக் கொடுத்தாள்.

பையனுக்கு ஏற்பட்ட அதிசயமும் ஆனந்தமும் சொல்லி முடியாது. அவனே அறியாமலே ஸ்ரீமதி சங்கரனுக்குக் கரங்குவித்து நமஸ்காரம் செய்தான். கடவுளே வந்து கருணை புரிந்தாற்போல் பட்டது அவனுக்கு.

" ஏண்டாப்பா, நீ நன்ருகப் பாடுகிருயே. சாரீரம் ரொம்ப சுகமாக இருக்கிறதே. அதுவும் கம்பீரமாய்ச் சவுக்க காலத்தில்......! ரொம்பப் பூர்வமான பாணி. இப்போது இப்படிப் பாடுபவர்கள் அபூர்வமாயிற்றே! உனக்குச் சங்கீதம் யார் சொல்லிக்கொடுக்கிருர்கள் ?" என்று கேட்டாள்.

"பாட்டாவது ஒண்ணுவது அம்மா. யாராவது பாடக் கேட்டு வந்ததேயொழிய நான் எங்கே சங்கீதம் கற்றுக் கொண்டேன் !" என்ருன் அந்தப் பையன்.

"பின்னே, உனக்கு எப்படித் தெரிந்தது இந்தப் பாட்டு?" என்று கேட்டாள் ஸ்ரீமதி.

"இல்லை அம்மா, அங்கே ராமாயண சாஸ்திரிகள் ஒருவர் நந்தனார் கதை பண்ணினார். அதிலே நந்தனார் சிதம்பரத்தையும் கோயிலையும் கோபுரத்தையும் நினைத்து நினைத்து பக்தியினால் உருகி ஏங்குகிறார். அந்த ஏக்கத்தில் 'தில்லையம்பல ஸ்தலம்' என்று மனங்கனிந்து பாடுகிறார். இந்தப் பாட்டைப்பாடும்போது, பாகவதர் சிலேடைவேறு பண்ணுகிறார்! 'உயர்ந்த சிகரக் கும்பம்' என்கிறதுக்குப் பனைமரத்திலே இருக்கிற கள்ளுப்பானையாம், அதை கண்டபேர்க்கு உள்ளங் குளிருமாம்என்று அர்த்தம் பண்ணுகிறார். நந்தனார் எவ்வளவு பெரிய பக்திமான்! உள்ளம் உருகிப் பாடுகிற பாட்டை இப்படியெல்லாம் கொலை பண்ணலாமா? ஐயமாருக்கு என்னம்மா தெரியும் பறையன் நந்தனுடைய பக்தி! இதை என் சிநேகிதர்களிடம் சொல்லி, எவ்வளவு அழகாய்ப் பாடுகிறார் நந்தனார் என்று பாடிக் காண்பித்தேன். ஆனால் முதல் வரி ஞாபகமிருந்தது. இரண்டாவது வரி மறந்துபோயிற்று. அப்போது நீங்கள் எடுத்துக் கொடுத்தீர்கள்" என்றான் பையன்.

ஸ்ரீமதி சங்கரய்யர் மனத்தில் அவனுடைய உணர்ச்சி அப்படியே பதிந்தது. பையன் நந்தன் பக்தியில் எவ்வளவு ஈடுபடுகிறான், என்ன ரசிகத்தன்மை, அபாரமாக அல்லவா இருக்கிறது! பாட்டு என்றால் அப்படிச் சாரீரமும் சங்கீதமும் பிணைந்து செய்கிற காரியம் பிரமிக்கும்படியாக இருக்கிறது. அதற்குமேல் இருக்கிறது, விமரிசனம் என்று நினைத்தாள்.

"அப்பா நீ எங்கே இருக்கிறாய்?"

"புரசவாக்கத்தில் இருக்கிறேன்."

" உன் அப்பா என்ன பண்ணுகிருர் ? "

" அப்பா இல்லையம்மா எனக்கு. அண்ணுதான் இருக்கிருர். "

" அண்ணு என்ன பண்ணுகிருர் ? "

" அண்ணு, சர்வகலாசாலையில் சயன்ஸ் ஆராய்ச்சி பண்ணுகிருர். "

" சயன்ஸா ? அவர் பெயர் ? "

" டாக்டர் கறுப்பன். "

ஸ்ரீமதி சங்கரனுடைய உள்ளத்தில் எத்தனையோ எண்ணங்கள் : டாக்டர் கறுப்பனு ? அவர் சொல்லி நான் கேட்டதில்லையே இதுவரை ! அவரையே போய் விசாரிப்போம் என்றெண்ணினுள்.

" என்னேடு வா வீட்டுக்கு " என்று கூப்பிட்டாள்.

" வருகிறேன். "

* * * *

சங்கரய்யர் கவலையோடு வாசல் தாழ்வாரத்தில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அரையில் நாலு முழ வேஷ்டி. மேலே துண்டு. மிக்க சோர்வுடன் யோசித்துக்கொண்டிருந்தார்.

நாள் பத்தாகிறதே. இன்னும் அவர் வரவில்லையே. என்ன காரணம்? என்றும் இப்படியிருந்தது கிடையாதே. நாம் ஒன்று நினைக்கக் கடவுள் ஒன்று நினைக்கிருர்போலிருக்கிறதே. இவரை அமெரிக்காவெல்லாம் அனுப்பவேண்டுமென்று நினைத்தோம். நினைத்த மறுநாளிலிருந்தே வர

வில்லையே?... இந்தமாதிரி எண்ணங்கள். சொல்லமுடி யாத மனவேதனை.

ஆனால் டாக்டர் கறுப்பன் ஒரு ஹரிஜன் என்பதை அறிந்த உற்சாகத்தில், அவரை மொட்டையாகத் தாம் போய்க் கேட்டதை அறவே மறந்துவிட்டார். இல்லாவிட்டால் அவ ருக்கு ஏன் கவலை இப்பொழுது? விஞ்ஞானி, உலகத்தை - மனித உணர்ச்சிகளைத் தெரிந்துவைத்திருக்கிற அழகு இது. அந்த நேரம் கார் வந்து நின்றது. ஸ்ரீமதி ஓடிவந்து, "உங் கள் இலாகாவில் யாராவது டாக்டர் கறுப்பன் என்று இருக்கிறாரோ?" என்று கேட்டாள்.

என்று மில்லாதபடி தம் மனைவி தம் இலாகா சம்பந்த மாய்ப் பேச்சு எடுத்ததே அவருக்கு முதல் அதிசயம். அதி லும் யாரைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தாரோ, அவ ரைப்பற்றி அவள் பேச ஆரம்பித்தது, அதிசயத்திலும் அதி சயம். "என்ன அவருக்கு? அவரைப்பற்றி ஏதாகிலும் தெரியுமா உனக்கு? ஏன் வரவில்லையாம் இத்தனை நாள்? ஏதாவது சொன்னாரோ?" என்று அடுக்கிவிட்டார் கேள்வி களை. "நான் உங்களைக் கேட்கவந்தால் நீங்கள் என்னைக் கேட்டுத் தீர்த்துவிடுகிறீர்களே. அவர் இருக்கிறாரா இல் லையா? அதைச் சொல்லுங்கள்" என்றாள் ஸ்ரீமதி.

"இருக்கிறார்... இல்லை" என்றார் சங்கரய்யர்.

"அப்படி என்றால்?"

"டாக்டர் கறுப்பன் என் டிபார்ட்மெண்டில் இருக்கத்தான் செய்தார். ஆனால் பத்துநாளாய் அவரைக் காணவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை... அந்தப் பையன் யார், அங்கேயே நிற்கிறானே?" என்றார்.

ஸ்ரீமதி, "வா தம்பி. இவனைப்பற்றித்தானே சொல்லவந்தேன். வா தம்பி, கிட்ட வா" என்றாள்.

பையன் தயங்கி, "நான் தீண்டக்கூடாதவன் ஆச்சே" என்றான். அவன் சொன்னதிலேயே ஏக்கம் தொனித்தது. இதைக் கேட்டாரோ இல்லையோ, துஷ்யந்தனுக்கு மோதிரத்தைக் கண்டவுடன் சகுந்தலையின் ஞாபகம் வந்ததுபோல், டாக்டர் கறுப்பனிடம் பேசியதெல்லாம் உடனே ஞாபகம் வந்தது சங்கரய்யருக்கு. "அடாடா, இதற்காகவா இத்தனை நாள் அவர் வரவில்லை" என்று எண்ணிக் கொண்டார்.

"வா தம்பி, உன்னைத் தீண்டக்கூடாதவன் என்று யாரா வது சொல்லுவார்களோ? உன் சங்கீதமும் ஞானமும் வீணாய்ப் போகவோ! இனிமேல் நீ தினம் இங்கே வர வேணும். வேண்டிய சங்கீதம் படித்துக் கொள்ளலாம் இனி, தினம் இங்கே வரவேணும்" என்றாள். அவன் உள்ளம் ஆனந்தத்தால் பொருமியது.

"இந்தப் பையன் அவருக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"அவருடைய தம்பி."

"தம்பியா, என்ன? உன் அண்ணா வீட்டில்தான் இருக்கிறாரா? அவருக்கு உடம்பு ஒன்றுமில்லையே" என்று பையனைக் கேட்டார்.

"உடம்பு ஒன்றுமில்லை. ஆனால் இந்தப் பத்து நாட்களில் அவர் ஒரே அடியாக மாறிவிட்டார். தலையைத் தலையைப் பிய்த்துக் கொள்கிறார். இருக்கிறவர்களையெல்லாம் வைகிறார். புஸ்தகங்களை விட்டெறிகிறார். என்ன ஏது என்று

கேட்டால் சள்ளுபுள்ளு என்று விழுகிருர், ஒன்றும் புரிய வில்லை '' என்ருன் பையன்.

அப்போது சங்கரய்யருக்கு அடியுள்ளத்தி லிருந்து, '' இதற்கு நானு காரணம் '' என்ற ஒரு கேள்வி பிறந்தது.

* * * *

'' மிஸ்டர் கறுப்பன், நீங்கள் சென்ற பத்துநாளாக டிபார்ட் மெண்டுக்கு வராதது எனக்கு எவ்வளவோ கவலையாயிருக் கிறது. நீங்கள் வராததிலிருந்து என் கை கால் ஓடவில்லை. நாளையிலிருந்து வரவேண்டும் '' என்ருர்.

'' மன்னிக்க வேண்டும். ஆராய்ச்சி புரியும் மனம் இனி எனக்கு இல்லை. அது அன்றே போய்விட்டது. தயவு செய்து மன்னிக்க வேண்டும் '' என்ருர் கறுப்பன்.

'' என்ன, பத்து நாளுக்குள் உங்கள் ஆற்றல் எல்லாம் போய்விட்டதா ? ஏதோ தாழ்ந்த வகுப்பு என்று சொல்லப் படும் இனத்திலிருந்து வந்தும் இவ்வளவு அபாரமான ஆராய்ச்சிகளெல்லாம் செய்கிறீர்களே என்று உங்களைப் பாராட்ட எண்ணியதற்கு இந்தக் கொடிய தண்டனையா ? உலகம் புகழும்படி தங்களை அமெரிக்க முதலிய நாடுகளுக்கு அனுப்பவேண்டும் என்று நான் ஆசைப்பட்டதற்கு இந்தத் தண்டனையா ? தங்கள் இனத்துக்குத் தங்களால் அபார கௌரவம் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணியதன் பலனு இது ? நான் ஒன்று நினைத்தால் கட்டாயம் வேறு ஒன்றுதான் முடிய வேண்டுமா ?'' என்று சொல்ல முடியாத வெறுப்போடு கடவுளையே நிந்திக்கத் தொடங்கி விட்டார் சங்கரய்யர்.

'' கடவுளை ஏன் நிந்திக்கிறீர்கள் ? என்னையே சொல்லுங் கள். தங்கள் மனப்பான்மையைச் சற்றும் நான் உணரவில்

லையே - என்னைச் சொல்லுங்கள் '' என்று மனக் கிலேசத்துடன் சொன்னார் கருப்பன்.

'' சரி, இனிமேல் உங்கள் தம்பியாவது எங்கள் வீட்டில் வளரட்டும். நான் செய்த பாவத்திற்கு......... '' என்று சொல்ல வாயெடுத்தார். அதற்குள் தொண்டை அடைத்துக்கொண்டது.

* * * *

'' வெண்ணெய் திரண்டு வந்தபோது தாழி உடைந்தது என்பார்களே, அதைப்போல் முடிந்தது எங்கள் காரியம் '' என்றார் சங்கரய்யர் மனைவியிடம்.

'' என்ன ? ''

'' அவர் வர மறுத்துவிட்டார். அவர் புத்தியே மங்கிப் போய்விட்டதாம். ''

'' விஞ்ஞான உலகம் உணர்ச்சியற்ற உலகம். ஒருவரை யொருவர் உணர்வதே இல்லை. உணரவும் சந்தர்ப்பங்கள் வாய்ப்பதில்லை. ''

'' ஆமாம் நீ சொல்வது வாஸ்தவம் '' என்றார் சங்கரய்யர்.

* * * *

டாக்டர் கருப்பன் தம்பி, சங்கீதத்தில் அபாரமாக முன்னேறி வருகிறான். அவனுடைய கலைத் திறமையையும், ஞானத்தையும் பிறர் பார்த்து வியக்கும்போதெல்லாம், '' நீ ஜயித்து விட்டாய் ஜானகி, நீ ஜயித்து விட்டாய் '' என்கிறார் சங்கரய்யர்.

'' நான் என்ன ஜயிக்க இருக்கிறது ? கலை அப்படி '' என்கிறாள் ஸ்ரீமதி ஜானகி சங்கரன்.

# காற்றும் இரசாயனமும்

சித்தன்

இயற்கையிலே எத்தனையோ நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன; அற்புதங்களும் நிகழ்கின்றன. அன்றாடம் நாம் இவற்றைக் கண்டு வருகிறோம். ஆனால் இப்படியொன்று நிகழ்கிறது என்றுகூட நமக்குச் சிறிதேனும் தெரிவதே கிடையாது.

சூரியன் உதிக்கிறான். வானவீதியில் சஞ்சாரம் செய்து மறைகிறான். ஒருநாள்கூட, உதிப்பதில் தவறுவதே கிடையாது; மறைவதிலும் அப்படியே. சூரியன் இல்லாவிட்டால்— ? என்று நாம் கற்பனை செய்து பார்க்கமுடியுமா? முடியவே முடியாது. இயற்கை என்று நாம் கருதுபவற்றோடு சூரியனும் ஒன்றாகப் பொருந்திவிட்டான். ஆகவே, அவன் வருவதும் போவதும், நமக்கு இயற்கைதான்; இவற்றில் நம் எண்ணம் செல்லவே செல்லாது.

இப்படியே பலவேறு இரசாயன நிகழ்ச்சிகள் இயற்கையில் நிகழ்கின்றன. இவை யாவும் இயற்கையோடு இயற்கையாய் ஒன்றிப் போய்விட்டன. ஆகவே, அவை நிகழ்கின்றன என்ற நினைவே நமக்கு எழுவதற்கில்லை. உதாரணமாக இரண்டொன்றை மட்டும் பார்க்கலாம்.

உயிருள்ள பிராணிகளின் உடல்களெல்லாம் யந்திரம் போலவே தொழில் செய்கின்றன. மிருகங்களின் உடல், பறவைகளின் உடல், மனிதருடைய உடல் ஆகிய யாவும் இப்படியே. பெரும்பாலான யந்திரங்கள் இயங்குவதற்குச்

சக்தி வேண்டியிருக்கிறது. சாதாரணமாய், சக்தி எப்படிப் பிறக்கிறது? விறகைப் போட்டு எரிப்பதனுலே. (இந்த விறகு என்பது மர ரூபத்திலும் இருக்கலாம், கரி அல்லது எண்ணெய் ரூபத்திலும் இருக்கலாம்.) நீராவிக் கப்பல்களும் நீராவி என்ஜின் பூட்டிய ரயில்களும் ஓடுகின்றன. கரியைப்போட்டு எரித்து நீரை ஆவியாக்கினுல்தான், இவற்றை ஓட்டுகிற சக்தி பிறக்கும். இப்படியே, மோட்டாரையும் ஆகாய விமானத்தையும் இயக்குவதற்கான சக்தியானது, பெட்ரோல் எண்ணெய் என்ற விறகைப் போட்டு எரித்தால்தான் உண்டாகிறது. இவ்விதமேதான், மனித உடல், பிராணிகளின் உடல் என்ற யந்திரத்துக்கும், ஏற்ற விறகு வேண்டியிருக்கிறது.

இயந்திரத்துக்குத் தக்கபடி விறகானது, மரமென்றும் கரியென்றும் எண்ணெயென்றும் மாறுவதுபோல, உயிருள்ள யந்திரமாகிய மனிதவுடலைப் பொறுத்து, அவ்விறகு உணவு என்பதாக மாறுகிறது. தொழில் செய்வதற்கு வேண்டிய சக்தி உடலிலே பிறப்பதற்கு, உண்ணும் உணவே விறகாக இருக்கிறது.

உண்ணும் உணவானது, முதலாவதாக, பலவகையான உடற்சவ்வுக்களாக மாறுகிறது. இந்தச் சவ்வுக்களிலே சில எரிந்து போகின்றன. பொதுவாக உடலிலுள்ள தசைப் பகுதியில் பெரும் பாகம் கரியும் நீர்வாயுவும் (அதாவது ஹைட்ரொஜனும்) சேர்ந்து தோன்றியவை. இவை இரண்டும் எரிந்தவுடன், பிராண வாயுவுடன் (அதாவது ஆக்ஸிஜனுடன்) கூடி முறையே கரியமில வாயுவாகவும் நீராவியாகவும் நாம் மூச்சு விடும்போது நுரையீரலினின்றும் வெளிப்படுகின்றன. இவற்றுள், கரியமிலவாயு எப்படிக் காற்றுடன் கலக்கிறதென்பதும் எவ்வகையிலே அது பயன்படுகிறதென்பதும் இங்கே கவனிக்கத்தகுந்தவை.

மேற்சொன்ன கரியையும் நீர்வாயுவையும் எரிப்பதற்கு வேண்டிய பிராணவாயுவானது, நாம் ஒவ்வொரு தடவை காற்றை உட்கொள்ளும்போதும் காற்ருேடு நுரையீரலுக்குச் செல்கிறது; அங்கிருந்து உடலின் எல்லாப் பாகங்களுக்கும் இரத்தத்தின் மூலமாய்ப் பரவுகிறது. இதே போல, உடற்சவ்வுக்களிலுள்ள கரியுடன் பிராணவாயு கூடியதனுல் பிறந்த கரியமிலவாயுவானது, நாம் ஒவ்வொரு தடவை மூச்சை வெளியே விடும்போதும், வெளிப்பட்டுக் காற்றுடன் கலந்துவிடுகிறது.

ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பிராண வாயு வேண்டியிருக்குமென்பது, அவரவர் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்தது. உடலை வருத்திப் பாடுபட்டு உழைப்பவருக்கு நிமிஷமொன்றுக்கு ஏறக்குறைய ஒரு காலன் பிராணவாயு வேண்டியிருக்கும்; உடல் உழைப்பு இல்லாவிட்டால், இந்த அளவிற் பாதியே போதுமானதாயிருக்கும். சாதாரணமாய் மூச்சு விடும்போது, நுரையீரல் கொள்ளக்கூடிய அளவு காற்றை உள்ளுக்கிழுப்பதும் இல்லை, அதிலுள்ள காற்று முழுவதையும் வெளியே அனுப்புவதும் இல்லை, நுரையீரல் கொள்ளக்கூடியதில் கால்பங்குக்கும் குறைவான பகுதிதான் ஒவ்வொரு தடவையும் உள்ளே வருகிறது, வெளியே போகிறது. வெளியே போகும் காற்றில் இருபதில் ஒரு பங்கு அளவு கரியமிலவாயு அடங்கியிருக்கிறது.

இப்படியாக, மக்களும் பிராணிகளும் மூச்சு விடுவதனுல் கரியமிலவாயுவானது காற்றில் கலந்துகொண்டே யிருக்கிறது. தவிர, அழுகிப்போகும் செடிகொடிகள் காய் கனிகள் முதலியவற்றிலிருந்தும் கரியமிலவாயு வெளிப்பட்டுக் காற்றில் கலக்கிறது. விறகு எரியும்போது-அதாவது மரக் கட்டை, கரி, எண்ணெய் முதலான எந்தப் பொருளாயிருந்

தாலும் சரி, அது எரியும்போது, - அதிலிருந்து கரியமில வாயு உண்டாகிக் காற்றில் கலக்கிறது. இவ்விதமாக, எந்நேரமும் இக்கரியமிலவாயு புதிதுபுதிதாய்க் காற்றில் கலந்துகொண்டே வந்து, காற்றிலுள்ள பிராணவாயு குறைந்துவிட்டால், உயிர்கன்ளி வாழ்க்கைக்கே கேடு நேரும். இதனுல், அவ்விதம் நேராதபடி இயற்கையே அபூர்வமான ஓர் இரசாயன முறையைக் கையாண்டு, காற்றிலுள்ள கரியமிலவாயு குறையவும் பிராணவாயு அதிகமாகவும் ஏற்பாடு செய்கிறது.

உயிர் வர்க்கத்தை இங்கே இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று தாவரவர்க்கம்: செடிகொடி மரம் புல் பூண்டு என்பன. மற்ருென்று பிராணிவர்க்கம் : பறவை விலங்கு மக்கள் என்பன. இவற்றுள், பிந்தியவர்க்கமான பிராணி வர்க்கமானது, இடைவிடாமல் பிராணவாயுவை உட்கொண்டு கரியமிலவாயுவை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது. மனிதன் மட்டுமல்ல, ஆடு, மாடு, நாய், பூனே, கோழி, புரு போன்றன யாவும் இப்படியே.

ஆனுல், தாவர உயிர்கள் இதற்கு நேர்மாருன வேலே செய்கின்றன. பசுஞ் செடி கொடிகளின் உடலமைப்பானது பெரும்பாலும் கரியும் நீர்வாயுவும் பிராணவாயுவும் கூடியது. இவ்வாறு கூடிய பொருள்கள் செடியினிடத்துச் சர்க்கரைச் சத்தாகவும் மாவுச்சத்தாகவும் உள்ளன. சூரிய வெளிச்சத்திலே, செடியின் இலேகள் காற்றிலுள்ள கரியமில வாயுவை இழுத்துக் கொள்கின்றன. இது, வேர்மூலமாய்ச் செடிக்கு வரும் நீருடன் சம்பந்தப்படும்போது, வேறு பொருள்களாகப் பிரிகிறது. ஒன்று, செடி வளர்ச்சிக்குரிய சத்து ; மற்ருென்று பிராணவாயு. இவ்வாயு இலேகளிலிருந்து வெளிப்பட்டுக் காற்றில் கலந்துகொண்டேயிருக்கிறது.

இவ்வாருக, பிராணிவர்க்கமானது காற்றிற் கலந்துள்ள பிராணவாயுவை மட்டும் கிரகித்துக்கொண்டு கரியமில வாயுவை வெளிவிடுகிறது; ஆனல், செடிவர்க்கமானது அக்கரியமிலவாயுவைக் கிரகித்துக்கொண்டு, பிராணவாயுவைத் தந்துகொண்டேயிருக்கிறது. இவற்ருல், காற்று என்றும் ஒரே தன்மையுடையதாய் இருந்து வருகிறது, இயற்கையில் நிகழும் இந்த இரசாயனம், கடவுள் படைப்பில் ஓர் அற்புதமென்றே சொல்லவேண்டும்.

ஆனல் ஒன்று: இலைகள் சூரியனொளி யிருந்தால்தான் கரியமிலவாயுவை உண்டு பிராணவாயுவை வெளிவிடும். சூரியனொளி இல்லை, இருள்தான், அல்லது இராக்காலம் என்ருல், அவை கரியமிலவாயுவை இழுத்துக்கொள்வதுமில்லை, பிராணவாயுவைத் தருவதுமில்லை.

அரைகுறையாகச் சயன்ஸ் படித்தவர்கள் இதைக் கொண்டே, செடிகொடிகள் இராக்காலத்தில் ஒரு விஷ வாயுவை வெளிவிடுகின்றன. ஆகவே அவற்றினடியில் இரவில் போகலாகாது என்பார்கள். இக்கருத்து தவருனது. எல்லா உயிர்களும் மூச்சு விடுகின்றன. பிராணிகள் மூச்சு விடுவதுபோலவே தாவரங்களும் மூச்சு விடுகின்றன; அதாவது, பிராணவாயுவை உட்கொண்டு கரியமிலவாயுவை வெளிப்படுத்துகின்றன என்பது உண்மை. ஆனல் இந்த வேலை, (மூச்சுவிடுவது) மிகமிக அற்பமானது; பகல் நேரத்திலே உட்கொள்ளும் கரியமிலவாயுவையும் வெளிப்படுத்தும் பிராணவாயுவையும் பார்க்கும்போது, மேற்சொன்ன மூச்சுவிடும் வேலை ஒன்றுமில்லை என்றே சொல்லலாம்.

இரவிலே செடி கொடிகள் மூச்சுவிடும் கரியமிலவாயு அதிகம், கெடுதலானது என்ற எண்ணம் சாதாரணமாக வழங்குகிறது. இதற்காகச் சிலர், முக்கியமாக ஆஸ்பத்திரித் தாதிமார், மிக்க சிரத்தையோடு நோயாளியின் அறையி

லுள்ள பூஞ்செடியைத் தொட்டியோடு கொண்டுபோய் இரா நேரத்தில் வெளியே வைத்து விடுவதை நாம் பார்த்திருக்கிறோம். இது அவசியமில்லை. நோயாளியைப் பார்க்க வருபவரொருவர் ஐந்து நிமிஷமே அறையிலிருந்து பேசி விட்டுப் போனாலும், அவர் மூச்சுவிட்ட கரியமிலவாயுவானது, ஒரு செடி இரா முழுதும் இருந்து மூச்சுவிடக் கூடிய கரியமில வாயுவைவிட எத்தனையோ பங்கு அதிகமானது !

பொதுவாக, வாயுக்கள் எல்லாமே மிக விரைவில் பரவுந் தன்மை வாய்ந்தவை. அதாவது, ஒரு தொழிற்சாலையிலிருந்து ஏராளமாய் வெளிப்படும் கரியமிலவாயு அந்த இடத்தைச் சுற்றித்தான் அதிகமாகக் காணப்படும் என்பதில்லை; காற்று எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் இது மிக விரைவிலே வியாபித்துவிடுகிறது. எந்த இடத்திலுள்ள காற்றை எடுத்துச் சோதித்துத் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்தாலும், அதிலுள்ள வெவ்வேறு வாயுக்கள் ஒரே அளவில் கலந்திருக்கக் காண்கிறோம்.

காற்றில் ஏறக்குறைய மூவாயிரத்தில் ஒரு பங்கு, கரியமில வாயு. அழுகிப்போன தாவரப் பொருள்கள், பிராணிகள் முதலியவற்றிலிருந்து இது உண்டாகிறதென்பதை முன்னமே பார்த்தோம். தவிர, பூமியில் உண்டாகும் சில வெடிப்புக்களிலிருந்தும் இது இயற்கையாக வெளிப்படுகிறது. இது விஷவாயு அல்லாவிட்டாலும், கெடுதலானது. எந்தப் பொருளும் எரிவதைத் தடுத்துவிடும் ; எனவே, உட்கொள்வதற்கு ஏற்றதல்ல. நேபிள்ஸ் நகரத்துக்கு அருகிலுள்ளதோரிடத்தில் இயற்கையாயுண்டான இந்த வாயுவானது, அதிகக் கனமுடைமையாலே, விரைவில் பரவாமல், தரையையொட்டி மூன்றடி உயரத்துக்கு ஒரு தனி மண்டலமாகப் படர்ந்திருக்கிறதாம். அவ்விடத்தில் அகப்பட்ட நாய் பூனை ஆட்டுக்குட்டி இவைபோன்ற சிறு

பிராணிகள் இறந்துவிடுமாம். மனிதனும் அங்கே தரையில் படுப்பானுனல், உயிரை இழந்துவிட நேருமாம்.

காற்றிற் கலந்துள்ள கரியமிலவாயு, இயற்கையில் பல நிகழ்ச்சிகளுக்குத் துணைபுரிகிறது. இது நீரில் ஓரளவுக்குக் கரைந்துவிடும். மழைநீர் பெய்யும்போது, ஆகாயத்தில் பரவியுள்ள கரியமிலவாயுவில் சிறிதளவு அது உண்டு விடுகிறது. உண்டபின் மலைச்சரிவுகளில் விழுந்து அருவியாக ஓடிவருகிறது. மலையிலே, ஸோடியம், பொடாஸியம், கால்ஸியம் என்ற உலோகங்களின் கார்பொனேட் உப்புக்களாலான பாறைகள் உள்ளன. இவ்வுப்புக்கள் வெறும் நீரில் கரையா; ஆனுல் கரியமிலவாயுவையுண்ட நீரில் சிறிது கரையும். எனவே, மேற்சொன்னபடி அவ்வாயுவை யுண்டுவரும் மழைநீர் இப்படிப்பட்ட பாறைகளின்மீது விழுந்து ஓடி வரும்போது, இவை கரைந்து போகின்றன. மலைகளிலும் பாறைகளிலும் அருவி குடைந்து கொண்டு போவதற்கு இது ஒரு முக்கிய காரணம். தவிர, இவ்வாறு கரைந்துபோன கால்ஸியம் கார்பொனேட் முதலான உப்புக்கள் கடலிற் போய்ச் சேருகின்றன. கடலில் வாழும் சிறு பிராணிகள் - நத்தை, சிப்பிபோல்வன-இச்சத்தையுண்டு, தங்கள் உடலுக்குவேண்டிய கவசமாகிய கிளிஞ்சல், ஓடு முதலியவற்றை இவற்ருல் கட்டிக்கொள்கின்றன.

வெந்நீர் போடும் இருப்புக் கெட்டில் முதலியவற்றின் உட்புறத்தில் தண்ணீர்மட்டத்தில் ஓரமெங்கும் சொர சொரவென்று செதிள் செதிளாயிருப்பதைப் பலர் பார்த்திருப்பார்கள். இதற்கும் மேற்சொன்ன கரியமிலவாயு தான் காரணம். நீரில் இவ்வாயு இருப்பதனுல், கால்ஸியம் கார்பொனேட் என்ற உப்பு, இயற்கையாய்க் கிடைக்கும் நீரில் கரைந்து போகிறது. நீரை அடுப்பில் வைத்துக் காய்ச்சி அது கொதிக்கும்போது, அவ்வாயு நீரைவிட்டு வெளிப்பட்டுவிடும். அதன்பின், கரைந்துள்ள கால்ஸியம்

கார்பொனேட்டும் வெளிப்பட்டு, கெட்டிலின் ஓரத்தில்வந்து ஒட்டிக்கொள்கிறது. நீராவியால் இயங்கும் தொழிற்சாலை களிலுள்ள பெரிய கொப்பரையிலும் குழாய்களிலும் இவ் வாறு இந்தக் கார்பொனேட் வந்து ஒட்டிக்கொள்வது சாதாரணம். இது எளிதிலே சூட்டை வாங்காதாகையி னாலே, நீரைக் கொதிக்கவைப்பதில் அனாவசியமாக ஏராள மான கரி அதிகமாய்ச் செலவு செய்யவேண்டி வரும். சில சமயம், கொப்பரையை யொட்டிய குழாய்களில் இது அதிகமாய்த் திரண்டு அடைத்துக்கொள்வது காரணமாக, குழாய்கள் வெடிப்பதும் உண்டு.

அதிகமான அமுக்கத்தை (ப்ரெஷர்) உபயோகித்தால், கரியமிலவாயு நீரில் அதிகமாய்க் கரையும். சோடா முத லிய பானவகைகள் அடங்கிய புட்டிகளில், கரியமிலவாயு இவ்வாறு அமுக்கிக் கரையும்படி செய்யப்பட்டிருக்கிறது. புட்டியைத் திறந்தவுடன் வரும் ஆவிக் கொப்புளங்களெல் லாம், அமுக்கம் குறைந்ததன்மேல் இவ்வாயு அந்நீரை விட்டு வெளிப்படுவதனால் ஏற்படுவனவாகும்.

தொழிற்சாலைகளிலும் பெரிய கட்டிடங்களிலும் காரியா லயங்களிலும் சுவரில் மாட்டிவைத்துள்ள தீயணைக்குங் கருவியானது, கரியமிலவாயுவை உற்பத்தியாக்குவதற் காகச் செய்யப்பெற்றது. அதனுள், ஸோடியம் கார்பொ னேட் நீரும் கந்தகத் திராவகமும் (ஸல்ஃபூரிக் ஆஸிட்) தனித்தனியாக இருக்கின்றன. தீயணைக்க உபயோகிக்க வேண்டி, அக்கருவியின் குறுகியமுனையைத் தரையில் அடித் தவுடனே, அம்முனை உள்ளே சென்று, அந்நீரையும் திரா வகத்தையும் ஒன்றாய்க் கலக்கிறது. இவை கலந்தவுடனே, ஏராளமான கரியமிலவாயு வெளிப்பட்டு, பீச்சுங் குழலால் அடிப்பதுபோல வெளிவருகிறது. எண்ணெய் அல்லது பெட்ரோல் காரணமாகப் பிடித்த தீயை இதுகொண்டு மிக்க சௌகரியமாய் அணைத்துவிடமுடியும்.

'வானத்தை வில்லாக வளைப்பான், மணலைக் கயிருகத் திரிப்பான்' என்ற சொற்கள், ஒருவன் பொய்யன் என்பதைக் குறிப்பிடுவதற்காகவே வழங்குகின்றன. அத்தனையும் வெறும் புரட்டு என்பதே கருத்தாகிறது. ஆனல் சித்தர் நூல்களைப் பார்க்கும்போது, அவர்கள், வானத்தை வில்லாக வளைப்பதையும் மணலைக் கயிருகத் திரிப்பதையும் விட இன்னும் அரியஅற்புதங்களை நிகழ்த்துவார்கள் என்று சொல்லியிருக்கக் காண்கிருேம். அப்படிப்பட்ட அற்புதங்களைக் கண்கொண்டு நாம் காணுமையினுல், அவை யாவும் புரட்டு என்றே எண்ணிவிடுகிருேம். இதனுல்தான் அச்சொற்களுக்கே புரட்டு என்ற பொருள் ஏற்பட்டுவிட்டது.

ஆனல் உண்மை இவ்வளவு மேற்போக்கானது அன்று; இன்னும் ஆழத்தில்தான் இருக்கிறது. ஏதோ ஒருவகை ஆன்ம வலிமைகொண்டு அவர்கள் அற்புதங்களைச் செய்திருப்பார்கள் என்று நாம் ஊகிக்கலாம்; ஆனல் நம்ப முடிவதில்லை.

வலிமை என்றவுடனே, உடல்வலிமையொன்றுதான் நமக்கு நினைவு வருகிறது. நுட்பமாய்ப் பார்க்கப்போனல், மூன்று வித வலிமையை நாம் காண்போம். இவை உடல் வலிமை, உள்ளத்தின் வலிமை, உயிரின் வலிமை என்பன. சாதாரணமான உடலின் வலிமை என்னவெல்லாம் செய்யவல்லது என்பதே நமக்குப் பெரிய வியப்பை யளிக்கும். ராமமூர்த்தி சாண்டோ என்பவர், படுத்துக்கொண்டு தம் மார்பின்மீது மோட்டார்காரை ஏற்றி விடச்செய்தார் என்ருல், நமக்குத் திகைப்புண்டாகிறது. ஆனலும் இது உண்மை; பலர் நேரிலே கண்ணுரக் கண்ட காட்சி. இதுவே இவ்வளவு தூரம் நம்பமுடியாத செய்தியாயிருக்கும்போது, உயிரின் வலிமையாகிய ஆன்ம வலிமையைப்பற்றிய செய்திகளை நாம் நம்புவது அருமை. இவை ஒருபுறமிருக்க, உள்ளத்தின் வலிமையே அருமையான செயல்கள் செய்யுமென்பதை விஞ்ஞானத் துறையின் மூலமாகப் பார்க்கலாம். உள்ளத்

தின் வலிமை என்பது, மனிதனுடைய மூளையின் வலிமை; அதாவது அறிவின் ஆற்றல்.

விஞ்ஞான அறிவின் வளர்ச்சியினாலே, மனிதன் காற்றையே பிடித்து நீர் ரூபத்திலே திரவமாக மாற்றுவதைப் பார்க்கும்போது, மணலைக் கயிறாகத் திரிப்பதெல்லாம் சாமானியம் என்று சொல்லத் தோன்றுகிறது. தண்ணீரானது செண்டிகிரேட் 100 டிகிரியில் கொதித்து ஆவியாய்ப் போய்விடுகிறதென்றும், ஒவ்வொரு டிகிரியாகக் குறைத்துக்கொண்டே வந்து 'பூஜ்யம் டிகிரி' என்ற கீழ் எல்லையை அடைந்தால், தண்ணீர் கட்டியாக மாறி, பனிக் கட்டியாகிறதென்றும், சூட்டை அளந்து கண்டிருக்கிறார்கள். இந்தப் 'பூஜ்யம் டிகிரி'க்கும் குறைவாகக் கரியமில வாயுவின் சூட்டைக் குறையச் செய்துகொண்டே போய் மேலும் 78 டிகிரி குறையச் செய்துவிட்டால், அந்த நிலையில் அது திரவரூபம் அடைகிறதாம் (நீர்போலாகிறது). இக்கரியமிலவாயுத் திரவம் எவ்வித நாற்றமும் இல்லாததாகையால், பொருள்களைக் குளிரவைக்கும் யந்திரமாகிய ரெப்ரிஜெரேட்டருக்கு உபயோகிக்கப் பெறுகிறது.

இந்தத் திரவத்தையே கட்டியாக்கினால், வெளுத்த பனித் தூள்போலக் கட்டியாகிறது. பனிக்கட்டிக்கும் இதற்கும் ஒரு வேறுபாடு. பனிக்கட்டி உருகி நீராகும். ஆனால், கரியமிலவாயுக் கட்டி உருகாமலே ஆவியாகிறது. கட்டியைச் சுற்றி ஆவி ரூபமான வாயு ஒரு படலமாகப் படர்ந்திருக்குமாம். கட்டியின் குளிர்ச்சி கையில் படாமல் இப்படலம் தடுப்பதனால் கட்டியை அழுத்தாமல் ஒடுக்கலாம்; பனிக்கட்டி போலக் குளிர்ச்சியாயிராது. ஆனால், அப்படலம் அகன்றுவிட்டால், கட்டியின் குளிர்ச்சி கையில் தாக்கி, தீச்சுட்ட புண்ணைப்போன்ற கொடிய புண்ணை உண்டாக்கும்.

இதுவரையிலும் சொல்லிவந்த கரியமில வாயு, காற்றிலே மிக அற்பமான பாகம்; அதாவது மூவாயிரத்தில் ஒரு பங்கு.

பெரும்பகுதியாயுள்ளவை நைட்ரொஜனும் பிராணவாயுவும். காற்றை ஐந்து பங்கிட்டால் அதில் ஒன்று பிராணவாயு; மற்ற நான்கும் நைட்ரொஜன் என்ற வாயு. இது எளிதிலே வேறெந்தப் பொருளோடும் சேராது. எரிவதிலோ மூச்சு விடுவதிலே, அழுகிப்போவதிலோ இதற்கு எவ்விதச் சம்பந்தமும் கிடையாது. தனிப்பட்ட இவ்வாயு இப்படியிருந்த போதிலும் இதன் கூட்டுப் பொருள்கள் மிக முக்கியமானவை.

பிராணி உடலுக்கும் தாவர உடலுக்கும் வளமான மண்ணுக்கும் இது இன்றியமையாதது. சாயப் பொருள்கள், வாசனைப் பொருள்கள் (செண்டுகள்), வெடி மருந்துகள், சில நச்சுப்பொருள்கள், மருந்துகள், உணவுப்பொருள்கள் முதலியன நைட்ரொஜன் இல்லாவிட்டால் இல்லை.

பிராணவாயுவோ, நைட்ரொஜனைப் போலில்லை; மிக்க சக்தி வாய்ந்தது. எந்தப் பொருளோடும் தானே எளிதில் கூடிவிடும். மரம், கரி, எண்ணெய் முதலியன எரியும் போதெல்லாம், அவற்றிலடங்கிய மூலப் பொருள்கள் இவ்வாயுவோடு கூடிவிடுகின்றன. இரும்பு துருப்பிடிக்கிறதென்றால், இரும்போடு பிராணவாயு கூடி, ஓர் உப்பாக அதை மாற்றுகிறது; இதையே துருவென்று நாம் சொல்லுகிறோம். உண்ணும் உணவை எரிப்பதற்குப் பிராணிகள் பிராணவாயுவை உட்கொள்ளுகின்றன என்பதை மேலே பார்த்தோம்.

மேற்சொன்ன மூன்று வாயுக்கள் நீங்கலாக, வேறு சிலவும் மிகமிகக் குறைவாய்க் காற்றில் காணப்படுகின்றன. இவற்றுள் ஹீலியம் என்பது ஒன்று. காற்றில் இரண்டரை லட்சம் பங்கில் ஒரு பங்கு ஹீலியம். வான ஆராய்ச்சியின் போது இது சூரியமண்டலத்திலிருப்பது முதலில் தெரிய வந்தது; பிறகுதான் பூமியின் காற்று மண்டலத்திலிருப்பதும் புலனாயிற்று. வெந்நீர் ஊற்றுக்களிருக்குமிடத்திலும்

எரிமலைகளை யொட்டியும் இவ்வாயு காணப்படுகிறது. இது எரியாது; துணி வழியே கசிந்து வெளிப்படாது. இக்காரணங்களால், கனடாவிலும் அமெரிக்காவிலும் இதை பலூன்களுக்கு (ஆகாயக் கப்பல்களுக்கு) உபயோகிக்கிறார்கள்.

நியான் என்பது மற்றொரு வாயு; காற்றில் இது லட்சத்தில் ஒரு பங்கு. நியான் விளக்கு என்று சொல்லப்பெறும் மின்சார விளக்குப் போடுவதற்கே இது உபயோகமாகிறது. ஈரப்பசையில்லாத வாயு, மின்சாரத்தைத் தன்னிடமாகச் செல்லவிடாது. ஆகவே, அவ்வாயுவின் வழியே மின்சாரம் போகவேண்டுமானால், அதிக சக்தி வேண்டும்; மின்சாரமும் தொடர்ந்து போகாமல், மின்னல் பாய்வது போலப் பாய்ந்தே செல்லும்.

இதற்காக, ஒரு குழாயிலுள்ள காற்றை அப்புறப்படுத்திவிட்டு, அதில் சிறிதே நியான் வாயுவை விட்டுக் குழாயின் இருபுறமும் மின்சாரத்தின் இரு பக்கத்தையும் பொருத்துவார்கள். மிக்க சக்தியோடுகூடிய மின்சாரம் குழாயில் ஒருபக்கமாய் நுழைந்து அங்கு நிறைந்துள்ள நியான் வாயு வழியே சென்று மற்றப் பக்கமாய் வரும். இவ்வாயுவின் வழியே செல்லும்போது அது மின்னல்போல ஒளிவிடும்; இவ்வொளியே விளக்கு. இது செங்காவி நிறமாயிருக்கும்.

ஆர்கான் என்பது காற்றிலுள்ள மற்றோர் அற்பமான வாயு. ஆர்கான் மின்விளக்கு மங்கிய ஊதாநிறம்; ஹீலியம் மின் விளக்கு, தந்தம்போன்ற வெண்மை நிறம்; பாதரச ஆவி நிறைத்த விளக்கு நீலநிறம். இந்த விளக்குக்கள் எல்லாவற்றுக்குமே பொதுவாக நியான் விளக்கு என்றே பெயர் வழங்கும்.

இவ்வளவும் காற்றினால் விளையும் இயற்கை இரசாயனத்தில் ஒரு சிறு பகுதிதான்.

# தான தருமம்

ஏ. கே செட்டியார்

தர்மம் செய்வது நமது நாட்டில் தொன்றுதொட்டு வரும் வழக்கம். நமது முன்னோர் பலனை எதிர்பார்த்துத் தர்மம் செய்யவில்லை. ஒரு சிலர் மறு உலகில் கிடைக்கக்கூடிய பலனை எதிர்பார்த்துத் தர்மம் செய்தார்கள். இவ்வுலகிலேயே கைமேல் பலன் கிடைக்க வேண்டுமென்று யாருமே தர்மம் செய்யவில்லை.

ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. தர்மத்தின் மதிப்பு வரவரக் குறைந்துகொண்டே வருகிறது. சிலர் தர்மம் செய்வதை ஒரு தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்; சிலர் தாங்கள் எண்ணிய எண்ணம் கைகூடுவதற்குத் தர்மம் செய்வதை ஒரு கருவியாக உபயோகிக்கிறார்கள். 'மனோன்மணியம்' ஆசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்கள்.

"தர்மம் தானம் என்றுஉல கறியும்
கர்மம் செய்பவன் கருத்தைக் காணில்
நாணமாம்; அவரவர் தமக்காய்
எண்ணிய எண்ணம் எய்துவான் பலவும்
பண்ணுவர் புண்ணியம் போல எல்லாம்
பாவனை யன்றிப் பிறிதொன் றில்லை"

என்று கூறியுள்ளார். தர்மம் செய்வதாகப் பாவனை செய்பவர்களைக் கண்டு பொது மக்கள் ஏமாறமாட்டார்கள்.

*　*　*　*

சென்னைத் தினசரிகளிலே பார்த்தால் அன்னதான சங்கத்தைப் பற்றிய செய்திகள் வெளிவரும். ஒரு பெரிய மனிதர் நூறு பேர்களுக்கு அன்னமிட்டார் என்று செய்தியில் காணப்படும். ஆனால் தமிழ் நாட்டிலே நூற்றுக் கணக்கான சத்திரங்களிலே தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்களுக்குச் சாப்பாடு போடுகிறார்கள். இதைப் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளில் பார்க்க முடியாது. ஏனென்றால், இம்மாதிரித் தர்மம் செய்பவர்கள், தங்களை விளம்பரப்படுத்திக்கொள்வதில்லை.

* * * *

அமெரிக்காவிலே, காலஞ்சென்ற ராக்பெல்லரைப் பற்றிய ஒரு கதை உண்டு. ராக்பெல்லர், வியாபார விஷயத்தில் செய்த மோசங்களுக்கு அளவேயில்லை; ஆனால் அவரைப் போல, பலனை எதிர்பாராமல் தர்மம் செய்தவர்களும் யாருமில்லை. ராக்பெல்லர் சிகாகோ சர்வகலாசாலைக்கு லட்சக்கணக்கான பணத்தைக் கொடுத்தார். ஆனால், அந்தச் சர்வகலாசாலைக்குள் அவர் இரண்டு முறைக்கு மேல் சென்றதில்லை. சர்வகலாசாலை விவகாரங்களை ஒரு கமிட்டியிடம் விட்டுவிட்டார். தமது ஆயுள் முழுதும் சர்வகலாசாலை விவகாரங்களில் தலையிட்டதே யில்லை. ஒரு முறை சர்வகலாசாலைக் கமிட்டியார், ராக்பெல்லர் செய்த தர்மத்தைப் பராட்டி, சிகாகோ சர்வகலாசாலை என்ற பெயரை ராக்பெல்லர் சர்வகலாசாலை என்று மாற்ற விரும்பினார்கள். அவ்வாறு தீர்மானம் செய்து ராக்பெல்லருக்கும் அனுப்பினார்கள். அதற்கு ராக்பெல்லர், "ராக்பெல்லர் நாளை இறந்துவிடுவான். ஆனால், சிகாகோ என்றும் மறையாது. எனவே, சிகாகோ பேரிலேயே சர்வ சர்வகலாசாலை இருக்க வேண்டும்" என்று பதில் எழுதினாராம்.

* * *

நமது நாட்டிலும் எத்தனையோ பேர் பள்ளிக்கூடம் கட்டு கிறார்கள். பள்ளிக்கூடத்துக் கட்டிடங்களுக்கு அரசாங்கத் தாரிடம் பாதித் தொகையை கிராண்ட் வாங்கி, அதிலேயே கட்டிடத்தைக் கட்ட நினைப்பவர்களும் சிலர். அந்தத் தொகையிலேயே மிச்சம் பிடிக்க நினைப்பவர்களும் இல் லாமலில்லை. இவைகளைப் பார்க்கும்பொழுது, சிலர் தர் மத்தை ஒரு வியாபாரமாகச் செய்து வருகிறார்களோ என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது!

* * * *

கோயில்களுக்கருகிலும், பஸ் ஸ்டாண்டுகளுக்கருகிலும் எப்பொழுதும் பிச்சைக்காரர்களைப் பார்க்கலாம். சில பணக்காரர்கள் அரை ரூபாய் அல்லது ஒரு ரூபாய்க்குத் தம்பிடிகளாக மாற்றிக்கொண்டு, ஒவ்வொரு பிச்சைக்கார ருக்கு ஒரு தம்பிடி வீதம் போடுவதுண்டு. இந்தத் தர்மம் செய்வதிலே அவர்களுக்கு அளவு கடந்த பெருமை. உல கமே தங்களால் தான் உயிர் வாழ்கிறது என்ற மனப் பான்மை. வரிசையாக உட்கார்ந்திருக்கும் நூற்றுக்கணக் கான பிச்சைக்காரர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் தம்பிடி வீதம் கொடுப்பதென்றால் எவ்வளவு கஷ்டமான காரியம்? இதில் தர்மத்தைவிட உடற்பயிற்சிதான் அதிகம்.

* * * *

தர்மம் செய்பவர்களுக்குத் தங்கள் பெயரை விளம்பரப்படுத் திக் கொள்வதில் அதிக விருப்பம் உண்டு. ஒருவர் புதிதாக ஒரு தர்மஸ்தாபனம் செய்து, அதற்குத் தமது பெயரை வைப்பார். சில வருடங்களில் அந்தத் தர்மஸ்தாபனத்துக் குப் பொருளுதவி தேவை யிருக்கும். அப்பொழுது புதி தாக ஒருவர் அந்த தர்மஸ்தாபனத்துக்கு நிறையப் பொருள் கொடுத்து, பழைய பெயரை மாற்றித் தமது பெயரை வைத்துக்கொள்வார். தர்மஸ்தாபனத்தின் பெயர் மாறிக்

கொண்டே யிருந்தாலும், தர்மம் மட்டும் தொடர்ந்து நடந்துகொண்டே யிருக்கும்.

* * * *

சிலர் தாங்கள் செய்யும் தர்மம் என்றும் அழியாதவாறு, தங்கள் பெயரைக் கல்லில் செதுக்கி வைக்கிருர்கள். உதாரணமாகத் திருத்தணி மலையிலுள்ள படிகளைப் பாருங்கள். தமிழர், தெலுங்கர் என்ற வித்தியாசமில்லாமல், சாதாரண மனிதர், திவான்பகதூர் என்ற வித்தியாசமில்லாமல் பலர் தங்கள் பெயர் பிரகாசிக்கத் தர்மம் செய்திருக்கிருர்கள். இந்தப் பெயர்களின்மீது காலை வைத்துத்தான் நாம் மலை ஏறவேண்டியிருக்கிறது. இத்தனை பெயர்களுக்கும் மேலாக மலைமீது முருகன் திருக்கோயில் கொண்டிருக்கிருர்.

* * * *

வியாபாரிகள் விளம்பரத்தை எவ்வளவு முக்கியமாகக் கருதுகிருர்களோ, அதைப் போலவே தர்மம் செய்பவர்களும் விளம்பரத்தை முக்கியமாகக் கருதுகிருர்கள்.

எல்லா வகையான
புத்தகங்களுக்கும்

நவயுகப் பிரசுராலயம்

காரைக்குடி



சிறு தேயிலைச் செடிகள் டார்ஜீலிங் தோட்டத்தில் நடப்படுதல்

# வளருதல்

முதலில் விதைத்து, காக்கப்பட்டு, பூமியிலிருந்து எடுத்து வரப்பட்ட சிறு செடிகள் பெரிய தோட்டங்களில் புது இடத்தில் ஸௌகரியமாய் வளரும்படி நடப்படுகின்றன.

மண்ணுடன் பெயர்த்துவரப்பட்டு இங்கே ஒவ்வொரு செடியும் நாலிலிருந்து ஆறு அடி வரையில் இடைவிட்டு நடப்படுகிறது. இங்கேதான் அவைகள் பூரணமாய் வளரும்.

நாளடைவில் இந்தச் சிறு செடிகள் முதல் கத்தரிப்புக்குத் தயாராகும். இப்படிக் கத்தரிப்பது முதல் இலைகளை எடுப்பதே. அதனால் சமமாகவும் அடர்த்தியாகவும் இலைகள் வளர ஹேதுவாகிறது.

இப்படிக் கத்தரிக்கப்பட்டுப் பின் வளர்ந்த செடிகளை நோக்குங்கால் தோட்டத்தில் பச்சை ரத்ன கம்பளம் விரித்தாற்போன்ற காட்சியைக் காணலாம். இதுவே தேயிலை பறிக்க வேண்டிய காலமாகும்.

ப்ரூக் பாண்ட்

Cover Printed at P. A. S Press, Post Box 349, Mount Road, Madras